# அழியாத முதுசம்





**அமரர் திலகவதி குணரெத்தினம்**

அவர்களின்

**நினைவாக**

**06.05.2024**

உ

சிவமயம்



# அமரர் திலகவதி குணரெத்தினம்

அவர்களின்

சிவப்பதப்பேறு குறித்த

# அழியாத முதுசம்

06.05.2024



# சமர்ப்பணம்

*குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து*
*அன்போடும், பண்போடும், பாசத்தோடும்*
*என்றென்றும் எமக்காக வாழ்ந்து எம்*
*வாழ்வின் உயர்வுக்காய் முயன்றுழைத்து*
*பிள்ளைகளின் வாழ்வே தனது*
*வாழ்வென வாழ்ந்து அன்பையும் பண்பையும்*
*பாசத்தையும் வாரியிறைத்து எங்கள்*
*நெஞ்சகத்தில் கனதியான நினைவுகளைச்*
*சுமக்கச் செய்த எங்கள் அன்புத் தெய்வமே!*
*அம்மா அமரர் திலகவதி குணரெத்தினம்*
*உங்களுக்கு* **அழியாத முதுசம்** *மலரினை*
*இதயக் காணிக்கையாக்கி வணங்கித்*
*துதித்து ஆராதித்து சமர்ப்பிக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**குடும்பத்தினர்.**

# நீங்காத நினைவலைகள்



பிறப்பு
12.03.1935


இறப்பு
06.04.2024

## திருமதி திலகவதி குணரெத்தினம்

### திதி வெண்பா

ஆண்டு சோபகிருது பங்குனி சனிவாரம்
பூண்ட திரயோதசி திதியில் - மாண்புடைய
மாது திலகவதி குணரெத்தினம் கண்டனளே
மாதவச் சிவப் பேறு!

# பஞ்ச புராணம்



பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்
இவை நான்கும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலம் செய்துங்க கரிமுகத்து தூமணியே
நீ எனக்கு சங்க தமிழ் மூன்றும் தா!

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

அபகார நிந்தைபட் ...... டுழலாதே
அறியாத வஞ்சரைக் ...... குறியாதே
உபதேச மந்திரப் ...... பொருளாலே
உனைநானி னைந்தருட் ...... பெறுவேனோ
இபமாமு கன்தனக் ...... கிளையோனே
இமவான்ம டந்தையுத் ...... தமிபாலா
ஜெபமாலை தந்தசற் ...... குருநாதா
திருவாவி னன்குடிப் ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தென்னாடுடைய சிவனே போற்றி பாடல்

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
அண்ணாமலை எம் அண்ணா போற்றி!
கண்ணாரமுதக் கடலே போற்றி!
சீரார்ப்பெருந்துறை நம் தேவனடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!

**அமரர் திலகவதி குணரெத்தினம்**
அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

*நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை*
*என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதாமறையின்*
*ஒன்றும் அரும் பொருளே அருளே உமையே இமயத்து*
*அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே.*

**அபிராமி அந்தாதி**

### ஜனனமும் குழந்தைப் பருவமும்

எங்கள் அன்புத் தாயார் எல்லோராலும் பெரியபிள்ளையென அன்பாக அழைக்கப்பட்ட திலகவதி அவர்கள் ஈழமணித் திருநாட்டின் மருதம் நெய்தல் நிலங்களின் செழுமையை ஒருங்கே இணைந்த வேலணை கிழக்கில் சண்முகம் சின்னம்மா அன்புத் தம்பதிகளின் மூத்த புத்திரியாக 1935 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12ஆம் திகதி (பவ வருடம் மாசி மாதம் 19ம் நாள் திரயோசத மதியில்) இப்பூவுலகில் பிறந்தார். அவர் அவரது பெற்றோர்களின் அரவணைப்பிலும் அவரது குல தெய்வமான அம்மனின் அருளினால் அழகாகவும் ஆரோக்கியமாகவும் வளர்ந்தார். அமரர்களான மகேசு என்று அன்பாக அழைக்கப்பட்ட அன்புச் சகோதரி பரமேஸ்வரி, அன்புச் சகோதரர்களான பாலசுப்பிரமணியம் (பெரியவன்), பரமசிவம் (இராசா) மற்றும் இவர்களுடன் அன்புத் தங்கை லலிதாதேவி (தேவி), ஆருயிர்த் தம்பி நித்தியானந்தன் (துரை) இவர்களுடைய அன்புடனும் தன் இளமைக் காலத்தை இனிதே கழித்தார்.

தனது கல்வியை தனது குடும்ப சூழ்நிலையால் தனது தாயாருக்கு உதவும் முகமாக இடையில் நிறுத்திக் கொண்டார். இருந்த போதிலும் அவர் தன் அறிவு ஞானத்தை நாள் தோறும் தன் வாழ்க்கை அனுபவத்தினால் தானாகவே வளர்த்துக் கொண்டார். அவரது வாழ்க்கையின் அனுபவம் பலரது வாழ்க்கைக்குத் தேவையான அறிவுப் புத்தகம்

என்றே கூறலாம். எந்தத் திருக்குறளும் படிக்காத எங்கள் அம்மா தன் வாழ்க்கையை இவ்வுலகத்தில் வள்ளுவர் கூறியது போல் வாழ்வாங்கு வாழ்ந்து தன் வாழ்வில் நிறைவு கண்டார்.

## திருமண வாழ்க்கை

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது. (குறள்: 45)*

அழகான பெண்குழந்தை; பெரியபிள்ளை அவர்கள் பருவம் அடைந்த பின் அவரது பெற்றோர்கள் செல்வந்தரான கந்தையா சின்னத்தங்கம் அவர்களது ஏக புத்திரரான குணரெத்தினம் அவர்கட்கு ஆவணி நன்நாளில் 1951ஆம் வருடம் திருமணம் செய்ய நிட்சயித் தார்கள். தனது பதினாறு வயதுத் தொடக்கத்தில் திருமணம் புரிந்து தனது இல்லற வாழ்க்கையை இனிதே தொடங்கினார். ஒரே பிள்ளை யான குணரெத்தினம் செல்லமாக வளர்ந்ததினால் குடும்பப் பொறுப்பை பெரிதாக தன் கையில் எடுக்கவில்லை. ஆனால் இவரோ தன் இள வயதிலே இல்வாழ்க்கைக்கு தக்க மாண்புடைய பண்புகள் யாவற்றை யும் இயல்பாகவே கற்றுக் கொண்டார். எந்த இடர் வந்த போதும் அவரது இல்லற வாழ்க்கையை இனிதே நிறைவேற்றினார். தான் மணந்த நாளிருந்து தன் கணவருக்கு பணிவிடை செய்யத் தொடங்கி னார். அவர் தன் குடும்ப வாழ்க்கையில் மிகப் பெரிய பொறுமையும் சகிப்புத்தன்மையும் எனும் பண்புகளைக் கொண்டிருந்தார். அந்தப் பண்புகள் யாவும் அவர்களிடம் இருந்ததினால் அவருக்கு கொடுக்கப்பட்ட எல்லாப் பாத்திரங்களையும் சரி வரச் செய்து அதில் நிறைவு கண்டார். தன்னுடைய கணவரின் தகப்பனார் கந்தையா அவர்களைக் கண்கலங்காமல் கடைசிக் காலம்வரை வைத்து பாரமரித்து அவரது தேவையையும் நிறைவு செய்தார். அவரது பணிகளை அவரது கணவர் இறக்கும் வரை ஒருபோதும் மனம் சலிக்காமல் செய்தார். அம்மா எங்கள் தந்தையாரோடு ஒரு பூமாதேவியாகவே வாழ்ந்து, வாழ்வின் உட்பொருள் கண்டார்.

## மக்கட்பேறு

*எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின். (குறள்: 62)*

இனிதே இல்லற வாழ்க்கை தொடங்கிய அம்மா இலட்சுமி கடாட்சத்துடன் நான்கு பெண்பிள்ளைகள், ஆறு ஆண்பிள்ளைகள் என மொத்தம் பத்து பிள்ளைகளுக்கு தாயானார். 1952ஆம் ஆண்டு

தனது முதற் பெண்குழந்தையைப் பெற்றார். அமரர் சோதிமதி, விஜய லட்சுமி, அமரர் (நாமம் சூட்ட முதலே அமரரானார்) அருட்செல்வன், கதிர்ச்செல்வன், கலாநிதி, ஆனந்தராஜா, விக்கினராஜா, றஞ்சுதமலர், அமரர் குணராஜ் ஆகியோரைப் பெற்று வளர்த்தார். அவரின் தாயார் சின்னம்மா அவர்கள் அவரது குழந்தைகளை வளர்ப்பதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். அம்மாவின் கடின உழைப்பாலும் விடா முயற்சியாலும் பிள்ளைகள் யாவரும் உயரிய நிலையை அடைந்தனர். அம்மாவின ஐந்து பிள்ளைகள் மேற்கத்தேய நாடுகளில் வாழ்கின்றனர். பொறுப்புணர்வுடன் எல்லாப் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்தார். இவர்களது துணைகளாக அமரர் கமலநாதன், அமரர் செல்வரெத்தினம், மற்றும் சத்தியபவானி, மதிவதனி, ஸ்ரீரங்கன், விஜயலதா, தர்மினி, நந்தகுமார் அமைந்தனர். தன்குலம் தழைத் தோங்கும் வகையில் தாம் பெற்ற மக்கட்கு மக்களாக பிறந்த அவரது பேரப்பிள்ளைகள் ராதீவ் (கஸ்ரோ), செந்துஷா (ஆஷா), நவநீதன் (தீபன்), மதுருஷா (மது), அருந்துதன் (அருந்து), அபினன், சுருதி, ஆகாஷ், பிருந்தா, அபிஷன், அபிஷா, அனுஷ்கா, அனோஜா, ஹரிஷ், விகாஷ், அகிலினி, விதுஷி அன்புப் பேரப்பிள்ளைகளாகக் கண்டார். ஜெனிஷா லவன் சோபனா, டனீஷன், பிரெண்டா ஆகியோரையும் அவரது பேரப்பிள்ளைகளின் துணைகளாகக் கண்டார். பேரப்பிள்ளைகளின் பிள்ளைகளான சான்வியா, சாம்ஷி, விஸ்ணு, லிதுரன், ஸர்வின் ஆகியோரைப் பூட்டப்பிள்ளைகளாக காணும் பெறும் பேறு பெற்றார். 2008ஆம் ஆண்டு அவரது கணவர் காலமானதன் பின் அவரது கடைசி மகளான றஞ்சுதமலருடன் அவரது கடைசிக்காலம் வரை வாழ்ந்தார். அவரது கடைசிமகளும் அவரது கணவர் நந்தகுமாரும் குழந்தைகள் அகிலினி, விதுஷி யாவரும் அன்புடனும் பணிவுடனும் எந்தக் குறையும் இன்றி கடைசிவரை அம்மாவுக்கு பணிவிடை செய்தனர். குறிப்பாக அவரது மருமகன் நந்தகுமார் அவரின் ஆரோக்கியத்தில் மிகவும் கவனம் எடுத்து தன் தாயாரைப் போல் கடைசிக் காலம் வரை அவருக்கு பணிவிடை செய்தார். நன்மக்கட் பெற்றதிற்கும் அவர் செய்த புண்ணியத்திற்கும் கிடைத்த பயன் அதுவாகும்.

## அம்மாவின் உயரிய பண்புகள்

*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு. (குறள்: 994)*

அம்மா இளம் பருவத்திலிருந்தே அன்பும் கருணையும் உடையவர். அவரது மனத்தைரியமும் எதையும் தாண்டிவரக் கூடிய தன்னம் பிக்கையும் தன்குடும்ப வாழ்க்கையை செவ்வனே நடத்துவதற்கு உதவின. அம்மா யாரிடமும் கை நீட்டி கடன் வேண்ட மாட்டார். சிக்கனமும் எளிமையும் சேமிக்கும் பழக்கத்தையும் தன் இளவயதிலே கற்றுக் கொண்டார். இன்முகம் காட்டி பிறருக்கு விருந்தோம்பும் பழக்கம் அவரது மிகப் பெரிய உயரிய பண்புகளில் ஒன்றாக இருந்தது. பிறர் மீது அன்பு காட்டுவது அவரின் பிறப்பின் பயனாக கருதியவர். பிறரது பிள்ளைகளை தன்பிள்ளைகளென எண்ணிக் கொண்டார். தன் சகோதரர்களின் பிள்ளைகளுடன் அன்போடும் பரிவோடும் இருந்தவர். அவர் எல்லோருக்கும் செல்லப் பெரியம்மாவாகவும் அத்தையாகவும் வாழ்ந்தார். அத்தோடு தன் சகோதரர்களின் துணைகளோடு அன்புடனும் பாசத்துடனும் இருந்தவர். யாருடனும் உடன் பட்டு எல்லாவற்றிலும் நிதானமாக முடிவெடுத்தார். சூழலுக்கு ஏற்ப நடந்து கொண்டார்.

தன்னைச் சூழ்ந்தவர்களுடனும் உறவினர்களுடனும் எப்போதும் அன்பு பாராட்டினார். இதற்கப்பால் அம்மா எதிலும் சலிப்படைய மாட்டார். அவரின் பெயருக்கு அமைய கடவுள் பக்தி அதிகம் நிறைந்தவர். அவர் கோயில்களுக்குப் போவது, விரதம் இருப்பது எப்போதும் இறைவனுடன் பேசிக்கொண்டே இருப்பது, அவரின் வாழ்க்கையின் அமைதிக்கான வடிகாலாக இருந்தவை. இறுதிவரை தன் குலதெய்வம் அம்மன் மீதும் கோபுரத்தடி வைரவர் மீதும் பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

## அம்மாவின் உழைப்பு

***ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்***
***தாழாது உஞற்று பவர். (குறள்: 620)***

அம்மா ஒரு கடின உழைப்பாளி. அம்மா திருமணம் முடித்த காலத் தில் அவரது கணவர் தனவந்தவராகவும் அதிக நிலச்சொத்துக்களை யும் வைத்திருந்தார். துரதிஷ்டவசமாக காலப்போக்கில் பிறர் அவரது சொத்துக்களையும் வயற்காணிகளையும் அபகரித்தனர். அத்தோடு அவர் தனது சில சொத்துக்களை பிறருக்கு கையளித்தார். வீட்டிற்கு வண்டி வண்டியாக வந்த நெல்லும் மற்ற உணவுப் பொருட்களும் ஒரு கட்டத்தில் நின்றுவிட்டன. இதனால் அம்மா ஏழ்மைக்குத்

தள்ளப்பட்டார். பிறரிடம் எதையும் எதிர்பார்க்காத அம்மா தனது குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்ற காரணத்தினால் தானே உழைக்கத் தொடங்கினார். கைவினைப் பொருட்களைச் செய்யத் தொடங்கினார். அம்மாவின் கடகம், பாய்களுக்கு அக்காலத்தில் நல்ல மதிப்புக் கிடைத்தது. சிலர் நெடுந்தூரத்தில் இருந்து வந்து அம்மா வின் கைவினைப் பொருட்களை வாங்கிச் செல்வார்கள். 1975ஆம் ஆண்டுக்குப் பின் அவரது கணவர் மற்றும் பிள்ளைகளின் உதவியுட னும் தோட்டம் செய்யத் தொடங்கினார். மிளகாய் புகையிலை மரக்கறி எல்லாவற்றையும் அத்தோட்டத்தில் செய்தார். காலத்தினால் மழை பொய்த்து தோட்டத்தில் எதுவும் விளையாவிட்டாலும் அவர் சோர்ந்து விடமாட்டார். எந்த துன்பம் வந்தாலும் துவண்டு விட மாட்டார். ஆடு, மாடு, கோழி வளர்த்தும் மரக்கறிகள் தோட்டத்தில் விளைவித்தும் தன் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தார். அவரது கணவரை பலர் இலகுவாக ஏமாற்றிவிட்டாலும் தன் சாதூரியத்தால் தன் பிள்ளைகளை வறுமையில் இருந்து காப்பாற்றினார். அம்மா இரவு பகல் பாராது அயராது உழைத்தமையினாலும் அவரது தாயார் சகோதரர்களின் துணையுடனும் தன் பிள்ளைகளை உயர்நிலைக்கு கொண்டு வந்தார். அத்தோடு, பொன்னூறி, நொச்சுத்துரல், பத்தேக்கர் போன்ற காணிகளை அம்மா சாதுரியத்தால் வாங்கினார். அவரது உழைப்பு இப்போது சிலருக்கு சிறிதாகத் தெரியலாம். ஆனால் அதில் இருந்த கடினம் அவரோடு கூட இருந்த மகன்கள் அருளுக்கும் ஆனந்தனுக்கும் நன்கு தெரியும். அதனால் தான் உயிருடன் இருக்கும் வரை தன்னுடைய காணிகளை விற்க கூடாது என்றார். அவரது உழைப்பினால் பொன்னும் பொருளும் சேர்த்து தன்னுடைய மூத்த இருமகள்களுக்கும் திருமணம் செய்தார். அம்மாவின் உழைப்பு அவரது பிள்ளைகள் இன்று வளமுடனும் கல்வி ஞானத்துடனும் வாழக் காரணமாக அமைந்தது. எந்த நிலையிலும் தான் செய்ய வேண்டிய செயல்கள் யாவும் முறைப்படி செய்து முடித்தார். அவரது விடாமுயற்சியும் அயராத உழைப்பும் எல்லோருக்கும் மிகப் பெரிய முன்னுதாரணமாகும்.

## அம்மாவின் இழப்புக்கள்

*ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா*
*நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்*
*எமக்கென்னென் றிட்டுண் டிரும். - நல்வழி: 10*

அம்மா தனது சிறுவயதில் தன் தந்தையாரை இழந்துவிட்டார். இதன்பின் தான் பெற்ற ஆண் குழந்தை ஒன்று 1956ஆம் ஆண்டில் பெற்ற கணத்திலே பறிகொடுத்தார். அப்போது அவர் மனம் வெந்து போனது. அவரின் அருமைத் தம்பி இராசா என்றழைக்கப்பட்ட பரமசிவத்தை 1974 இல் இழந்தார். அவரின் கொடிய மரணம் அம்மாவை மிகவும் பாதித்தது. அதன் பின் தன் தாயார் சின்னம்மாவை 1988 இல் இழந்துவிட்டார். அம்மாச்சி என்று செல்லமாக அழைக்கப் பட்ட அவரது தாயார் அம்மாவிற்கு எப்போதும் துணையாக இருந்த வர். அதன்பின் அவரது கடைசி மகன் குணராஜ் ஈழப்போரில் 29ஆம் நாள் புரட்டாசி 1993ஆம் ஆண்டு புலோப்பளையில் (இயக்கச்சி) நடந்த சண்டையில் கொல்லப்பட்டார். தன் தனையனை இழந்த தாயின் வருத்தம் அவரின் உள்ளே இருந்துகொண்டே இருந்தது. தன்னுடைய பிள்ளை அநியாயமாகக் கொல்லப்பட்டார் என்ற ஆதங்கமும் வருத்தமும் அவருக்குள் ஆறாமல் இருந்தது. பின் அவரது முதற்குழந்தை சோதிமதியை 17ஆம் நாள் ஆவணி மாதம் 2006ஆம் ஆண்டில் இழந்தார். தன் பிள்ளைகளின் இறப்பைக் காணும் தாயின் உள்ளம் வேதனையை பல தடவை அனுபவித்துவிட்டது. தன்னோடு எப்பவும் அருமைத் தங்கையாகவும் தோழியாகவும் இருந்த அவரது அன்புத் தங்கை பரமேஸ்வரியை (மகேஸ்) 28ம் நாள் ஆவணி மாதம் 2006 ஆம் ஆண்டு இழந்ததினால் ஆறாத் துயரம் அடைந்திருந்தார். பின்னர் பதினான்காம் நாள் வைகாசி 2008 ஆம் ஆண்டு 59 ஆண்டுகள் கூடவே வாழ்ந்த கணவரையும் பறிகொடுத்தார். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற தத்துவத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு இல்லறம் நடாத்திய மகராசி தன் துணையிழந்த வேதனையை மௌனமாய் அழுது தீர்த்தார். கடைசியில் அவரது அன்புத் தம்பி பாலசுப்பிரமணியத்தை 9ஆம் நாள் ஐப்பசி 2023 இல் இழந்தபோது அவரைத் தொடர்ந்து தானும் போகத் தயாராகி விட்டார். இதைவிட தான் பெற்ற பிள்ளைகள் ஐந்து பேர் தன்னை பிரிந்து கடல் கடந்து வாழ்கிறார்கள் என்ற பிரிவுத் துயரமும் அவருள்ளே நிலையாகப் படிந்திருந்தது.

**அம்மாவின் மறைவு**

*குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே*
*உடம்பொடு உயிரிடை நட்பு. (குறள்: 338)*

அம்மா தனது கடைசி நாட்களில் கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரின் புத்திநிலை சற்று குழப்பத்திற்குள்ளாகிவிட்டது. முதுமை அவர் உடலையும் உயிரையும் வதைக்கத் தொடங்கியது. அவர் திரும்பவும் குழந்தைத் தனத்தை அடைந்தார். அவரது பேச்சுக்களினூடாக அவர் தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்துக் கொண்டாரோ என்று எண்ணத் தோன்றியது. தன் வாழ்க்கை முழுவதும் துணிச்சலாக வாழ்ந்தவர் காரணம் தெரியாமல் கடைசிக்காலத்தில் பயம் என்ற உணர்வுக்குள் தள்ளப்பட்டார். தன் பிள்ளைகளைப் பற்றிய தேடல்கள் அவருக்குள் அதிகமாக இருந்திருக்க வேண்டும். அவர் உள் மனதில் தன்பிள்ளைகள் மீது அதிக அன்பும் பாசமும் கொண்டிருந்தார் என்பது அவரின் கடைசிக்கால பேச்சுக் களில் இருந்து தெரியவந்தது.

அம்மா சித்திரை மாதம் ஆறாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 9.15 மணியளவில் (சோபகிருது பங்குனி இருபத்திநான்காம் நாள் திதி திரயோதசி சனிப் பிரதோஷத்தில்) இறைபதம் அடைந்தார். எங்கள் அம்மாவின் வலிமையினாலும் அவரது ஆத்ம பலத்தினாலும் தான் பெற்ற பிள்ளைகள் அத்தனை பேரையும் தன் அருகே அழைத்தார். தன் பிள்ளைகளின் வரவிற்காக கடைசிவரை காலனுடன் போராடிய படியே காத்திருந்தார். அவரது அன்புப் பிள்ளைகள் ஏழுடனும் உடன்பிறந்தவர்கள் இருவரின் அன்புடனும் அரவணைப்புடனும் தன் உயிர் நீத்தார். அவரது கடைசி விருப்பம் யாருக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தாரோ அவர்கள் யாவருடனும் இருந்தபடியே தான் இவ்வுலக வாழ்வை நீக்க வேண்டும் என்பதே ஆகும். மீண்டும் ஒருமுறை தான் பிறவி எடுக்கமாட்டார் என்று அவர் எண்ணினாரோ என்னவோ தெரியவில்லை. அவர் செய்த புண்ணியம் இறைவன் அவரின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். இப்பூமியில் எல்லாக் கர்மவினைகளையும் நிறைவேற்றி மூன்று தலைமுறை கண்டு தனது எண்பத்தொன்பதாவது வயதில் சிவனடியே சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்ற கூற்றுக்கிணங்க இறைவன் திருவடி சேர்ந்தார்.

**ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்**
**பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு**
**கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை**
**எப்பிறப்பில் காண்பேன் இனி.**

*நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை*
*தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்*
*கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ*
*மெய்யிலே தீமூட்டு வேன்!*

*வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்*
*கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்*
*சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ*
*விறகிலிட்டுத் தீமூட்டு வேன்*

*வீற்றிருந்தாள் அன்னை வீதி தனித்திருந்தாள்*
*நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பால்தெளிக்க*
*எல்லோரும் வாருங்கள் ஏதென்ற இரங்காமல்*
*எல்லாம் சிவமயமே யாம்.*

*பட்டினத்தார் பாடல்*

*துறவி பட்டினத்தார் தன் தாயின் மரணத்தைக் கண்டு போய் நெஞ்சம் உருகி நின்றார். அப்படியாயின், சாதாரண மாந்தர் நாம் எம் தாயின் மரணத்தின் வலியை எப்படி உரைப்போம். காலம் ஞாலப் பெரிதெனில் ஆற்றுமே எம் ஆறாத்துயரை!*

*தென்நாடுடைய சிவனே போற்றி!*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!*
*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

# என் பாசமிகு அம்மா!

பெரியவள் சோதி. சின்னவள் சின்னத்தங்கச்சி. அம்மா எனக்கு அழகாக இலட்சுமிகளின் பெயர்களில் ஒன்றான விஜயலட்சுமி என்று பெயர் வைத்தார். ஆனால் ஒரு போதும் அப்பெயர் சொல்லி என்னை அழைத்ததில்லை. நீங்கள் எப்போதும் என்னை சின்னவள் அல்லது தங்கச்சி என்று செல்லமாக அழைத்தீர்கள். என்னை தங்கச்சி என்று அழைக்கும் போதெல்லாம் அதில் உங்களது உயிர்ப்பான பாசம் கலந்திருக்கும். நான் அதிர்ஷ்டசாலி. என்னம்மாவின் அன்பில் இத்தனை காலம் வாழ்ந்துவிட்டேன். இது எல்லோருக்கும் கிடைக் காது. அது இறைவன் தந்த பெரிய வரமாக இப்போது எனக்குத் தெரிகின்றது. அம்மா நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது உங் களுக்கு பணிவிடை செய்ததைப் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். கடவுள் தாய் வடிவில் இருப்பது நமக்கு புரிவதில்லை. தாயின் பாசத்திற்கு விலை எதுவும் இல்லை. அதில் குறையொன்றும் இல்லை.

அம்மா நீங்கள் என் காலடி சத்தம் கேட்டதும் என்னைக் கண்ட சந்தோசத்தில் பரவசம் கொள்வீர்கள். தாயின் உணர்வு தன் பிள்ளைக்கு பசி தீர்ப்பதில் இருந்து ஒருபோதும் விடுபடாத ஒன்று. என்னைக் கண்டவுடன் நீங்கள் முதல் கேட்பது சாப்பிடு என்றே. அந்தப் பாசத்தை இனியொருபோதும் நான் என்வாழ்வில் காணப் போவ தில்லை. ஒன்று இருக்கின்ற போது அதன் பயன் நமக்கு தெரிவதில்லை. அதுயில்லையேல் அதற்காய் ஏங்கி நிற்போம். அம்மா நீங்கள் நம்முடன் இனி யில்லை என்பதை ஒப்புக்கொள்வதற்கு முடியவில்லை.

அம்மா நீங்கள் தேடித்தந்த நல்வாழ்வினால்தான் எனக்கும் ஒரு சந்ததி உருவானது. என் பிள்ளைகள் மீதும் என் பேரப்பிள்ளைகள் மீதும் அளவற்ற அன்பு கொண்டிருந்தீர்கள். அந்த அன்பின் உணர் வைச் சொல்ல என்னிடம் மொழியில்லை. அம்மா உங்களால் இயன்ற எல்லாவற்றையும் எனக்கு தந்தீர்கள். அம்மா உங்கள் புத்திசாலித்தனம் என்னிடம் இல்லை என்று ஏங்குகின்றேன்.

காலம் கடந்த புரிதல் வேதனைக்குரியது. என் வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் பங்கெடுத்தீர்கள். இருப்பதை விட்டு இல்லாததிற்கு ஏங்கும் மனித மனம். அம்மா என்ற பெரியவிருட்சம் இருக்கும் போது அதன் நிழலின் அருமை தெரியவில்லை. அவர் இல்லாத போது அந்த விருட்சத்தின் வேர்களை நாங்கள் தேடுகின்றோம்.

அம்மா உங்கள் மரணம் எனக்கு சொல்லிய பாடம் இறக்கும் போது எதுவும் எம்முடன் வருவதில்லை. ஆனால் நாங்கள் எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம். உங்களை இழந்த சோகமும் வெறுமையும் என்னை வாட்டுகின்றது. நான் உங்களுக்கு செய்யும் நன்றி மூத்தவளாக இருந்து எங்கள் குடும்பம் என்ற உறவை வலுப் படுத்துவதே.

என்னை விட்டுப்பிரிந்த என்னம்மா உங்களை நான் எப்பிறப்பில் காண்பேனோ!. நீங்கள் இறைவனின் ஒளியில் இருக்க நான் இறை வனை வேண்டுகின்றேன். சாந்தி! சாந்தி! சாந்தி!

**உங்கள் அன்பு மகள்**
**சின்னவள் வியஜலட்சுமி.**

---

# பாசமுள்ள என் அம்மா!

*அம்மாவாய் ஊர் போற்ற வாழ்வளித்த என்தெய்வமே!*
*யாருமற்ற நிலைவிட்டு எங்கு சென்றீர்கள் என்தாயே!*
*கணப்பொழுதில் காலன் உனைக் கவர்ந்து சென்றானே*
*நீயோ விதிதனை வெல்லமுடியாதென சொல்லிச் சென்றாய்.*

*என் நிலைதனை யாரிடத்தில் எடுத்துரைப்பேன் இங்கு*
*உன்னிழப்பை யார்தான் தேற்றிடமுடியும் அம்மா இவ்வுலகில்?*
*என்னுள்ளம் காண நீயும் இங்கில்லை என்தாயே!*
*வெதும்பி நின்றேனே உனை இழந்த நானும்.*

*எனை ஈன்ற என்தாயே வேண்டினேன் இறைவனை*
*பிறப்புண்டேல் மீண்டும் ஒருமுறை உன்மகனாய் நான்பிறக்க*
*நீயோ வேண்டாம்பிறவி எனக்கொருமுறை இவ்வுலகில் என்றே*
*இறைவனின் காலடியில் என்றுமிருக்க கேட்டாயே வரம்!*

*என் அன்புத்தாயின் ஆத்மா சாந்தியடைய இறைவனை*
*வேண்டுகின்றேன்.*
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

**அம்மாவின் அன்பு மகன் - அருள்**
சுவிட்சர்லாந்து.

# எங்கள் பாசமிகு அம்மா!

பத்துமாதம் உங்கள் கருவறையில் என்னைச் சுமந்து பெற்றெடுத்த எங்கள் அம்மா இப்போது எங்களோடு இங்கில்லை. பாசத்தோடு சீராட்டி என்னை வளர்த்தாய். வளர்த்துவிட்டது மட்டுமன்றி எனக் காய் ஒரு வாழ்க்கையையும் தேடித் தந்தாய். நான் உங்களைப் பிரிந்து ஆண்டுகள் பல கடந்துவிட்டன. பல ஆண்டுகளுக்குப் பின் நாங்கள் உங்களைப் பார்க்க வந்தோம். நீங்கள் முதுமை அடைந்துவிட்டீர்கள் என்று எங்களால் நம்பமுடியவில்லை.

ஆனால் நீங்களோ எங்களை கண்ட ஆனந்தத்தில் பரவசம் அடைந்தீர்கள். இன்னும் எங்களை குழந்தைகளாகப் பார்க்கும் அன்புகண்டு வியந்தோம். நீங்கள் உங்கள் கையால் ஊட்டிய ஒருபிடி சோற்றின் சுவையை எப்படி மறப்பேன் அம்மா. நீங்கள் தந்த புட்டும் மாம்பழத்தின் சுவைதனை இனியொரு போதும் பெறப்போவ தில்லை.

அம்மா உங்கள் நிலையறிந்து எல்லோரும் ஓடிவந்தோம். எங்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து வைத்து உங்கள் ஆசை நிறைவேறி யதும் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டீர்கள். நாங்கள் அம்மாவிற்கு செய்யும் நன்றி என்பது அவர் விரும்பியபடியே எல்லோரும் ஒற்றுமையாக இருப்பது தான். உங்கள் கபடமற்ற அன்பின் வலிமை கண்டு நாம் பூரிப்பு அடைகின்றோம். உங்களை கடந்தமுறை பார்த்தபோது பழைய நினைவுகள் யாவற்றையும் நினைவூட்டினீர்கள். எங்களுக்கு திருமணம் செய்து நல்ல வாழ்க்கையை அமைத்துத் தந்த எங்கள் அம்மாவை நாங்கள் ஒருபோதும் மறவோம்.

***கண்ணியது உன்புகழ் கற்பது***
***உன் நாமம் கசிந்து பத்தி***
***பண்ணியது உன் இரு பாதாம்***
***புயத்தில் பகல் இரவா***
***நண்ணியது உன்னை நயந்தோர்***
***அவையத்து நான் முன் செய்த***
***புண்ணியம் ஏது என் அம்மே புவி***
***ஏழையும் பூத்தவளே!*** ***- அபிராமி அந்தாதி***

உங்கள் ஆத்மா சாந்தி பெற எங்கள் குலதெய்வமான அம்மனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**அன்பு மகன் செல்வன் மருமகள் சுரேஸ்**
**மற்றும் பேரப்பிள்ளைகள் ஸ்ருதி ஆகாஷ்,** ஜேர்மனி

---

# ஓம் சாந்தி!
# அன்பே ஆனாய் அம்மா! உங்கள் நினைவுகள் மட்டும் என்னில்!

இயற்கையுடன் காற்றாய் கலந்த என் தாயே! நீங்கள் தந்த உயிர் கொண்டு நான் இன்னும் இவ்வுலகில் வாழ்கின்றேன். அழிந்தது உங்களது உடல் மட்டுமே. ஆனால் உங்களது உயிர்க்காற்று அன்பாகி என்னுள் வாழ்கின்றது!

அம்மா உடல் வருத்தி உயிர் கலந்து தன் வயிற்றில் பத்துயிர்களைப் படைத்தார். அவர் படைத்த பத்தில் மூன்று இயற்கையைச் சேர்ந்தனர். எஞ்சிய ஏழில் நானும் ஒருத்தி. எனக்கு உருவமும் உயிரும் கொடுத்து முதல் அன்பும் வாழ்வும் தந்த என் தாயே! உங்களை நினைந்து மனமுவர்க்கிறேன்.

எமைப்பெற்ற தாயே! எங்கள் வாழ்க்கைக்கான அடித்தளம் நீங்கள் தானே!

அம்மா அறியா சிறுவயதில் திருமணம் செய்திருந்தார். அம்மாவின் குடும்ப வாழ்க்கை அவரது இளவயதில் கரடு முரடாய் கடினமாக அமைந்திருந்தது. பரம்பரை செல்வம் தொலைந்து போய் அம்மாவின் வாழ்வை வறுமை கொடுமைப்படுத்தியது. அதையே அம்மா தன் வாழ்க்கையாக ஏற்றுக் கொண்டார். அம்மா வேறுவழியின்றி தான் பெற்ற பிள்ளைகளுக்காக தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார். இதற்கு அப்பால் தன்முன்னே தன்பிள்ளைகள் மற்றும் தன் கணவர் மரணம் கண்டும் ஆறாத் துயரம் அடைந்திருந்தார். அவரின் இறுதிக்காலத் தில் புத்தி பித்த நிலை கண்ட போது அவர் கூறியவைகள் வெறும் புலம்பல்கள் அல்ல. அவை யாவும் அவர் வாழ்க்கையில் பட்டுணர்ந்த

அவரது இளமையில் ஆழ்மனதில் பதிந்த அழியாக் காயத்தின் கொடிய வடுக்களும் வலிகளும் மட்டுமே.

இத்தனைக்கும் அப்பால் அம்மா இயற்கையாக நற்குணம் உடைய வர். அம்மாவின் நற்குணங்கள்தான் எங்களை சிறுவயதில் நல்வழிப் படுத்தின. அம்மாவின் பொறுமை, விட்டுக்கொடுக்கும் தன்மை, சிக்கனம், மனப்பக்குவம், சேமிப்பு, கடவுள் பக்தி, எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை -இவையாவும் சேர்ந்துதான் எங்கள் அடிப் படை வாழ்வின் தேவையைப் பூர்த்தி செய்தது.

எங்கள் அம்மா ஒரு கடின உழைப்பாளி. தன் நேரத்தை சரியாகப் பயன்படுத்துவார். அவர் விடிவெள்ளி உதிப்பதை பார்த்து காலையில் துயிலெழும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். அப்போது சூரிய உதயத்தின் பின் அம்மா தூங்குவதில்லை. சோம்பேறித்தனத்திற்கு அவர் இடமளிக்க மாட்டார். மண், பனை, ஓலை, விறகு, புல், பூண்டு, வைக்கோல், தோட்டம், மாடு, ஆடு, கோழி - இப்படி எல்லாவற்றிலும் தன் உழைப்பைச் செய்து எங்களை வறுமையில் இருந்து காப்பாற்றி னார். அம்மாவின் மனத்தைரியமும் சகிப்புத் தன்மையையும்தான் அவரின் வாழ்க்கைக்கு மூலதனமாக இருந்தன. கடும் வெயிலில் தன் சேலை தலைப்பை தலையில் போட்டும் கொட்டும் மழையில் சொக் கப் பையை தலையில் போட்டும் அம்மா வேலை செய்தார். தன் உழைப்பால் உடல் வலிமை பெற்றிருந்தார். அது மட்டுமல்ல அம்மா கருணை கொண்ட உள்ளம் உடையவர். அவர் ஈகையும் கொடைக் குணமும் பிறருக்கு உதவும் பண்பையும் கொண்டிருந்தார். ஏழ்மை யிலும் தன்னிடம் உள்ள உணவுப் பண்டங்களை பிறருக்கு பகிர்ந்து கொடுத்தார். அம்மாவின் கருணை கொண்ட உள்ளம் தான் எங்கள் தந்தைக்கு கடைசிவரை மனம் சலிக்காமல் பணிவிடை செய்ய வைத்தது.

எது நடந்ததோ இல்லையோ அம்மா தன் இல்லற வாழ்க்கைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். நான் தெரிந்தோ தெரியாமலோ அம்மாவின் சில பழக்கவழக்கங்களை என்னுள் உள் வாங்கினேன். அதிகாலையில் நேரத்துடன் எழும் பழக்கம் என் அம் மாவில் இருந்தே எனக்கு வந்தது. கடின உழைப்பும் மனத்தைரியமும் அம்மாவிடம் இருந்துதான் நான் பெற்றுக்கொண்டேன்.

துரதிஷ்டமாக காலம் என் கணக்கில் மனவலியை மிகையாக்கி எழுதி வைத்தது. நான் அம்மாவுடன் வாழ்ந்தது என் வாழ்நாளில் சிறு காலம் மட்டுமே. நான் என் இளவயதில் என் தாயைப் பிரிந்தேன்.

அம்மாவைப் பிரிந்து பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. எப்போது என் தாயையும் என் மண்ணையும் விட்டுப் பிரிந்தேனோ அன்றே என் வாழ்வின் உயிர்ப்பான பெரும் பக்கங்களைத் தொலைத்து விட் டேன். இது தான் நிதர்சனமான உண்மை. என்னிடம் எதுவுமில்லாத போது எதிர்பார்ப்புக்கள் என்னை வஞ்சித்தன. நிபந்தனைகள் கட்டாயங்கள் எல்லாம் சேர்ந்து என்னை இயந்திரமாக்கியது. நான் உயிரற்ற இயந்திரமாய் ஓடத் தொடங்கினேன்.

என் இளமை வாழ்க்கையை வறுமை கொடுமைப்படுத்தியது. இருப்பினும் வறுமையிலும் அம்மாவுடன் வாழ்ந்த வாழ்க்கை இனிமையானது. அம்மா இரவின் நிலவில் இருந்து ஓலை வார்ந்து கடகம், பாய் இழைப்பார். நான் அப்போது அம்மாவுடன் முற்றத்தி லிருந்து விளையாடுவேன். அந்த நிலவின் குளிர்மையும் அழகையும் அதன்பின் இதுவரை நான் கண்டதில்லை.

அம்மா இழைத்த வண்ணப் பாய்கள் எங்களுக்கு மெத்தைகள். அவைகள்தான் நாமுறங்கிய வண்ணக் கட்டில்கள். ஓலைக் குடிசையில் மழைத் தூவானம் அடிக்க அந்தப் பாயில் அம்மாவுடன் தூங்குவேன். அந்த விலையற்ற ஆழ்ந்த தூக்கத்தை இப்போது இரவில் தூங்க முடியாமல் தவிக்கும் போது நான் தேடுவேன்.

மழைக்காலத்தில் ஈரவிறகில் புகையூதி சமைத்து தந்த சுடுசோறும் அம்மாவின் பழஞ்சோற்றுக் குழையலும் உழுந்துக் கஞ்சியின் சுவை யையும் நான் அம்மாவைப் பிரிந்த பின் ஒருபோதும் சுவைத்ததில்லை. அம்மா காலையில் எழுந்து பால் கறக்கும் சத்தமும், அப்பமா ஊற்றும் சத்தத்தின் இனிமையும், மத்தால் தயிர் கடையும் போது எழும் ஓசையும் இன்னும் என் காதுகளில் ஒலிக்கின்றன. அம்மா காததூரம் நடந்து குடத்தில் குடிநீர் எடுத்து வந்து எங்கள் தாகம் தீர்த்தார். அம்மா தந்த அந்தத் தண்ணீரின் சுவையை இதுவரை எந்த ஆற்றுத் தண்ணீரும் எனக்குத் தந்ததில்லை. எங்கள் அம்மா கடகத்தில் முட்டைகள் வைத்து கோழி அடைவைத்தார். முட்டைகளில் இருந்து குஞ்சுகள் உயிர்ப்பதை நான் பார்ப்பேன். அந்த மஞ்சள் குஞ்சுகள் எனக்கு தந்த மென்மையான உணர்வுகள் இனி ஒருபோதும் எனக்கு கிடைக்கப்போவதில்லை. தீய சக்திகள் என்னைச் சூழ்ந்தன என்றெண்ணி வேப்பிலையில் மிளகாயும் உப்பும் இட்டு என்மீது தடவி தீயில் எரித்தார். இவற்றுக்கப்பால் அம்மா ஏற்றிய மண்ணெண் ணெய் விளக்கின் ஒளியில் நான் கல்வி கற்றேன். அதுதான் என் சுதந்திரத்தை நிலைநாட்டியது. அம்மா கற்றுத் தந்த அந்த எளிமை

யான வாழ்க்கையை நான் ஒருபோதும் தொலைத்துவிடவில்லை. அப்போது எம்மிடம் எதுவும் இல்லை ஆனால் வாழ்க்கை இருந்தது. இப்போது எல்லாம் இருந்தும் வாழ்க்கை வெறுமை கொண்டுள்ளது.

காலமும் தூரமும் நிரப்பமுடியா இடைவெளி நம்மிருவருக்கும் இடையே கொண்டு வந்தது. அம்மாவிடம் நான் வேண்டியதெல்லாம் அன்பு மட்டுமே. வேறொன்றும் இல்லை. எந்தப் பொருளையோ பொன்னையோ இன்றுவரை அம்மாவிடம் நான் கேட்டதில்லை. அது அம்மாவிற்கு நன்கு தெரியும். இல்லாத உறவிற்கு ஏங்கியது என்னுள்ளம். நான் அம்மாவின் பிள்ளை என்ற உரிமை நிலையை இழந்துவிட்டேன் என்று எண்ணினேன். நான் ஓர் அநாதை என்ற உணர்வினால் நொந்து நொடிந்து போய் நான் என்வாரம் ஒதுங்கிக் கொண்டேன்.

நான் கடைசியாக அம்மாவை 2019ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் கண்டபோது எங்கள் உறவு சுதந்திரத்தை தொலைத்து நின்றது. அம்மா சுக நிலையில் இருந்தபோது அந்த சந்திப்புத்தான் எங்களது கடைசி சந்திப்பு என்று எண்ணினேன். இனி நான் உங்களிடம் வரமாட்டேன் என்று கூறி விடைபெற்றேன். அது அம்மாவின் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது. அவரின் புத்தி பித்தநிலை கண்டபோது அம்மா நான் அன்று கூறியதை திருப்பிக் கூறியுள்ளார். என் ஏக்கம் அம்மாவிற்கு தெரிந்திருக்குமோ என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது.

காலம் அம்மாவின் உயிரைக் கைது செய்து காலனிடம் ஒப் படைக்க காத்திருந்தது. அந்நேரத்தில் கூட அம்மாவை சென்று பார்ப் பதற்கான எந்த தீர்மானமும் என்னிடம் இருக்கவில்லை. மீண்டும் என் மனதை துன்பத்திற்குள்ளாக்க விரும்பவில்லை. எனக்கு எதையும் தாங்கும் மன உறுதி அற்றுப் போய்விட்டது. நடப்பதை ஏற்றுக்கொள் என்ற மனத்துடன் இருந்தேன். என்ன நடந்ததோ தெரியவில்லை. திடீரென என் மனதில் அம்மாவிடம் போய் ஆகவேண்டும் என்ற உணர்வு தோன்றியது. என் ஜனனத்தின் வேரை எண்ணினேனோ என்னவோ தெரியவில்லை. அப்போது அம்மா எங்கள் வரவிற்காய் காலனை காக்க வைத்திருந்தார். அம்மாவின் ஆத்ம பலம் கண்டு நான் வியந்தேன். அம்மாவுடன் இருந்த அந்தக் கடைசி இரண்டு நாட்களின் நிகழ்வுகள் என்னுடைய இறுதி வாழ்க்கை வரை என் மனதில் நிலைத்து நிற்கும்.

அம்மா மரணப்படுக்கையில் படுத்திருந்தார். அவர் காலடியில் காலன் காத்திருந்தான். விழிகள் ஒளி இழந்து போயின. செவிகள் ஒலி உள்வாங்க மறுத்துவிட்டன. மரணத்தின் வலியால் அம்மாவின் உடல் துடித்தது. உள்ளுணர்வுகள் சொல்ல அவரிடம் வாய்மொழி இருக்க வில்லை. இருப்பினும் அம்மாவின் ஆத்மா எனைக் கண்டுகொண்டது. என் கரங்களை இறுக்கிப் பிடித்து என் நாமம் சொல்லி தன் காய்ந்த கண்களில் இருந்து கண்ணீர் துளி சிந்தினார். உங்கள் ஆத்மாவில் இருந்த அன்பை எனக்கு சொல்லிச் சென்ற என் தாயே! உங்கள் கண் களில் உதிர்ந்த அந்தக் கண்ணீர் துளியில் நான் மீண்டும் உயிர் தரித் தேன்! என் வீண் கர்வத்தை விட்டு விடு என்று பல முறை என்னிடம் கேட்டாய் அம்மா. உங்களது கடைசி அன்பினால் என் கர்வத்தை நீக்கினீர்கள். உங்களுக்காய் தர என்னிடம் ஒன்றும் இருக்கவில்லை. உங்கள் தலையை மட்டும் என் விரல் கொண்டு கோதினேன்.

மரணத்தின் வலியில் நீங்கள் துடிதுடித்ததை கண்டு வருந்தினேன். உடல் உயிரை வருத்தின் அதன்பின் உடல் உயிரை சுமப்பின் துன்பமே! பாலூட்டிய தாய்க்கு வாயில் பால் வார்த்தோம். உங்கள் உயிர் பிரிவில் என் தொப்புள் கொடி வயிற்றில் வலி கண்டேன். உங்கள் உயிரின் இறுதி மூச்சு காற்றிலே கலந்தது. நான் தேடினேன் உங்களை காற்றிலே. இயற்கை என்னைப் பார்த்து ஏளனம் செய்தது.

அம்மா உங்கள் நோய்கண்ட உடல் நீக்கி ஆத்ம சந்தோஷத்தை யும் நிரந்தர அமைதியையும் பெற்றுள்ளீர்கள். அதற்கப்பால் நாம் புலம்புவது நாமே நமக்கு செய்யும் சமாதானம் மட்டுமே. உங்கள் மரணத்தில் உறவுகளும் கூடிப் பிரிந்தன. வெறுமை எனை மீண்டும் ஆட்கொண்டது. என் இருப்பிடம் தேடி நான் மீண்டும் வந்தேன்.

காலையில் உதிக்கும் சூரியனின் ஒளிக்கீற்றிலும் அர்த்தயாமத்தில் விண்மீன்கள் மின்னி மறையும் ஒளியிலும் இயற்கை தரும் அமைதியிலும் நான் உங்களை உணர்வேன் தாயே!

எம்மை ஈன்றெடுத்த தாயே! அன்பின் உருவேயான எங்கள் அம்மா! உங்கள் ஆத்மா இறைவனின் அன்பில் சாந்தி பெறுக!

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் -**
**தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்: 50)**

ஓம் சாந்தி!

**அன்பு மகள் கலா**
அவுஸ்திரேலியா.

# எங்கள் இனிய அம்மா

எங்கள் அம்மா என் இளையவயதில் என்னோடு எந்நேரமும் இருப்பார். அம்மாவிடம் நான் கற்ற பாடங்கள் அநேகம். அதில் நான் அம்மாவிடம் பெரிதாகப் பார்ப்பது அவரின் பொறுமைதான். என்னுடன் என்னம்மா தோட்ட வேலைகள் செய்தார். இரவு பகல் பாராது வேலை செய்தவர். காலையில் எழுந்து மிளகாய், புகையிலை கன்றிற்கு தண்ணீர் ஊற்றுவது, புகையிலை போறணையில் உணர்த்து வது, பசளை போடுவது, தண்ணீர் இறைப்பது, புல்லுப் பிடுங்குவது இவையெல்லாவற்றிலும் என் அம்மா பங்கெடுத்துக் கொள்வார். நான் இரவில் தண்ணீர் இறைத்தால் அரிக்கன் இலாம்பு விளக்குடன் அம்மா காத்திருப்பார். எங்கள் தோட்டத்தில் பிறரோடு மிளகாய் பிடுங்குவார். அதனை நான் அள்ளிக் கொண்டுபோய் காயவிடுவேன். இரவில் அம்மாவோடு இருந்து மிளகாய் தெரிந்தெடுப்பது ஒரு தனிக்கலை.

மிளகாய் வெட்கையும் புகையிலையின் புகை நாற்றத்திலும் நாங்கள் வேலை செய்வோம். அம்மாவிற்கு வாழைக்குலை வெட்டி புகைபோட்டுக் கொடுப்பேன். பாத்தியில் பனங்கிழங்கு பிடுங்கி கொடுப்பேன். எங்கள் அம்மா தோட்டவேலை செய்பவர்களுக்கும் நாங்கள் சாப்பிடுகின்ற சாப்பாட்டைத்தான் கொடுப்பார். நாங்கள் வெய்யிலில் களைத்துவிட்டோம் என்றறிந்து வத்தகப் பழம் வெட்டிக் கொண்டு வந்து தருவார். யாரிடமும் பாகுபாடு காட்டத் தெரியாத அம்மா எல்லோரையும் மதித்து நடந்தார்.

எனக்கு பசி வந்தபோதெல்லாம் என் பசியறிந்து அம்மா சாப்பாடு போடுவார். அம்மாவின் ஒடியல் கூழ், ஒடியல் புட்டு, மீன்கறி, தோசை அப்பம் எல்லாம் எனக்குப் பிடிக்கும். இவையாவும் அம்மா எனக்கு தன் அன்போடு சேர்த்து தந்தவர். நான் அம்மாவுடன் வாழ்ந்த அந்த பசுமையான வாழ்க்கை என்றுமே மறக்க முடியாதது.

எங்கள் பெற்றோர்கள் எங்களுக்கு 27ஆம் திகதி தை மாதம் 2002ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார்கள். எமக்கென்று இனிய வாழ்க்கையை அமைத்து தந்த எங்கள் அம்மாவிற்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். நாங்கள் எப்போதும் தொலைபேசியில் அவருடன் கதைத்தாலும் சாப்பிட்டீங்களா என்றே எங்களை குழந்தைகள் என்றே எண்ணிக் கேட்பார். அதுதான் எங்கள் தாய்.

எங்கள் பிள்ளைகள் சில நாட்கள் மட்டுமே உங்களோடு செல வழித்தாலும் மீண்டும் அப்பம்மாவிடம் போகக் கேட்பதற்கு காரணம் நீங்கள் அவர்கள் மீது காட்டிய கனிவான பாசம் மட்டும்தான்.

எங்கள் அம்மா இருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு போவோம். இறக்கும் முன் எங்கள் அம்மா என் பெயர் சொல்லி கூப்பிட்டதும் நான் வரும் வரை தன்னுயிரைத் தன்னுடலில் வைத்துக் காத்திருந்ததும் என் அம்மா என்மீது கொண்ட அளவற்ற பாசத்தைக் காட்டி நிற்கின்றது.

எங்கள் அம்மா கடைசிக் காலத்தில் நோயினால் துன்பப்பட்டது மிக பெரிய மனவருத்தத்தைத் தந்தது. அம்மா என்னைக் கண்டதும் எங்கள் எல்லோரிடமும் இருந்து விடைபெற்றுவிட்டார். உங்கள் இடத்தை நிரப்ப இனி யாரும் எங்களுக்கு இல்லை. நீங்கள் தந்த உடலும் உயிரும் என்னோடு இருக்கும் வரை எங்கள் அம்மாவை நாங்கள் ஒருபோதும் மறவோம். அம்மாவிற்கு நாங்கள் எப்போதும் நன்றியுடையவர்களாக வாழ்வோம்.

***விண்ணின் றிழிந்து வினைக கீடாய் மெய்கொண்டு***
***தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து***
***உண்ணின் றுருக்கியோ ரொப்பிலா ஆன்நதக்***
***கண்ணின்று காட்டிக் களிம்பு அறுத்தானே.***

***திருமூலர் திருமந்திரம் - 113***

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

**அம்மாவின் அருமை மகன் ஆனந்தன், மருமகள் லதா மற்றும் பேரப்பிள்ளைகள் அபிஷா, அபிஷன்**
சுவிட்சர்லாந்து.

---

# எங்கள் அன்பும் பண்பும் நிறைந்த அம்மா

அம்மா நீங்கள் ஈசன் என்று என்னை அன்பாய் அழைக்கும் அந்த இனிமை இன்னும் என்னை விட்டு அகலவில்லை. அம்மா என்றால் வேறொன்றும் இல்லை அன்புதான். தாயின் அன்பை இவ்வுலகில் வேறொருவராலும் தந்துவிடமுடியாது. அந்த அன்பைப் பெற்ற நானும் பாக்கியசாலி. அம்மா நான் உங்களை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகளாகிவிட்டன. நான் இலங்கைக்கு வரும்போதெல்லாம்

என்னை ஒரு குழந்தையைப் போல் பார்ப்பீர்கள். தொலைபேசியில் நீங்கள் பேசும்போதெல்லாம் நீங்கள் பக்கத்தில் இருப்பதைப் போல் உணர்வேன்.

நீங்கள் நோய்வாய்ப்பட்டு உங்களைப் படுக்கையில் பார்க்கும் போது மிகவும் மனமுடைந்தேன். என் மடியில் உங்களுக்கு நீர் பருக்கிய போதெல்லாம் எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. கடைசியில் எங்கள் எல்லோரையும் அழைத்து உங்கள் பக்கத்தில் வைத்துவிட்டு நீங்கள் போய்விட்டீர்கள். நான் என்மனதிற்குள் நொந்து அழுதேன். உங்கள் உயிர்மூச்சு ஒரு இமைக்கா நொடிக்குள் போய்விட்டது.

அம்மா உங்களுக்கு கடமை செய்த போது மனவருத்தம் அடைந் தேன். அந்தப் பாக்கியம் எனக்கு கிடைத்தது நான் செய்த நற்பயனே. நாங்கள் இலங்கைகக்கு உங்களைத் தேடித்தான் வருவோம். இப்போது எங்கள் அம்மா இல்லை என்று நினைத்துப்பார்க்க முடியவில்லை.

நீங்கள் ஒருபோதும் மனதால் எங்களைவிட்டுப் பிரியப் போவ தில்லை. இறைவன் உங்களைத் துன்பமான வாழ்க்கையில் இருந்து விடுபட வைத்து இன்பமாய் வாழ வழி செய்துள்ளார். அதை நாங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

***உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்***<br>
***வள்ளல் பிரானார்க்கு வாய்க் கோபுர வாசல்***<br>
***தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்***<br>
***கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே***<br>
***(திருமூலர் திருமந்திரம் - 1823)***

*உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.*<br>
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்பு மகன் **ஈசன்** மருமகள் **தர்மினி** மற்றும்<br>
பேரப்பிள்ளைகள் **அனுஷ்கா, அனோஜா, ஹரிஷ், விகாஷ்**<br>
சுவிட்சர்லாந்து.

# அம்மாவின் நினைவுகள்

என்னுடைய அம்மா என் மிகப்பெரிய காவியம், நான் அம்மாவிடமிருந்து கற்றுக் கொண்டவைகள் ஏராளம். அம்மாவின் வாழ்க்கை, ஆய்வுகள் பல செய்யக்கூடிய அறிவுக் களஞ்சியமாகத்தான் இருந்தது. ஆனால் அம்மாவை முழுமையாகப் படிக்காது, அறியாது நாங்கள் தவறிழைத்து விட்டோம் என்பது இப்போது என்னுடைய மிகப்பெரிய ஆதங்கம். அவரின் ஒவ்வொரு செயலிலும் ஒரு படிப்பினை இருக்கும். அதன் விளைவுகளை ஆத்மார்த்தமாக பார்க்கும் ஞானம் அம்மாவின் மிகப்பெரிய பலம். அந்த ஞானக் கண்களினூடாகவே அம்மாவின் இறுதி மூச்சும் நின்று போனது. தனது மரணத்தை அம்மா அறிந்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது எப்படி நிகழ வேண்டும் என்பதில் அம்மாவின் எண்ணங்களும் சிந்தனைகளும் அம்மாவின் ஆன்மாவிற்கு மிகப்பெரிய ஆறுதலையும் அமைதியையும் கொடுத்திருக்கின்றன என்பதை மனப்பூர்வமாக நம்புகிறேன்.

அம்மாவின் இழப்பு என்னை மிகவும் பாதித்துள்ளது. பலதடவை அம்மாவின் நினைவுகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்க முற்பட்ட போதும் முடியாமல் போய்விட்டது. அவரின் இறந்த நாள் தொடக் கம் எழுத தொடங்கியவுடனேயே கண்ணீர் மட்டுமே வந்தது. எழுத் துக்கள் எல்லாம் மறைந்து போயின.

என்னை ஆளாக்கி இந்தப் பூமியில் எனக்கோர் இடமளித்தவர் என்னுடைய அம்மா. என்னுடைய வெற்றிகள், இன்னல்கள் அனைத் திலும் எப்போதும் துணையாக இருந்தவர்.

வாழ்க்கையை சாதாரண ஒரு மனித இயல்புக்கு அப்பால் அனு பவித்த பெண்மணி அம்மா. அனுபவ அறிவும், அவரின் முன்னோ ரிடம் கிடைத்த அறிவும் அவரை திடப்படுத்தியிருந்தது. பாடசாலைக் கல்வியை முழுமைப்படுத்தாத அம்மாவுக்கு அனுபவ அறிவும் இயற்கையாகவே உள்ள குணவியல்புகளும்தான் தன்னுடைய பிள்ளைகளை வளர்த்தெடுக்க அடித்தளமாக இருந்தன. பல சவால் களுக்கு அப்பாலும் துயரங்களை சுமந்து சுமந்து குடும்பத்திற்காக உழைத்த ஒரு தெய்வம்.

அவரின் உலகம் என்னையும் என் குடும்பத்தையுமே முழுமையாக ஆக்கிரமித்திருந்தது. இழப்புகள், துயரங்கள் தொடர்பில் ஞாபகங்கள்

இருக்கும். ஆனால் அம்மா விழிப்பாக இருப்பர். அங்கு போலித்தனங்கள் இருக்காது. அழ வேணுமோ அழுவா. ஆனால் அதற்கெல்லாம் யாரையும் நோகடிக்கவோ, யார் மீதும் பழிபோடவோ மாட்டார்.

எனக்கு ஞாபகம் தெரிந்த நாட்களிலிருந்து அம்மாவுடன் நான் நெருக்கமாகவே வாழ்ந்து வந்தேன். என்னில் அதீத அக்கறையும் அன்பும் உடையவர். ஆரம்பத்திலிருந்தே பல இன்னல்களை அனுபவித்திருந்தாலும் அந்த தாக்கங்களை யார் மீதும் சுமத்தியதுமில்லை. கணவர், பிள்ளைகளுக்காகத் தன்னை தியாகம் செய்தார். குடும்ப வறுமையைப் போக்க கடுமையாக உழைத்தார். தோட்டத்தில் வெயில், மழை பாராது உழைத்தார். அதற்கு அப்பால் பாய் கடகம் இழைத்தல், பனாட்டு செய்தல் என காலத்திற்கு ஏற்ப உழைத்தார். அம்மாவுக்கு ஆரம்பகாலத்தில் இல்லற வாழ்க்கை வலிகளும் வேதனைகளும் நிறைந்ததாகவே அமைந்திருந்தது.

மூத்த இரு மகள்களையும் திருமணம் செய்து கொடுத்திருந்தார். யுத்தத்தினால் அம்மா தான் வாழ்ந்த அந்த அழகிய தோட்டத்தினையும் அதனோடு கூடிய அனைத்தையும் இழந்தார். பிள்ளைகள் கடல்கடந்து போயினர். தானும் வேறு ஊருக்கு இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வட்டக்கச்சி என வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தார்.

கடைசி மகனை யுத்தம் தனதாக்கியது. மூத்த மகளை நோய் காவுகொண்டது. விபத்தில் அவரின் வலக்காலில் உடைவு ஏற்பட்டு மூன்று மாதங்களாக படுக்கையிலேயே இருந்தார். இரண்டு ஆண்டுகள் ஐயாவை அவரின் இறுதிக்காலத்தில் படுக்கையில் வைத்து பராமரித்தார். 2008 ஆம் ஆண்டு ஐயாவின் மரணத்தின் பின்னர் என்னுடன் நிரந்தரமாக வாழத்தொடங்கினார்.

அன்றிலிருந்து எனக்கும் என் பிள்ளைகளுக்கும் அரணாக, ஆறுதலாக வாழ்ந்து வந்தார். அந்தக் காலத்தில் தனது பழைய வாழ்க்கையின் சில பக்கங்களை மாத்திரமே பகிர்ந்தார். வேலணைக் கிராமம் தொடர்பான வரலாற்றுக் கதைகள் பலவற்றைக் கூறினார். குடும்ப வரலாற்றுக் கதைகளை சொன்னார். கோயில் வரலாறும் சொன்னார். பரம்பரை விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

நானும் அந்த விடயங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லுமளவிற்கு பதிவு செய்யவுமில்லை. ஆனாலும் அவரின் ஏக்

கங்கள் என்னவாகவெல்லாம் இருந்தன என்பது பற்றி ஆழமாகக் கவனித்தேன். ஈடேற்ற முடியாத விடயங்களை மற்றவர்களைக் கொண்டு செய்துகொள்ள நான் முற்படவில்லை. முக்கியமாக பிள்ளைகள், அவர்களின் குடும்பம் தொடர்பில் அதீத அக்கறையும் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் அத்துடன் தான் ஒவ்வொரு பிள்ளைகளுடனும் இருக்க வேண்டும் என்பதிலும் ஆர்வமாக இருந்தார். அவர்கள் வளர்ந்தவர்கள், அவர்களுக்கும் பிள்ளைகள் குடும்பம் இருக்கிறது என்பதற்கு அப்பால் தான் வேலணையில் பிள்ளைகளோடு எப்படி வாழ்ந்தாரோ அதே வயது, அதே ஆளுமை யுடன்தான் அம்மாவின் இறுதி ஆண்டு கழிந்தது.

நான் வேலையால் வீட்டுக்கு வரும் போதெல்லாம் பல கதைகளை வைத்திருப்பார். பிள்ளைகள் சாப்பிடவில்லை என்பது தொடக்கம் அவரின் நினைவில் என்னவெல்லாம் அன்று தோன்றியதோ அத் தனையையும் எனக்கு ஒரு தடவையல்ல பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லுவார். அங்குதான் எனக்கு பொறுமை என்பது இருக் கிறது என்பதைக் கண்டுகொண்டேன்.

நான் அம்மாவிடம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளம். அந்த இயல்புகள் பலவற்றை நான் உள்வாங்கி எனதாக்கினேன்.

பொறுமை, எத்தனை இன்னல் வந்தாலும் அதையும் தாண்டலாம், அதெல்லாம் தற்காலிகம், வலியும் குறிப்பிட்ட காலத்திற்கு அப்பால் மறைந்து விடும். அந்தத் துயரங்கள் வாழ்க்கையின் படிப்பினைகள். என்னை வலுப்படுத்துவதற்காக வந்த படிப்பினைகள்.

விருந்தோம்பல்; தனக்கு இல்லா விட்டாலும் மற்றவர்களுக்கு வயிறார உணவளிக்க வேண்டும் என்பதில் முன்னிற்பா. யாரும் நிறைவாக சாப்பிட்டால் அவரிற்கு அதில்தான் திருப்தி. நிறைய சாப் பிடவேண்டும். எல்லோருக்கும் கொடுத்து சாப்பிட வேண்டும்.

மற்றவர்களில் அக்கறையும் கவனமும் - எப்பவுமே வெளியில் போகும் போது பாதுகாப்பு எச்சரிக்கைகள் பலமாக வரும்.

எப்போதுமே இயங்கிக் கொண்டிருப்பார்; தேவையில்லாது நித்திரை கொள்ளுதல், இளைப்பாறுதல் என்பது அவரிற்கு முடியாத விடயங்கள். அவரின் சரியான இயக்கத்திற்கு முழுமையான தீனியை நான் கொடுக்கத் தவறியிருக்கிறேனோ என்று பல தடவைகள் யோசித் தேன். உடலில் வலுவில்லை, விடயங்களைக் கவனிக்க மனநிலை

தளர்வடைந்து விட்டது. ஆனாலும் தன்னுடைய வேலைகளை தான் தான் செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்.

மிக எளிதாக மன்னித்துவிடுவா, அவவின் கோபமும் காழ்ப்புணர்ச் சியும் மிகச் சொற்ப நேரத்துக்குத்தான் இருக்கும். அதற்காக யாரையும் பழிவாங்கவோ எதிர்ப்பான எண்ணவலைகளையோ வெளிப்படுத்த மாட்டார். அது விரைவிலேயே மறைந்து போய்விடும்.

நான் வழமையாக வீட்டிற்கு வரும் நேரம் தாமதித்தாலும் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார். பிள்ளைகளை அம்மாவிற்கு தொலைபேசி அழைப்பு எடுக்கும்படி கரைச்சல் கொடுப்பார்.

அம்மா தனது சுயநினைவை இழந்து படுக்கையிலிருந்த காலங் களில் அவவின் மாயப்புலனுணர்வால் வெளிப்படுத்திய விடயங் களில் பயம், யாரோ ஒரு மனிதனை துட்டனாகவும் அவனால் தான் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், உடல் ரீதியாகக் காயப்படுத் தப்படுவதாகவுமே அதிக நாட்கள் இருந்தன. அவையெல்லாம் அவரின் ஆழ்மனதில் பதியப்பட்ட விடயங்களின் வெளிப்பாடு களாகக்கூட இருக்கலாம்.

ஆனாலும் அம்மா அந்த துட்டனை போடா போடா எனத் துரத்தினார். இருப்பினும் மீண்டும் மீண்டும் தன் இயலாமையால் தொடர்ந்து அந்த நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தார். என்ன போராட்டம் அங்கு நடந்தாலும் அம்மா எந்த சந்தர்ப்பத்திலும் மோசமான வார்த்தைகளையோ, தூஷணை வார்த்தைகளையோ பிரயோகிக்கவில்லை. இது எனக்கு மிகவும் ஆச்சரியமான விடயம். அவரின் கடந்த காலச் சூழலுக்கு தொடர்பற்றதாகவும் இருந்தது.

என்னை மிகவும் நேசித்த என்னுடைய அம்மாவின் இழப்பு என்னைத் தனிமைப்படுத்திவிட்டது. அம்மாவின் பிள்ளைகளில், என்னுடனேயே இறக்கும் வரையில் வாழ்ந்தார். அம்மா எனக்கும் என் பிள்ளைகளுக்கும் காப்பரணாக விளங்கியது மட்டுமல்லாது வாழ்வின் வழிகாட்டுதலாகவும் இருந்தார். அம்மா மற்றவர்களின் பார்வையில் சாதாரண மனுஷி. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எங்கள் குடும்பத்திலேயே உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் பலமானவர்.

நான் எங்கு போனாலும் என்நினைப்போடு எப்பவுமே எனக்காக காத்திருக்கும் ஒரு ஜீவன் அம்மாதான். இப்போது எனக்காக காத்

திருக்கும் அந்த இடம் வெற்றிடமாகி விட்டது. இதுதான் பேரிழப்பு, யாராலும் எப்போழுதுமே ஈடுசெய்துவிட முடியாதது. இந்த வலியி லிருந்து மீளுவதற்கான வழியைத்தான் நான் இப்போது தேடுகிறேன்.

என்னைச் சுற்றி என் வீட்டைச் சுற்றி ஒரு ஒளிவட்டமாக அம்மா வலம் வருவதாக நான் கற்பனை செய்கிறேன். ஏனென்றால் என்மீதும் என் பிள்ளைகள் மீதும் இறுக்கமான பற்றுதலும் எங்களைப் பற்றிய சிந்தனையும்தான் அம்மாவிற்கு இருந்திருக்கிறது. இறுதியில் எல்லாப் பற்றுகளையும் நீக்கிய அம்மாவால் என்னுடனான பற்றை நீக்க நிறையக் காலம் எடுத்தது.

அம்மாவின் இறுதி ஓராண்டு காலம் எனக்கு மிகப்பெரிய பாடம், உளவியலோடு கூடிய அந்த அனுபவத்தை எழுதினால் பலருக்கு பயனுடையதாக இருக்கும். அம்மாவின் இழப்புத் துயரிலிருந்து மீளாமல் என்னால் எழுத முடியவில்லை. அதற்கு நேரம் தேவை. என் மரணத்திற்கு நான் எப்படித் தயாராக வேண்டும் என்பதை செய்முறை ஊடாக நான் கற்று விட்டேன். எல்லாமே அவசரமாக முடிந்து விட்ட தாகவே எனக்கு தோன்றுகிறது. கனவுகள் போல பல விடயங்களை மீட்க வேண்டியுள்ளது. இறுதியாக அம்மா வேதனைக் காலத்தில் அவரின் மரணத்தை அவரோடு சேர்ந்து நானும் எதிர்பார்த்தேன். என்னை இப்போதும் தன்னுடைய குழந்தையாகவே பார்த்துக் கொள்ளுவார். என்னுடைய உடல் ஆரோக்கியத்திலும், என்னுடைய பாதுகாப்பிலும் அதீத அக்கறை கொண்டவர். என்னை எந்த எதிர்பார்ப்பு மின்றி நேசித்த என் அம்மா அவரின் இறுதிக் காலத்தில் எனக்கு குழந்தையாக மாறிய கதை "என்கடன் பணிசெய்து கிடப்பதற்கே" என்றாகிவிட்டது.

**காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர். (குறள்:485)**

அம்மாவின் ஆத்மா தனது பூவுலக வாழ்வில் அனைத்தையும் முழுமைப்படுத்தி சொர்க்க வாசலை அடைந்துவிட்டது.

எந்தத் துட்டனும் இனி துரத்தமாட்டான், துன்புறுத்தமாட்டான் இனிக் கையால் இரத்தம் வராது.

எல்லாமும் அழகாகவே இருக்கும், ஆனந்தமும் இனிமையும்தான் அங்கிருக்கும், ஓசைகள் எல்லாம் இனிமையாக ஓங்காரமிடும்.

இயற்கை அம்மாவைத் தனதாக்கிக் கொண்டது. அம்மாவின் ஆத்மா திவ்விய ஒளியில் இரண்டறக் கலந்து விடுதலை பெற்று விட்டது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்மா, உங்கள் நினைவுகளுடன்
என்றும் உங்கள் அன்பு **மகள்**
**றஞ்சி**

---

# எங்கள் பாசமிகு பெரியம்மா!

எங்கள் பெரியம்மா நீங்கள் என்றால் எங்களுக்கு உயிர். எதையும் எதிபார்க்காத அன்பையும் பாசத்தையும் தந்த பெரியம்மாவைப் போல் இனி எங்களுடன் யாரும் இருக்க முடியாது. நாங்கள் பெரியம்மா என்று கூப்பிட எங்கள் பெரியம்மா எங்களுடன் இல்லை. நாங்கள் எங்கள் அம்மாவை இழந்த போது நீங்கள் தான் எங்கள் தாயாக இருந்தீர்கள். இப்போது உங்கள் இடத்தில் எங்களுக்கு யாருமில்லை. நீங்கள் எங்களைக் கூப்பிடும் போது அதிக உரிமை எடுப்பீர்கள். எங்கள் அன்பான பெரியம்மாவை இழந்து தவிக்கின்றோம்.

எங்கள் தாய் தந்தை இருவரையும் இழந்த போது எங்களின் துயரத்தை உங்கள் அன்பினாலும் அரவணைப்பினாலும் ஆற்றினீர்கள். நாங்கள் கூடிவாழ்ந்த வாழ்க்கைக்கு எங்கள் பெரியம்மாதான் மூலகாரணம். எந்த நாட்டில் இருந்து நாங்கள் வந்தாலும் எங்கள் அம்மாவை எங்கள் பெரியம்மாவில்தான் பார்த்தோம். எங்கள் குரலைக் கேட்டாலே நீங்கள் கொள்ளும் ஆனந்தம் எங்களுக்குத் தெரியும். எங்கள் தந்தை உங்கள் அருமை மைத்துனருடன் ஒரு சகோதரியாக இருந்தீர்கள். எங்கள் அம்மாவை எப்படி நேசித்தீர்களோ அப்படித் தான் எங்கள் தந்தை மீதும் பாசம் கொண்டிருந்தீர்கள். நீங்கள் நோயுற்ற காலத்தில் உங்கள் அன்பிற்குரிய கோபாலுவை அடிக்கடி கூப்பிட்டீர்கள். அது நீங்கள் அவர் மீது கொண்ட அன்பையும் பாசத்தையும் காட்டியது. அன்பென்றாலே எங்களுக்கு பெரியம்மா தான் ஞாபகத்தில் வருவார்.

எங்கள் பெரியம்மாவை உயிரற்ற நிலையில் பார்த்து நொந்து நொடிந்தோம். ஆனால் எங்கள் பெரியம்மா இறக்கவில்லை. அவர் எங்கள் எல்லோரார் நெஞ்சங்களில் வாழும் தெய்வம். எங்கள் பெரியம்மா ஒரு தூய ஆத்மா. அவர் இன்பநிலையை அடைந்துவிட்டார் என்பது தான் உண்மை. எங்கள் பெரியம்மாவின் ஆத்ம சாந்திக்காக நாங்கள் எல்லோரும் பிரார்த்தனை செய்கின்றோம்.

அமரர்களான தங்கை **பரமேஸ்வரி கோபாலபிள்ளை**
அவர்களின் (குடும்பம்)
அன்புப் பிள்ளைகள் - **தவயோகம் (தவம்),**
**பாலச்சந்திரன் (அப்பு), பாக்கியலட்சுமி (ரதி),**
**இராசகுமாரி (புஸ்பா), சந்திரகுமாரி (இந்திரா),**
**மதிவதனி (வதனி), பாலசிறீ (ரகு).**

---

# பெரியதம்பி குடும்பம்

உங்களின் அன்புத் தம்பி அக்கா அக்கா என அன்போடு அழைப்பார். ஆனால் அவர் உங்களுக்கு முன்னதாகவே போய் உங்களிற்காக காத்திருக்கிறார். அங்கு அவரிடம் சொல்லுங்கள் நாங்கள் நலமாக இருக்கிறோம் என்பதை. எப்போதும் மலர்ந்த முகத்தோடு வாசலில் இருந்து வரவேற்பீர்கள். நீங்கள் எங்களை அன்போடு அழைக்கும் அந்தக் குரல்தான் எங்கள் மனதில் ஆணிஅடித்ததுபோல் பதிந்துள்ளது. கமலம், தேவா, றூபா என உங்களின் இனிய வார்த்தைகளால் உள்ளம் மகிழ்விப்பீர்கள். அன்போடு அரவணைத்து உரிமையோடு உணவளிப்பீர்கள். பெரியதம்பி, பெரியதம்பி பிள்ளைகள் என பாசத்தோடு அழைப்பீர்கள். தம்பியைப் பார்ப்பதற்காகச் சென்று விட்டீர்கள். பெரியத்தையையும் நாங்கள் இழந்துவிட்டோம்.

அத்தை உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பெரியதம்பி மனைவி **கமலாதேவி,**
மருமக்கள் **பாலஜீவா, பாலறூபா,**
**பாலதேவி, பாலசுதா, பாலஜெயன்**

# என் ஆருயிர் அக்கா

எங்கள் அக்கா நான் பிறந்ததிலிருந்து என்மீது அன்பும் பரிவும் காட்டியவர். அவர் எங்கள் தாயாகவே இறக்கும் வரை வாழ்ந்தார். அன்பே உருவான எங்கள் அக்காவை எப்பிறப்பிலும் நாங்கள் காணமுடியாது. அக்கா இத்தனை காலமும் வாழ்ந்தது எங்கள் முன்னோர் செய்த பூர்வபுண்ணிய பயனாகும். எங்கள் வாழ்க்கையில் நீங்கள் இல்லாமல் எதுவும் நடந்துவிடவில்லை. நீங்கள் எங்கள் வாழ்வின் எல்லாப் பக்கங்களிலும் பங்கெடுத்தவர். எங்களுக்கு அம்மா இல்லாத இடத்தை எங்கள் அக்காதான் நிரப்பினார்.

என்னைத் தேவி என்று செல்லமாகவும் உரிமையாகவும் அழைப் பீர்கள். அந்த இனிமைக்குரல் இப்போது எங்கே போய்விட்டது என்று எனக்கு தெரியவில்லை. உங்களைப் பார்க்க வருவது ஒரு கோயிலுக்கு தரிசனம் செய்வதற்கு சமம். எங்கள் எல்லோரையும் விட அதிகளவு அனுபவ ஞானம் உடையவராக இருந்தீர்கள். உங்களின் அன்பினையும் பரிவினையும் வேறொன்றுடனும் ஒப்பிட முடியாது. நீங்கள் இல்லாத இடம் எல்லோருக்கும் வெறுமையையே தரும்.

என் பிள்ளைகள் அனைவருடனும் நீங்கள் அளவுகடந்த அன்பு காட்டுவீர்கள். என் பிள்ளைகள் தங்கள் பெரியம்மா மீது அன்பும் பாசமுமாக இருந்தார்கள்.

என்றும் மறக்கமுடியா உங்களின் ஆத்மா சாந்தி பெற இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புத்தங்கை **லலிதாதேவி (தேவி),**<br>
பெறாப்பிள்ளைகள் **றஞ்சனா, பிரேமா,**<br>
**சியாமளா, மஞ்சு நாதன்,**<br>
பேரப்பிள்ளைகள் **ஹரிஷ், ஹரிஷ்ணவி.**

# என் அன்பின் அக்கா!

எங்கள் அன்பான அக்கா! என் தாய்க்கு ஈடான மூத்த சகோதரி எங்களுக்கு கிடைத்ததிற்கு நாங்கள் பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டும். அமைதி நிறைந்த எங்கள் அக்கா என்னை “தம்பி துரை” என்றே எப்போதும் இனிமையாக அழைப்பார். நான் அவரைப் பார்க்க போகின்ற போதெல்லாம் இன்முகம் காட்டி வரவேற்று உடனே சாப்பிடு என்று கூறி அன்புடன் உணவளிப்பார். எங்கள் அம்மா சின்னம்மா இறந்த பின் அவர் எங்களுக்குத் தாயாகவே இருந்தார். பிறந்த நாளில் இருந்து இன்றுவரை என் அன்புச் சகோதரியின் அன்பையும் அரவணைப்பையும் நான் பெற்றேன்.

எங்கள் வாழ்க்கையில் நடந்த இன்ப துன்பங்களில் எல்லாம் அக்கா பங்கெடுத்துக் கொண்டார். என் துணைவியார் இராஜேஸ்வரி (இராசு) 20ஆம் நாள் ஆடி மாதம் 2014ஆம் ஆண்டு எங்களைவிட்டு பிரிந்த போது நானும் என்பிள்ளைகளும் ஆறாத்துயர் அடைந்தோம். அப்போதெல்லாம் அக்கா எங்கள் அருகில் துணையாக இருந்து எங்களுக்கு ஒரு தாயாக ஆறுதல் அளித்தார். மனிதப் பிறவியில் நல்ல உறவுகள் நம்மைச்சுற்றி இருக்க வேண்டும் என்பதற்கு எங்கள் அக்கா முன்னுதாரணம். ஏதாவது உதவிகேட்டால் அக்கா மனம் கோணாமல் முன்வந்து செய்வார். அவர் புறம்கூறத் தெரியாத பொய்மையற்ற பெண்மணி. அக்காவைப் போன்ற பண்பாளர்களின் வாழ்வுதான் மானிடவாழ்வின் அர்த்தத்தை புரியவைக்கிறது.

அக்காவின் இறுதிக் காலத்தில் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் நான் அவரைப் பார்க்க போகும்போது என்னை அடையாளம் கண்டுவிடுவார். அவர் கொள்ளும் பரவசம் அவர் முகத்தில் தெரியும். அவருக்குள் வரும் புன்முறுவல் அவரின் அளவு கடந்த பாசத்தைக் காட்டும். அப்போதும் சாப்பிட்டாயா? என்று தாய்மைக்குரிய உரிமையுடன் கேட்டார். அந்த தாய்மையின் பாசத்தைதான் உலகில் எல்லா உயிர்களும் வேண்டி நிற்கின்றன. அந்தப் பாசமும் அன்பும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதை இப்போது இழந்துவிட்டோம்.

முதுமை கொடியது. முதுமையில் நோய் பிணி வருவது அதிலும் கொடியது. மரணம் இல்லாத வாழ்வும் இல்லை. அதை யாரும் வென்றுவிடவும் முடியாது. அதனால் மனத்தில் வரும் வலியை இலகுவாக ஆற்றிவிடவும் முடியாது. இதை என்வாழ்வில் பலதடவை

சந்தித்துவிட்ட பின் மீண்டும் என் அக்காவை விறகில் வைத்து தீமூட்டிய போது மரணத்தை விட கொடியது எது என்று எனக்கு தெரியவில்லை.

எங்கள் அக்கா மாந்தர் பணி செய்து இறைவனின் அடியில் இருக்க வேண்டிய அத்தனை புண்ணியங்களையும் தான் வாழ்ந்த வாழ்வினால் நிறைவேற்றினார். அவர் மீண்டும் பிறவா வரம் பெற்றவர் என்ற தங்களது எண்ணத்தை வந்தவர் எல்லோரும் கூறிச் சென்றனர்.

எங்கள் அக்கா ஒரு புண்ணியவதி. அவரின் ஆத்மா சாந்தியடைய நானும் என் பிள்ளைகளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்புத் தம்பி **நித்தியானந்தன் (துரை),**
**பிரதி (மருமகள்), சுயந்தன் (மருமகன்).**

---

# அன்புமிக்க மாமி

மாமி மாமி என்ற உரிமைகொண்ட என்மாமி
மாயமாய் மறைந்தாய் எமை விட்டு - உன்
தேனான வார்த்தை கொண் டென்னைத் தேடியழைப்பீர்கள்
கூடாத நாளொன்று கூடி வந்ததோ உமை மாய்க்க.

உங்கள் அழுகுரலும் என் காதில் கேட்கவில்லை
கூடிய சுற்றத்தை நானும் காணவில்லை - என்மாமி
எனைத் தழுவிய அன்பே நினைவாக என்னுள்
நீ வாழ்வாய் என்னருமை மாமி மாண்டார் நினைவாக.

என் அன்புத்தாய்க்கு ஈடான என்னருமை மாமி ஆத்மா சாந்தியடைந்து என்றும் இறையின்பம் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

**அன்பு மருமகள் சத்தியபவானி**
சுவிட்சர்லாந்து

# அம்மம்மா!

காணும் போதெல்லாம்
“இப்பதான் இந்தக் கிழவியைப் பார்க்க நேரம்
வந்ததோ” என செல்லமாய் கோவிப்பார்.
தான் சேர்த்து வைத்த
கதைகள் பகிர
ஆவலுடன் இருப்பார்.
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நினைவுகள் மாறாமல் - அப்படியே
நடந்த கதைகள் கூறுவார்.
தேநீர் அருந்தாமல் சென்றால்
வீட்டில் அன்று களேபரம்தான்
விருந்தோம்பல் வள்ளல் இவர்
எங்கள் வாழ்க்கையில் நல்ல
செய்தி கேள்விப்பட்டால்
மனமுகிழ்ந்து மகிழ்ச்சி அடைவார்.
குழந்தை முகம், பொக்கை வாய்ச் சிரிப்பு
இப்போதும் எம் கண்களை
விட்டு அகலவில்லை.
வாசலில் வரும் போது
கதிரையில் பொல்லுடன் உட்காரும்
உங்களை கண்கள் தேடும்.
பேரப்பிள்ளைகளின் பிள்ளைகள்
கண்ட பூட்டி
அரும் பொக்கிக்ஷம் நீங்கள்.
என்றும் உங்கள் நினைவுகள்
இன்ப நினைவுகளாய்
எம்முள் இருக்கும்.
கஸ்ரோ, ஆஷா, தீபன், மது
எங்கே என கேட்கும் குரலை
எங்கே தேடுவோம்.

அன்புள்ள, பேரப்பிள்ளைகள்,
**கஸ்ரோ, ஆஷா,**
**தீபன், மது.**

# பாசமிகு அப்பம்மா

*சில நாள் நினைவுகள் சிலநாள் சிறு ஞாபகங்கள்*
*அப்பம்மா என்ற அன்பான உறவில் கண்டோம்*
*பாசம் ததும்பும் அப்பம்மாவின் இனிய அரவணைப்பில்*
*நாம் கண்டது நிலைக்கவில்லை; கனவாய்ப் போனதேன்!*

*பாசம்மிகக் கொண்டு செல்லமாய் எமை அழைப்பீர்!*
*செவிகுளிரும் உன் செல்லமொழியை இனிக்கேளோம்!*
*இப்பாரினில் தந்த அன்பு எல்லாம் நினைவல்ல எம்மிலவை*
*உமை மறவா வரமென்றே அன்பின்வரமே எங்களப்பம்மா.*

அன்புப் பேரப்பிள்ளைகள் - **அருந்து மற்றும் அபி**
சுவிட்சர்லாந்து.

---

# அம்மம்மாவின் சில நினைவுகள்

*என் அம்மம்மாவுடன் சேர்ந்து வாழும் சந்தர்ப்பம் புலம்பெயர்ந்த நாட்டில் பிறந்து வளர்ந்த எனக்கு கிடைக்கவில்லை. நான் அம்மம்மாவை சந்தித்த நாட்களும் அவருடன் செலவழித்த நேரமும் மிக மிக அரிதானவை. அதனால் எங்கள் இருவரிடமும் நெருக்கமான உறவு உருவாகவில்லை. அம்மம்மா என்பவர் என்னுடைய அம்மாவின் அம்மா என்ற உணர்வு மட்டுமே எனக்குள் இருந்தது. எனது சொந்த நினைவுகளை விட என் அம்மா தனது அம்மா பற்றிக் கூறிய ஞாபகங் கள்தான் எனக்குள் அதிகமாக இருக்கின்றன.*

*2016ஆம் ஆண்டிலும் 2019ஆம் ஆண்டிலும் என் அம்மா அம்மம்மா வாழ்ந்த தோட்டக் காணிக்கு என்னை கூட்டிச் சென்றார். அவரது தோட்டக் காணியை எனக்கு காட்டிய போது அம்மம்மாவின் பழைய வாழ்க்கை பற்றியும் அவர் பட்ட கஷ்டங்களையும் நான் அறிந்தேன். அம்மம்மா அவரது குடும்பத்திற்காக வாழ்ந்தார் என்று என் அம்மா சொன்னார். தோட்ட வேலைக்கு வந்தவர்களுக்கு அம்மம்மா சமைத்து சாப்பாடு கொடுத்ததையும் கூறினார். அந்த தோட்டக் காணியில் அம்மம்மா மாடுகள் வளர்த்து பால் கறந்து கடைக்கு விற்ற நினைவுகளையும் அம்மா எனக்குச் சொன்னார்.*

என் அம்மாவில் நான் காணும் துணிச்சல், அயராத உழைப்பு, தன்னம்பிக்கை, எதையும் எதிர்கொள்ளும் சக்தி - இவையாவும் அம்மம்மாவிடம் இருந்துதான் அம்மா கற்றிருப்பார் என்று அம்மம் மாவின் பின்னணியை வைத்து எண்ணுகின்றேன். நானும் இந்த உயரிய பண்புகளைக் கடைப்பிடிக்க முயல்கின்றேன்.

அம்மம்மா எனக்கு தந்த விலை மதிப்பற்ற சொத்து என் அம்மா தான். அதற்கு அம்மம்மாவிற்கு நான் என்றும் நன்றியுடையவளாக இருப்பேன்.

அம்மம்மா இவ்வுலகவாழ்வின் துன்பத்திலிருந்து விடுபட்டு இப்போது அமைதியாக இறைவனின் பாதத்தில் இருக்கிறார் என்று நான் நம்புகின்றேன். அம்மம்மாவின் ஆத்மா சாந்தி அடைய நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பிருந்தா - பேத்தி**
அவுஸ்திரேலியா.

# Rise of Memory

While life can be unpredictable and twisty, its stability remains in the way we face it and makes it remarkable. It’s something my Ammama taught me. She lived steadily while at the same time being a “time being,”, like a memory that is dear to my heart and to my brain. We weren’t always close or likeable to each other. When I first met her, I remember wondering why this boring old lady moved into my house and being so annoyed at everyone. But as time went on, the same annoying old lady came to play a significant part in my life, just as my most sweet and proud memory.

She was a fighter and the most kind-hearted woman I’ve ever met. Even though we had opposing traditional or controversial views in certain matters, she was as strong in her own unique way as my Amma. There were a lot of times I was made speechless by her love and affection, and that’s something you can’t take for granted nowadays. I vividly remember my Ammama waiting for me and my sister to say bye while we were leaving the house. That utterly simple thing made her so happy. She was really adamant about feeding us more food, even though we ate like gluttons just a moment ago. Food was one of her

love languages among others. She was loyal and loved everyone without expecting anything back. Ammama always wanted to be healthy and safe and she was possessive about providing these things to us. She eagerly waited until we returned home, wanting the very best in everything, sometimes a step more than our Amma. I could go on forever describing our lovable moments, but the sad part is that things didn't stay the same.

I'm a psychology student. While there are so many reasons why I chose to study psychology, one of the most important is my Ammama. It's not because I'm interested in the mental health of elderly people; I would be the last person to have patient, but because my sweet and strong Ammama slowly and rigorously started to lose against the battle with her own brain, It was around the time I applied to university and was waiting for the results that I was quite unsure whether I had made the right decision to study psychology.

At first, it began as her talking to herself and then to some other characters, some of whom are real-life people and some are made-up, visual hallucinations. And she started to hear people talking back to her, along with some other auditory hallucinations. Most of the time, it would be impossible to understand her due to her disorganised speech (if you want a psychological term, formal thought disorder, or FTD), and her memory began to deteriorate. She started to respond to her environment in a very different and difficult-to-understand way; she became paranoid. Sometimes she remembered her very earliest memories, and at other times she couldn't even identify the people around her. This cognitive distortion is the most heartbreaking thing to watch when your loved ones can't recall or function normally.

We went along with this painful and long journey in the last months of her life, and I was strong in my decision to pursue psychology. It's not easy to take care of someone with these types of mental disorders. There were certain incidents where she was clear and able to talk to us normally. My Amma was patient and consistent, and she tried everything in her power to make my Ammama's life as easy as possible.

I've often wondered what those voices were telling her. Are they telling her good stories or bad omens? Was she comforted by them or disturbed by them? For the most part, I'll never know. But the voices accompanied her until her last moment. If they did anything to ease her

pain and comfort her, I'm thankful for them.

I'm aware that death is inseparable from life. But it always hits the hardest. I wish I was with her in her last moments, and that's my only regret, along with the fact that I couldn't do anything to ease her pain and was powerless to help her. She is the woman who taught me that love can be contagious and consistent, encouraged me at every turn, and even regularly prayed for me.

Thank you, Ammama, for your love and support. You lived as an astonishing memory. And please remember, you're my precious memory.

Strolling in dodges, speckled in darkness,
A flat sea of scorpions in
Blue hands and half a mind
Along with unanswerable questions.

I'm leaving for my peace,
I left what I couldn't hold anymore,
I can't feel it anymore.
If I write again, my --
Transmitter solitude, the curses,

Dried out of words,
My horrors will make good stories.
Too spiteful to be nervous, Blight found me.
A little love for my beloveds

How can we wink,
Freakish barks of shadows, casting cauldron blood,
She melts as snow.
Nothing is going to make me solid.

She is nowhere and everywhere.
Violet, on ups and downs,
Lions ate junk, dead arrows were born,
Yet do remember me, as she,
She will rise like a fire one day.

**• Ahilinie.**
*Granddaughter - London*

# புள்ளிமான்

அது ஒரு சனிக்கிழமை மாலைப்பொழுது, கண்களைத் திறந்து பார்க்கவியலாது, பேசவியலாது, கை கால்களை அசைக்க முடியாது உறங்குவது போல கட்டிலுக்கருகில் உறவினர்கள் சூழ உறங்கிக் கொண்டிருந்தது என் புள்ளிமான்.

அம்மம்மா ஒரு உத்வேகமான மனிதை. எந்த நேரமும் எடுப்பாக குடுகுடு என ஓடித்திரியும் வயதுவந்த பெண்மணி. அனுபவ அறிவோ அளவிற்கு அதிகம் கொண்டவர். யாருக்கும் தெரியாத பண்பாட்டுக் கதைகள், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான பாடல்கள், பழமொழிகள், கைவைத்திய முறைகள் என்பன அவவிற்கு மட்டுமே தெரிந்திருந்தன. அவையனைத்தும் நிகழ்காலத்தினர்கூட அறிந்திராத பண்டைய விடயங்களாக இருந்தன.

“அக்கப் போரும் சக்கிலியர் கூத்தும்” அடிக்கடி வாயிலிருந்து வரும்.

அவர் பள்ளிக்கூட கல்வியைத் தொடர்ந்திருந்தால் பெரிய பட்டதாரியாக வந்திருப்பார் போலும். எப்பொழுதும் நெற்றியில் மூன்று திருநீற்றுக் குறி அணிந்திருப்பா; அவ்வளவு கடவுள் பக்தி.

எனக்கு நினைவிருந்த நாள் தொடக்கம் என்னுடனேயே எனது வீட்டில் தனது வாழ்நாளைக் கழித்துவந்தார். குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாடி, சோறூட்டி அவருடனேயே படுக்க வைத்துக் கொள்வா. அவவின் வாய்ப்பேய்ச்சுத்தான் இளமையில் எனக்கும் ஒட்டிக்கொண்டதென எல்லோரும் கூறுவார்கள்.

சிறிது வளர்ந்த பருவத்திலும் இரவில் நித்திரை வராவிடின் அவவுடன் போய்ப்படுத்துக்கொள்வேன். வாரத்திற்கு வாரம் கண்ணூறுபட்டுவிட்டதென்று வேப்பங்குழையால் சுற்றி போடுவா. பள்ளிக்கூடம் போயிற்று வரும்வரை வாசலில் எதிர்பார்த்தபடி காத்திருப்பா. வந்த பின்னர் சாப்பிடச் சொல்லுவா. இல்லையேல் ஊட்டிவிடுவா. சாப்பிடவில்லையோ, அன்று முழுவதும் அதே புராணம்தான். எனது குறும்புத்தனங்கள் தாங்க இயலாது ஏசுவா, நானும் பதிலுக்கு சண்டையிடுவேன். அம்மா எனும் நீதிபதி வந்து தீர்ப்பளிக்கும் வரை சண்டை தொடரும். ஆனால் ஒரு நாளும் நாமிருவரும் கதைக்காமல் இருந்ததில்லை.

யார் வந்தாலும் என்ன “கறுத்துப்போயிற்ற, சாப்பிர்றதில்லையோ” என்று பெரும் விசாரிப்புத்தான். பிள்ளைகளிலும் பேரப்பிள்ளை களிலும் பெரும் பாசம். ஒருவரையும் பற்றி ஒரு நாளும் குறை கூற மாட்டா. எல்லாரையும் புகழ் பேச்சுத்தான். பொழுது கழியாத போது அவவோடு போய் ஒட்டிக்கொண்டிருப்பேன். தனது பரம்பரைக் கதைகள், பட்டினத்தார் பாடல் எல்லாம் அழகாகச் சிரித்துக்கொண்டு பாடிக் காட்டுவா.

**காடோ? செடியோ? கடல்புற மோ? கனமே மிகுந்த**
**நாடோ? நகரோ? நகர்நடு வோ? நலமே மிகுந்த**
**வீடோ? புறந்திண்ணை யோ? தமி யேன் உடல் விழுமிடம்?**
**நீள்தோய் கஞக்குன்றி லீசா! உயிர்த்துணை நின் பதமே!**

ஒவ்வொரு முறையும் வியப்படைந்தேன். எங்கிருந்து இவ்வளவற் றையும் கற்றார் என்று. இவ்வாறே எங்களுக்குள் இருந்த அந்நியோன் னிய உறவு வளர்ந்து சென்றது.

எந்த நேரமும் எதுக்கெடுத்தாலும் மிதுஷி, மிதுஷி என ஊர் கேக்கும்படி கூப்பிடுவா. பலமுறை எனக்கு கோவமும் வரும். உங் களுக்கு 17 பேரப்பிள்ளைகள் இருந்தும் இரண்டு பேரப்பிள்ளைகளை மட்டும்தான் எப்போதும் கூப்பிடுவியள், வேலை சொல்லிறியள் என்று நகைச்சுவையாகக் கேட்பேன். அதற்கு அவையள் தூர இருக்கினம் என்று சொல்லுவா.

வருடங்கள் சில கழிந்த பின் வைத்தியசாலைக்கு கிளினிக் போய் மருந்துகள் எல்லாம் போடத்தொடங்கினா. அவவுக்கு வீட்டில் நான் ஒரு மருந்தாளராகவும் (pharmacist) இருந்தேன். அவவால் பல தடவைகள் தனித்து குளிக்க முடியாது போனால் நான் உதவுவேன். தொடர்ந்து கனநேரம் குளிப்பா. அவவைக் குளியலறையிலிருந்து வெளியில் கொண்டு வருவது பெரியபாடாக இருந்தது. இன்னும் இரண்டு கிண்ணம் ஊத்தம்மா என்று சொல்லுவா.

நாட்கள் சில கழிந்தன. அம்மம்மா எனக்கு சோறு ஊட்டிவிட்ட காலம்போய் நானும் அவவுக்கு உணவூட்டினேன். வயது சென்ற கார ணத்தினாலோ என்னவோ உளவியல் பிரச்சினைகளை எதிர்நோக்கத் தொடங்கினார். கற்பனை உலகில் அவர் இருந்தாலும் மிதுஷி, மிதுஷி என்று என்னைக் கூப்பிடுவதை நிறுத்தவில்லை. என்னை எப்போதும் அடையாளம் காணத்தவறியதுமில்லை. படுத்த படுக்கை யாக இருந்த போதும் பல விடயங்களில் மிகவும் தெளிவாகவே

இருந்தார். நானும் எனது அம்மாவும் சிறிய குழந்தை போலவே அவவைப் பராமரித்தோம். கடினமாக இருந்தாலும் ஒரு போதும் சுமையாக இருந்ததில்லை. ஒரு வருடம் ஒரு பேச்சுப் பொம்மையாகவே வாழ்ந்தார். அந்தக்கணங்களிலும் மிதுக்ஷி பள்ளிக்கூடம் போயிற் றாளா? பள்ளிக்கூடத்தால வந்திட்டாளா என அம்மாவிடம் ஒவ் வொரு நாளும் விசாரிப்புத்தான். மெல்ல மெல்ல அந்த புன் சிரிப்பும் பேச்சும் நலிவடையத் தொடங்கின. அம்மம்மாவால் சாப்பிட முடியவில்லை. தூரத்திலிருந்த உறவுகள் அம்மம்மாவைப் பார்க்க வரத் தொடங்கினார்கள். பேச்சு மூச்சில்லாமலிருந்த அவர் எனக்கு மட்டும் பதிலளித்த போது நம்பினேன். என் புள்ளிமான் என்னைவிட்டு பிரியாது என்று. வாழ்நாளில் ஒருபோதும் மீளக் கிடைத்திராத விசாலமான எண்ணம் படைத்தவராகவும் வஞ்சனையற்ற மனமுடைய என் அம்மம்மா என்னுடன் இன்னும் சிலகாலம் இருப்பார் என்ற பொறி என்னுள் தட்டியது.

ஆனால் அது நீடிக்கவில்லை. இனியும் இப்பூவுலகின் வேதனைகள் வேண்டாம், வலிகள் வேண்டாம், பேரானந்த நிலைக்கு அம்மம்மா விற்கு அழைப்பு வந்தது. பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவதைப் போல எல்லாவற்றையும் மாற்றி விட்டு என்நினைவு களுடன் என்புள்ளிமான் இவ்வுலகை நீத்தார்.

***"மண்ணும் உருகும் மரம் உருகும் மாயை உருகும் மால்உருகும்***
***பெண்ணும் உருகும் ஆண் உருகும் பேதாபேத வகை உருகும்***
***அண்ணல் உருகும் இடத்தமர்த்த ஆத் தாள் உருகும் அரவணையான்***
***எண்ணி உருகும் குருநாதன் என்பால் உரைத்த ஓர் மொழியே."***
***(பட்டினத்தார்)***

அவர் விண்ணுலகில் இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த் திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் அன்புப் பேத்தி
**விதுஷி**



முதுசம் என்பது
வெறும் பொருள் ரீதியான
சொத்துக்களுக்கு அப்பால் வாழ்வியலுடன்
கூடிய பண்பாட்டு அம்சங்களும் எமது சொத்தே
ஆகும். அந்த வகையில் கோபாலகிருஷ்ண ஐயர்
எழுதிய **'மரணத்திற்கு முன்னும் பின்னும்'**
கட்டுரையையும் **'சைவசமய அபரக் கிரியைகள்'**
என்ற மலேசிய இலங்கைச் சைவர் சங்கம்
2005 ஆம் ஆண்டு வெளியிட்ட
கட்டுரையையும் இம் மலரில்
இணைத்துள்ளோம்.

# இறப்பிற்கு முன்னும் பின்னும்

**(கோபாலகிருஷ்ண ஐயர்)**

இந்துக்களைப் பொறுத்தவரை சமயம் என்பது வாழ்க்கையின் ஓர் அம்சம் என்றோ பொழுதுபோக்குச் சாதனம் என்றோ கருதப்படுவதில்லை. அது மனிதனது பூரண வாழ்க்கையிலும் வியாபித்து நிற்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. வாழ்வின் பல்வேறு அம்சங்களை முரண்பாடின்றி ஒருங்கிணைப்பதும் வாழ்க்கைக்கு வழி காட்டுவதும் அடிப்படைக் கருத்துக்களையும் குறிக்கோளையும் தெளிவுபடுத்துவதுமே சமயம் என்ற நம்பிக்கை நிலவி வருகின்றது. மனிதனைப் பொறுத்தவரை உடற்பற்றுக் காரணமாய் பல்வேறு துயரங்களுக்கு உள்ளாகின்றான். இத்துயரங்களிலிருந்து மீள்வதற்கு உடலுணர்வை வெல்வதும் உடலை மீறிய ஆன்மீக உணர்வை வளர்ப்பதும் அவசியமாகின்றன. பரம்பொருளை வழிபடவும் வாழ்க்கையின் சகல அம்சங்களையும் திடமனதுடன் நிறைவேற்றவும் கருவியாயுள்ளது உடம்பு. நாவலர் பெருமான் இதனை வற்புறுத்துமிடத்து “இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்” என இரண்டாம் பால பாடத்தில் குறிப்பிடுவது கவனித்தற்குரியது. சமயநெறி நின்று ஒழுகுபவன் உள்ளத்திற் கொண்டிருக்க வேண்டிய இலட்சியத்தினை நாவலர் பெருமானின் கூற்றுத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய இலட்சியத்தினை அடைய மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆற்றக் கூடிய நல்வினைகளே சமயக் கிரியைகள் மனிதன் கருவிலே தோன்றி இறக்கும் வரை நிகழும் கிரியைகள் பூர்வக் கிரியைகள் என்றும் இறந்த பின் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் என்றும் சுட்டப்படுகின்றன.

மனிதனது பூர்வ வாழ்வில் செய்யப்படும் கிரியைகள் அவனது சமய அனுபவத்திற்கும் ஆன்மீக விடுதலைக்கும் வழி வகுப்பதைப் போன்று அபரக்கிரியைகள் அவனது ஆத்ம சாந்திக்கு இன்றியமையாதவையாகின்றன. ஒருவன் இறந்தபின் அவனது நன்மை கருதி அவனது பிள்ளைகள் முதலியோரால் செய்யப்படும் கிரியைகளே அபரக்கிரியைகள். அபரம் என்றால் “பிந்தியது” என்று பொருள்படும். இவ்வபரக்கிரியைகளைச் செய்வதனால் இறந்தவரது ஆன்மா பாசங்களினின்று நீங்கிச் சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கையாகும்.

அபரக்கிரியைகளுள் தகனக் கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் என்பன குறிப்பிடத்தக்கன. இவை உத்தரக்கிரியை, சிராத்தக்கிரியை என இரு வகையாக நடைபெறும். உத்தரக் கிரியைகள் இறந்தவுடன் அவ்வச் சந்தர்ப்பத்தில் நடைபெறுவன. சிராத்தக் கிரியை வருடமொருமுறை இறந்த திதியிற் செய்யப்படுவதாகும்.

இந்து மரபின்படி இறந்த ஒருவனுக்குச் செய்யும் அபரக்கிரியைகளில் அவனது மூத்த மைந்தனுக்குப் பெரும் பங்குண்டு. ஏனையோர் அவனோடு இணைந்து கிரியைகளில் ஈடுபடுவர். தர்மக் கோட்பாட்டின் படி ஒருவன் செய்த நல்வினை, தீவினைக்குத் தக்கதாகவே அவனுக்குரிய பிள்ளைகள் வந்து சேர்வர். தனது வாழ்நாளில் தனக்குக் கிடைத்த சரீரத்தினால் நல்வினைகளைச் செய்தவன் அபரக்கிரியைகளின் பலனைப்பெறுவான். அதற்கேற்ப அவனது நல்வினைப் பயன் காரணமாய் அக்கிரியைகளைச் செய்யத்தக்க புதல்வரையும் பெற்ற பாக்கியத்திற்குரியவனாவான். அத்தகைய புதல்வர்கள் இறந்தவர்களுக்குச் செய்யும் கிரியைகள் அவர்களுக்கு நன்மையளிப்பதற்குரியவையாகின்றன. வடமொழியிலே மைந்தனுக்குரிய பெயர் “புத்திரன்” என்பதாகும். ‘புத்’ என்பது நரகத்திற்குரிய பெயர் ‘திர’ என்றால் ‘நீங்கத்தக்கவன்’ எனப் பொருள் கொள்ளலாம். எனவே ‘புத்திரன்’ என்ற பெயர் நரகத்திற்குச் செல்லும் வேதனையினின்று நீக்கத்தக்கவன்’ என்ற பொருளைக் கொண்டுள்ளமை கவனித்தற்குரியது. இந்த உயர் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்து சமய மரபில் இறந்தோருக்கென ஆற்றப்பட வேண்டிய கிரியைகள் தவறாது செய்யப்பட வேண்டிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இது பிதிர்க்கடன் என்றும் ‘பிதிர் யக்ஞம்’ என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

மரணக் கிரியையில் தீமை நீங்கி நன்மையுண்டாவதற்குரிய கிரியைகள் இடம் பெறுவதோடு சரீரசுத்தி ஆன்மசுத்தி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டும் கிரியைகள் நிகழ்வன. சரீரத்தைச் சுத்தி செய்வதற்கென அபிடேகமும் சிவாக்கினியாற் சுடுதலும் நிகழும். ஆன்மசுத்திக்காகச் செய்யப்படும் கிரியையே அந்தியேஷ்டி எனக் கூறப்படுகின்றது. ‘அந்நிய’ என்பது இறுதியான என்ற பொருளிலும் ‘இஷ்டி’ என்பது யாகம் என்ற பொருளிலும் வரும் எனவே, இறந்தவர்க்காகச் செய்யும் ‘இறுதியாகம்’ என அந்தியேஷ்டியைக் கொள்ளலாம். இதனைச் செய்வதால் சமய அனுஷ்டானங்களில் நேர்ந்த குறைகள் தீரும்.

பிதிரர் உறையுமிடம் 'பித்ருலோகம்' எனச் சமய நூல்கள் சுட்டு கின்றன. ஒருவன் இறந்தவுடனேயே 'பித்ருலோகம்' சென்றடைவ தில்லை. பிறிதோர் பிறப்பும் உடனடியாக எடுத்துவிடுவதுமில்லை. இறந்து போனவரது சீவன் ஒரு வருடம் பிரயாணத்தின் பின்னர்தான் 'பித்ரு' ஸ்தானத்தை அடைகின்றது என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. இந்நோக்கம் நிறைவேறும் வரை ஒரு வருடகாலத்தில் அந்த ஆன் மாவின் திருப்திக்காக மாதா மாதம் பல சடங்குகள் இடம்பெறுவன. இந்து சமய சாத்திரங்களின் படி ஒரு சீவன் வைதரணி என்ற நதியை கடந்துதான் யமலோகம் செல்லவேண்டும் எனக் கூறப்படுவது போல, கிரேக்க சமய வரலாற்றின்படியும் (Mythology) ஒரு குறிப்பிட்ட நதியினைக் கடந்தே மறு உலகம் செல்ல வேண்டுமென்ற நம்பிக்கை நிலவுகின்றது. இந்து, கிரேக்க சமய மரபுகளை ஒப்பீட்டடிப்படையில் ஆராயுமிடத்து இத்தகைய ஒற்றுமையான நம்பிக்கைகளை அவதானிக்க முடிகின்றது. இறப்பிற்குப் பின்னுள்ள நம்பிக்கைகள் பற்றி இந்துசமயத் திருநூல்களில் பல்வேறுப்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வரிசையில் தொன்மையான சமய இலக்கிய மாகிய இருக்குவேதம் குறிப்பிடத்தக்கது. இவ் வேதத்தில் உள்ள பத்தாம் மண்டலத்தில் ஏறக்குறைய ஐந்து பாடல்கள் இறப்புப் பற்றி யும் இறப்புக்குப் பின் உள்ள வாழ்வு பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. (இ.வே. x *: 14 -18)*. இறப்புப்பற்றி ஒரு பாடல் தனியாகவே உள்ள (இ.வே. x *: 14)*. இப்பாடல் இறப்போடு தொடர்புடைய பல நம்பிக்கைகளைக் கூறுகின்றது. இறந்த உடலை அக்கினியின் மூலம் தகனம் செய்யும் முறை சிறப்பாகக் கொள்ளப்பட்டதை அறிய முடி கின்றது.

இம்முறையே இறப்புக்குப் பின்னுள்ள நிலைபற்றிய தெய்வீக வரலாற்றுக்கும் அடிப்படையாக அமைகின்றது. இறந்த உடலை அக்கினியே பிதிரரும் தேவரும் உறையும் மறு உலகுக்கு எடுத்துச் செல்வதாக இப்பாடல் கூறும். தகனக்கிரியையின் போது இறந்த உடலுக்கு பறவை, மிருகங்கள், எறும்பு அல்லது பாம்பு ஆகிய பிராணிகளால் யாதேனும் ஊறு விளைவிக்கப்பட்டிருப்பின் அதனை நீக்குமுகமாக அக்கினியும் சோமனும் வழிபடப்படுவர். மறு உலகுக் குரிய பாதை மிகவும் நீண்டதென்றும் இப்பாதையால் இறந்தோரைச் சவிதா என்ற தெய்வம் பாதுகாப்பதாகவும் கூறப்படுகின்றது. தனது மூதாதையோராகிய பிதிரர் சென்ற வழியே படிப்படியாகச் சென்று இறந்தவரது ஆன்மா ஒளியுடன் கூடிய உலகுக்குச் செல்வதாகவும் அங்கு யமனுடன் விளங்கும் பிதிரர்களைச் சந்திக்கும் என்றும்

இப்பாடல் கூறும்.

இருக்கு வேதத்தின்படி யமனே இறப்பிற்குரிய தெய்வம். யமன் தான் முதன்முதலாக இறந்தோருக்குரிய பாதையை வகுத்தவனாவான். இறப்பின்போது வழங்கப்படும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக் களிப் புறும்படி யமன் கூவியழைக்கப்படுவன். யமனோடு வருணன் என்ற தெய்வமும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக் களிக்கும் படி அழைக்கப்படுவன். தமது முன்னோர் சென்ற பாதையால் முன்னேறிச் செலும்படியும் சுவர்க்கத்தில் வாழும் பிதிரரோடும் யமனோடும் சென்று இணையும் படியும் இறந்தவர்களைக் குறித்துக் கூறும் வாசகங்கள் இப்பாடல்களில் உள்ளன. இறந்தவனுக்கு யமன் இளைப்பாறுவதற்குரிய இடத்தினை அளித்துள்ளதால் இறந்தவனுக்கு எவ்வித தீங்கும் இழைக்காது விடும்படி அசுரர்கள் கேட்கப்படுவதும் குறிப்பிடற்குரியது. இறந்தவர் செல்லும் பாதையை யமனின் இரு நாய்கள் பாதுகாப்பதாக நம்பப் பட்டது.

இருக்கு வேதத்தில் பிதிரரைக் குறித்துப் பத்தாம் மண்டலத்தில் பாடல்கள் இடம்பெறுகின்றன. (இ.வே. x: 15, x : 54). இவர்கள் மூன்றாம் உலகாகிய சுவர்க்கத்தில் வாழ்பவராகக் குறிக்கப்படுகின்றனர். இவர்களுக்குத் தொடக்கத்திற் சென்ற மூதாதையர் என்றும் தொன்மை யான பாதையால் சென்றவர்கள் என்றும் பின்னர் இறந்தோருக்கு அவர்கள் தம்முடன் சேரும் வகையில் பாதை வகுத்தவர்கள் என்றும் பெயர் குறிப்பிடப்படுகின்றது. பிதிரர் தமது உணவை அவிர்ப்பாக மாகப் பெறுவர். இந்த அவிர்ப்பாகத்தினால் வழிபடுவோரைப் பாதுகாப்பதாகவும் நம்பப்பட்டது. மனித நிலையில் அவர்களுக் கெதிராகச் செய்த எந்தப் பாவத்திற்காகவும் தமது வழித்தோன்றல் களைத் துன்புறுத்தாதிருக்கும்படி வேண்டப்படுவர். நல்ல வளத் தோடும் பிள்ளைப் பேற்றோடும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்காக அவர்களது ஆசியைப்பெறும் வகையில் அவரவரது மக்களால் பிதிரர் கள் வழிபடப்படுவர். பிதிரர்களுக்குரிய வழிபாட்டில் மங்களகரமான திக்குகள் மாறியும் வலப்புறத்தால் அமையும் விடயங்கள் இடது புறமாகவும் அமையும். பிதிரர்களுக்குரிய திக்கு தெற்கு. எனவே இவர்கள் தென்புலத்தார் என்று குறிக்கப்படுவர். அவர்களுக்குரிய அவிர்ப்பாகக் கிரியை தெற்குப்புறம் நோக்கியே செய்யப்படும் என்பதை இருக்குவேதம் குறிப்பிடுகின்றது.

இருக்கு வேதத்தில் இடம் பெறும் யமன் என்ற தெய்வத்தோடு தொடர்புடைய பாடல்களும் இறந்தோர் பற்றிய குறிப்புக்களைக்

கொண்டுள்ளன. ஏறக்குறைய மூன்று பாடல்கள் இருக்கு வேதத்தில் யமனுக்கென உள்ளன. இறந்தோரை ஆட்சி செய்பவனாக யமன் சித்திரிக்கப்படுவன். எனவே, இவனுக்கு “யமராஜன்” என்ற பெயர் சிறப்பாக அமைகின்றது. யமனுடைய பாதையே மரணம். இவன் பிதிரர்களுக்குத் தலைவன். யமனோடு சேருவதற்கு இறந்தவர் நல்வினைப் பயன்களோடும் வழிபாட்டினால் ஈட்டிய பலன்களோடும் செல்லவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது. இந்த நல்வினைப் பயன்களை இஷ்டாபூர்த்தம் என இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. ஒருவனது நல்வினைத் தேட்டமே இறப்பின் பின் மறு உலகில் உயர்ந்த பேற்றினை நல்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கைக்கு இருக்குவேதத்தில் இறப்புப் பற்றிய பாடலில் இடம்பெறும் இக்குறிப்புச் சிறந்த சான்றாக அமைகின்றது. இறந்த பின் தாம் பெற்ற நல்வினை தீவினைக்கேற்பப் பிறிதோர் இடத்தில் இன்பத்துடனோ அன்றி, துன்பத்துடனோ தொடர்ந்து இருக்கும் நிலை ஆன்மாவின் அழிவற்ற தன்மை பற்றிய நம்பிக்கையையே சுட்டி நிற்கின்றது. உடலை விட்டு நீங்கிய நிலையிலேயே மனிதன் மறுமையில் விடுதலை அடையக்கூடியதாயினும் இறந்த உடல் ஒருவனது எதிர்கால வாழ்வைப் பொறுத்தமட்டில் முக்கியத்துவம் பெறுவதாக வேதகாலத் தெய்வ இயலிலிருந்து அறிய முடிகின்றது. இறப்பின் பின் உள்ள நிலைபற்றி இருக்குவேதம் கூறும் சிந்தனைகளின் வளர்ச்சியாகவே கடோபநிடதம் அமைகின்றது. உபநிடதங்களுள் இப்புபநிடதம் மிகவும் முக்கியத்துவமுடையது. இவ்வுபநிடதத்தில் இடம்பெறும் நசிகேதனுடைய கதையிலிருந்து இறப்பின் பின் ஆன்மாவின் நிலை பற்றிய கருத்துக்கள் தெளிவு பெறுகின்றன. நசிகேதன் யம உலகுக்குச் சென்று யமனிடம் ஆன்ம விசாரணை செய்கின்றான். யமன் அவனுக்கு இது பற்றி உபதேசிக்கையில், சுவர்க்கத்திற்கோ மோட்சத்திற்கோ செல்வதற்குப் போதுமான நல்வினைகள் இல்லாதவன் இறப்பின் பிடிக்குள் விழுந்து சம்சாரச் சுழற்சியில் அவதியுறுகின்றான் என்றும் மீண்டும் மீண்டும் உடலோடு மறு பிறவியடைகின்றான் என்றும் எவனொருவன் தன்னைக் கட்டுப்படுத்துகின்றானோ அவனே உயர்நிலையை அடைகின்றான் என்றும் கூறுகின்றான். உபநிடதங்கள் சத்தியத்தை முறையாக உணர்ந்தவனே மோட்சத்தையும் முடிவில்லா அமைதியையும் மாற்றமில்லா இன்பத்தையும் அடைவான் எனக் கூறுகின்றன.

உடல் உயிரோடு இருக்கும்போதே ஆற்றவேண்டிய நற்கருமங்களைப் பற்றி நாயன்மார்களும் வற்புறுத்தியுள்ளனர். மனித உடலின் நிலையாமையைப் பற்றி சுந்தரர், ‘தோற்ற முண்டேல் மரணமுண்டு’

என்றும், 'வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்' என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வுடல் உயிருடன் இருக்கும் போதே செய்வதற்குரிய நல்வினைகளைச் செய்தல் வேண்டும் என்பதை,

**பறியேசுமந் துழல்வீர் பறிநரி கீறுவ தறியீர்**
**குறிகூவிய கூற்றங் கொளும் நாளால் அறம் உளவே**

என்ற பாடலால் வற்புறுத்துமிடத்து சுந்தரர் இலட்சியத்துடன் கூவிக்கொண்டு வரும் யமன் உயிரைக் கொண்டு போகும் நாளில் அறம் செய்ய முடியுமா? என வினவுகின்றார். நாட்கள் விரைவாகச் செல்ல யமதூதர்களும் வருவதற்கு முன்னமே விரைந்து சென்று சிவபெருமானுக்கு அடிமைப்பட்டுப் பிழையுங்கள் என அறிவுறுத்துகையில் "நாளோடிய நமனார் தமர் நுணுகாமுனம் நுணுகி ஆளாயுய்மின்" எனக் கூறுகின்றார்.

மீளாத் துயருக்கு நிலைக்களனாகவுள்ள பிறவியை வேண்டேன் என்று கூறுமிடத்து,

**மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய்தந்தை சுற்றம்**
**பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்.**

எனக் குறிப்பிடுகின்றார். சுந்தரர் பிறவா நிலைச் சிறப்பினையும் பிறப்புண்டேல் அப்பிறப்பில் உடம்பாற் செய்ய வேண்டிய நல்வினைகளின் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மனிதனது உயிர் பிரிந்த பின் அவ்வுடல், தகிக்கப்படும் இடமே சுடலை. இறந்தோரது உடல் சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்டவுடன் அங்கு நிகழ்வது சுடலைக்கிரியையாகும். காரைக்காலம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களுள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் சுடலையைப் பற்றியும் அதில் இறைவன் நின்றாடும் பாங்குபற்றியும் சித்திரிப்பதிலிருந்து சைவ மரபில் அதற்கும் ஒரு தெய்வீக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. காரைக்காலம்மையார் திருக்கயிலையினின்றும் பேய் வடிவுடன் இறைவன் ஆணைப்படி திருவாலங்காட்டினை அடைந்த போது அங்கு தாம் கண்ட காட்சியின் நிலையை உள்ளவாறே பாடியருளிய இத்திருப்பதிகத்தின்,

**புந்தி கலங்கி மதிம யங்கி**
**இறந்தவ ரைப்புறங் காட்டி லிட்டுச்**
**சந்தியில் வைத்துக் கடமை செய்து**

**தக்கவர் இட்டசெந் தீவி ளக்கா**
**முந்தி அமரர் முழவின் ஓசை**
**திசைகது வச்சிலம்(பு) ஆர்க்க ஆர்க்க**
**அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்**
**அப்பன் இடம்திரு வாலங் காடே.**

எனக் குறிப்பிடுமிடத்து ஈமக்கிரியைகளுக்கு நிலைக்களனாகவுள்ள சுடலையை நினைவு படுத்துகின்றார். காடு, சுடலை, ஈமமிடு சுடுகாடு, புறங்காடு போன்ற பெயர்கள் அம்மையாரின் மூத்த திருப்பத்திகத்தில் இடம்பெறுவன.

சுடலைக் காட்சியினையடுத்துத் திருவிரட்டை மணிமாலையில் ‘இறந்தபின் சுடலையைச் சேருமுன் சிவபெருமானின் திறத்தினை ஆழ்ந்த கருத்துடன் இன்புடன் கேட்பாயாக’ என அறிவுறுத்துமிடத்து.

**உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்**
**செத்தமரம் அடுக்கித் தீயாமுன் - உத்தமனாய்**
**நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே**
**கேளாழி நெஞ்சே கிளர்ந்து**

எனக் கூறுவர்.

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

எனக் குறள் கூறும் கருத்துக்களும் இங்கு ஒப்புநோக்கற்பாலன. பிறவிப் பெருங்கடல் நீங்குவதற்கு இறைவன் திருவருளை உடல் சுடலையைச் சென்றடையும் முன்னரே வலிந்து பெற்றுய்தல் வேண்டும் என்ற கருத்தினைச் சமய நூல்கள் வற்புறுத்துகின்றன. அவற்றுள் காரைக்காலம்மையாரின் பிரபந்தங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன.

பிரஸ்தானதிரயத்துள் ஒன்றாகிய கீதையும் இறப்புப் பற்றிய சிந்தனைகளைத் தெளிவுபடுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்கும் கருத்துக்களும் இறப்பினையும் அதற்குப் பின்னுள்ள நிலையினையும் தெளிவுபடுத்துவன. மரணம் என்பது உயிரைப்பற்றிய தல்ல. உடலுக்குத்தான் மரணம் ஏற்படுகின்றது. உயிர் எனப்படும் ஆன்மா அழிவில்லாதது. உடலுக்கு அழிவு திண்ணமாக ஏற்படுகின் றது. இளமை, முதுமை, என்ற நிலைகளைப் போல மரணம் என்பதும்

ஒரு நிலையேயாகும். இதனை எண்ணிப் பார்க்கும் அறிவாளி சாக் காட்டினைக் கண்டு வருத்தப்பட மாட்டான். இவ்வாறு இறப்பு, இறவாமை பற்றிப் பகவான் உபதேசிக்குமிடத்து உடலுக்கு ஏற்படும் மரணம் ஆன்மாவின் முன்னேற்றத்தில் ஒரு நிலையாகும் என்பது தெளிவாகின்றது.

மரண பயத்தை நீக்கும் வகையிலும் கீதையில் உபதேசிக்கப்படு கின்றமை கவனித்தற்குரியது. பயத்தை நீக்குவதே தத்துவ அறிவின் முதல் நோக்கம். 'கர்மயோகத்தினை ஓரளவு கடைப்பிடித்தாலும் சம்சாரச்சூழல் என்னும் பேரச்சத்திலிருந்து உன்னைக் காப்பாற்றிவிடும்' என்ற உபதேசமும் குறிப்பிடத்தக்கது. 'பயமற்ற பெருநிலையே மோட்சம்' எனப் பிருஹதாரண்ய உபநிடதம் கூறும். "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம்" என நாவுக்கரசர் கூறுவதும் பயநீக்கம் கருதியேயாகும்.

பிறப்பினின்றும் விடுதலை பெறக் கீதை கூறும் பிறிதோர் வழியும் இங்கு குறிப்பிடற்பாலது. அது கர்மயோகத்தினைப் பின்பற்றி ஒருவன் கர்மசந்நியாசியாக வாழவேண்டுமென்பதை வற்புறுத்துகின்றது. கருமத்தின் பயனாகவே புண்ணியமும் பாவமும் தொடர்கின்றன. இவற்றின் காரணமாகவே மனிதன் பிறப்பு, இறப்பு என்னும் சம்சார பந்தத்தில் சிக்கி அல்லற்படுகின்றான். இத்துயரிலிருந்து மீள்வதற்கா கவே கருமயோகத்தின் சிறப்பு வற்புறுத்தப்படுகின்றது. சாதாரண கருமத்திற்குப் புண்ணிய பாவமென்னும் தளைகள் உண்டு. பலனில் ஆசை வைக்காமற் செய்யப்படும் கருமத்திற்குத் தளைகள் கிடையா. பயன்கருதாமலே கருமத்தைச் செய்யும் சாதகனுக்கு எவ்வித தளை களும் விலகிப் போவதால் சம்சாரத்தில் துன்புறும் அவலநிலை ஏற்படு வதில்லை. இறுதியில் அவன் இறைவனடி சேர்வான். கருமப்பல தியாகத்திற்கு ஒருவன் பற்றற்ற உள்ளம் கொண்டவனாகவும் இருத்தல் அவசியம். இன்பத்திலும் துன்பத்திலும் மாறாத தன்மையுடையவனே கருமயோகி எனக் கீதை காட்டுகிறது. இவனே ஆசையை அகற்றியவன் எனவும் அது கூறும். இன்ப துன்பங்களை ஒப்ப நோக்குதல் இருவினை ஒப்பாகும். இந்நிலையைப் பெரியபுராணம்,

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**

எனச் சிறப்பிக்கின்றது.

மனநிலை பண்படைவதற்கு கருமயோகம் துணைநிற்கின்றது. “கடமையைச் செய். பலனை எதிர்பாராதே” என்ற கீதை உபதேசத்தில் உயர்ந்த தத்துவப் பொருள் அடங்கியுள்ளமை உய்த்து உணரற்பாலதாகும். இத்தகைய உபதேசங்கள் ஆஸ்திகளின் உள்ளத்தில் எழும் மரணபயத்தினை நீக்குவதற்கு அருமருந்தெனத் துணை புரிந்து வந்துள்ளமை கவனத்தற்குரியது.

சமய சாஸ்திரங்களில் இறந்தவர்களது உடலுக்குச் செய்யும் காரியம் பிரேதசம்ஸ்காரம் எனச் சுட்டப்படுகின்றது. சம்ஸ்காரம் என்ற சொல்லுக்கு இங்கு சிந்தனைக்குரியது. சம்ஸ்காரம் என்றால் “நன்றாக ஆக்குவது” என்பது பொருளாகும். இறந்தபின் பிரேதத்திற்குச் செய்யும் சேவை மிக உயர்ந்த கைங்கரியமாகக் கூறப்படுகின்றது. இறந்த உடலை அடக்கமோ அன்றித் தகனமோ செய்வது மிகவும் அவசியமான கடமையென வற்புறுத்தப்படுகின்றது. அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்வதும் இன்றியமையாதது. சீவாத்மாவுக்குப் பதினாறு கலைகள் உண்டென்றும் அவற்றுள் உடம்பு ஒரு கலை என்றும் எனவே உயிர்போன பின்னும் ஒரு கலையாக உள்ள அந்த உடலை ஈஸ்வர அர்ப்பணமாக்கவே பிரேத சம்ஸ்காரம் தேவைப் படுகிறது என்ற கருத்தும் இங்கு கவனித்தற்குரியது. இதிலிருந்து உடலின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. “காயமே கோயிலாக” என அப்பரின் வாக்கும் உடலின் பெருமையைக் கூறும் அறம், தர்மம் ஆகிய நல்வினைத் தேட்டத்திற்குச் சாதனமாக அமைவது உடலேயாகும்.

திருமூலரும் திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றார். யோக நெருப்பினால் தவத்தீயினால் ஒளிவிடும் உடம்பு திடீரென்று அழியாது, நம் தெய்வ முயற்சிக்கு நெடிது உதவும் என வற்புறுத்தி, விரத ஞானங்களால் உடம்பொடு கூடிய இல்வாழ்க்கையை ஒளிபெறச் செய்யுங்கள் என உணர்த்துமிடத்து,

**பண்டம் பொய்க் கூரை பழகி விழுதலால்**
**உண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்**
**கொண்ட விரதமு ஞானமு மல்லது**
**மண்டி யவருடன் வழிநட வாதே**

எனக் கூறுகிறார்.

நல்வினைத் தேட்டத்திற்கு உடல் காரணமாக அமையும் சிறப்புப் பற்றியே இறந்தபின் உடலுக்குரிய சம்ஸ்காரங்கள் முறையாகச்

செய்யப்பட வேண்டுமென்பதை இந்து சமயநூல்கள் வற்புறுத்து கின்றன.

உலகின் ஏனைய தேசங்களில் வாழும் பல்வேறு இன மக்களிடையே இறப்புக்குப் பின் இடம்பெறும் சமயச்சடங்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பிரேத சம்ஸ்காரம் பெரும் சமயச் சடங்காகவே அமைந்து விடுகின்றது. ஒருவன் நன்மைகளைத் தன் சரீரத்தால் செய்த காரணத்தினாலேயே உயிர் பிரிந்த பின்னும் அந்தச் சரீரத்திற்கு இறுதி மரியாதை செலுத்தும் மரபு இருந்து வருகின்றது. சைவசித்தாந்தத்தின் படி எமது தீவினைப் பயன்களைப் போக்கிக் கொள்வதற்கு என இறைவன் தனு, கரண, புவன போகங்களைத் தந்தருளியுள்ளார் என்ற நம்பிக்கையுள்ளது. எனவே, ஓர் உடல் இறைவன் தந்த ஒரு பிரசாதமா கவே அமைகின்றது. இக்காரணம் பற்றியே மானிடப்பிறவி உயர்ந்த தாகச் சிறப்பிக்கப்படுகின்றது. அத்தகைய உடலைக் கரணங்கள் ஓய்ந்த பின்னும் அதற்குரிய மரியாதை வழங்கி இறைவனிடம் இறுதியாக வேள்விப் பொருளாக்கும் வகையில் அக்கினியில் தகனம் செய்யப்படுகின்றது. இதைச் செய்ய வேண்டிய பொறுப்பு இறந்த வரது நெருங்கிய உறவினர்களைச் சார்ந்ததாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

புராதனத் தமிழ் மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளுள் இறந்த வர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகள் வீரவணக்கம் தோன்ற வழிவகுத்தது என்பது அறிஞர் கருத்தாகும். தென்னகத்தில் காணப் படும் பெருங்கல் வளைவுப் புதைகுழிகள் (Megalithic Monuments) மூலம் இறந்தவரை அடக்கம் செய்வதில் அச்சமுதாயத்தினர் எத்துணை சிரத்தை காட்டினர் என்பதை அறிய முடிகின்றது. பெருங்கற்களைக் கொண்டு வட்டமாக வளைக்கப்பட்ட இடங்களே அக்கால 'மயானங் கள்' எனலாம். இவற்றை நோக்கும்போது மிகப் பழைய காலத்தி லிருந்தே இறந்தவரை அடக்கம் செய்வதிலும் அவர்களது தேவைக் காகப் பொருள்களைப் படைப்பதிலும் பண்டைக்கால மக்கள் காட் டிய ஈடுபாட்டினை அறிய முடிகின்றது. புராதன மனிதன் நடைமுறை அனுபவத்தின் அடிப்படையில் அவன் உடம்பு வேறு உயிர் வேறு எனப் பிரித்தறியும் நிலையில் இல்லை. உடலையும் உயிராக மதித்த நிலையிலேயே தாழி, கல்லறை முதலியவற்றுள், ஆயுதங்கள், உணவுப் பொருட்கள், கலன்கள் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டுமென அறிஞர் கருதுவர். இவ்வகையில் புராதன மூதாதையர் வழிபாடு சிறப் புப் பெறுகின்றது. பழந்தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகிய வீரவணக்கம் பண்டைத் தமிழரின் இழவு வினைகள், பிரேத அடக்க

முறை முதலியவற்றுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளதாக அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்து சமய மரபிலும் தகனத்தின்பின் அஸ்தியைச் சேர்த்துத் தீர்த்தம் சிறப்புப் பெற்ற இடங்களில் கரைத்துத் தெய்வீக நிலையை அடையச் செய்யப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதனையடுத்துச் செய்யப்படும் பாஷாணபூசை உள்ளிட்ட ஏனைய கிரியைகளாலும் ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது. இத்தகைய கிரியைகள் ஆன்மாவுக்குத் திருப்தியையும் சாந்தியையும் அளிப்பன என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. பிரபூதபலி பிண்ட வடிவில் இறந்தாரை வழிபடுதல், பிதிர் வடிவமாக ஆக்கும் சபிண்டீகரணம், தானம் போன் றவைகளும் ஆன்மாவுக்குரிய பலனை நல்குவன. இறந்தவர்க்கென நிகழும் கிரியைகள் ஒவ்வொரு மாதத்திலும் நாற்பத்தைந்தாம் நாளி லும் ஆறாம் மாதத்திலும் வருடக் கடைசியிலும் இடம்பெறத்தக்கன. இதனைத் தொடர்ந்து வருடந்தோறும் இடம்பெறுவது சிரார்த்த மாகும். அவரவர் இறந்த நாளாகிய சிராத்தத்தை விட அமாவாசை, பூரணை ஆகிய நாட்களிலும் பிதிரர்களுக்குரிய வழிபாடு நிகழும்.

இவ்வாறாக இந்து சமய மரபில் இறந்தவர்களுக்கென நிகழும் கிரியைகள் அவரவரது ஆன்மாவைப் புனிதப்படுத்திச் சாந்தியடைய வும் திருப்திகொள்ளவும் துணைபுரிவன. கிரியை செய்வோர் சிரத்தை யோடும் அன்போடும் செய்யவேண்டிய சிறப்புக் கருதியே சிராத்தம் என்ற பெயரும் பொருத்தமாக அமைந்துள்ளது. சிராத்தம் செய்யும் போது எள்ளும் தண்ணீரும் இறைத்தல் இறந்த பிதிர்கள் நற்கதியையும் திருப்தியையும் அடைவதற்காகச் செய்யப்படுவதாகும். இந்நாளில் ஏழைகள், அநாதைகள் ஆகியோருக்கு உணவளித்தல், சிராத்த முடிவில் குருவின் ஆசிபெறுதல் ஆகியவை முக்கியமாகும். விவாகம் போன்ற மங்கள காரியம் நடைபெறும் போது அக்குடும்பத்துக்கு முன்னோரது ஆசிவேண்டிப் பிதிரர் வழிபாடும் தானம் வழங்கும் மரபும் உள்ளது. இவ்வகையால் செய்யப்படும் கிரியைகள் பிதிரர் சாபத்தை நீக்கி நல்வாழ்வு பெற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. இந்துசமய மரபில் அபரக்கிரியைகள் ஒருவனது ஆன்ம ஈடேற்றத்திற் குத் துணைபுரியும் காரணத்தால் காலங்காலமாகச் சிரத்தையோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். ஒவ் வொரு தலைமுறையையும் இணைக்கும் சிறந்த சாதன மாகவும் இக் கிரியைகள் விளங்கி வருகின்றன.

உ
சிவமயம்

# சைவ சமய அபரக் கிரியைகள்

## I. உயிர் பிரியுமுன் செய்யும் கிரியைகள்

**I. முன்னுரை:**

சைவ சமயிகள் இறந்தவர்களுக்குச் செய்யும் கருமங்கள், சைவசமய அபரக் கிரியைகள் அல்லது ஈமக்கடன்கள் எனப்படும். சைவர்கள் ஒருவரது உயிர் பிரியும் இறுதிக்காலத்தில் அவருக்காக நடாத்தும் கிரியைகளும் அவரது உயிர் பிரிந்தபின் அந்த உயிர் குடி இருந்த உடலுக்கும், பிரிந்த உயிருக்கும் செய்யும் கருமங்களும் அபரக் கிரியைகளில் அடங்கும்.

இக்கடன்களைப் பக்தி சிரத்தையுடன் நிறைவேற்றுவதால்

i. உயிர் உடலை விட்டுச் சுமுகமாகப் பிரியும்,

ii. பிரிந்த உயிர் தான் அடைய வேண்டிய அடுத்த நிலையை எளிதாகச் சேரும்.

iii. அந்த நிலையில் எவ்விதக் கலக்கமும் இன்றிச் சாந்தி பெறும்.

இவ்வாறு அமைதி பெற்ற உயிர் தான் முன்னர் கூடி வாழ்ந்து விட்டுப் பிரிந்த குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஒரு கவசம் போல் பாதுகாப்பாக இருக்கும், அது, அவர்களைத் துன்பம், நோய், அவமரணம் போன்றவற்றில் இருந்து காப்பதுடன் நீண்ட ஆயுள், மக்கட்செல்வம், பொருட் செல்வம் போன்ற நன்மைகளையும் தரும். பூமியில் தேவையான மழையும் வளமும் நன்மையும் பெருகும்.

விநயத்தோடு இந்தக் கருமங்களை ஆற்றும் குடும்பத்தினர் இம்மை - மறுமைகளில் நற்பயன்களை அடைவர். அவர்களது இழப்பு, துயரம் ஆகியவற்றில் இருந்து விரைவில் மீளவும் இவை உதவும்.

**2. உயிர் பிரியுமுன்**

**2.1 அந்தியக் கிரியைகள்**

ஒருவரது ஆன்மா பிரிவதற்குச் சிறிது நேரம் முன்னதாகச் செய்யும் கிரியைகள் அந்தியக் கிரியைகள் எனப்படும். இதனை எல்லோருக்கும்

செய்ய இயலாது. பல காலம் நோய் அல்லது முதுமை காரணமாகத் துன்புறும் ஒருவரது உயிர் பிரியும் வேளை நெருங்கிவிட்டது என்ற நிலையிலேயே இக்கிரியைகள் நடத்தப்படும். இவை மூன்று பகுதிகளில் அடங்கும்.

### 2.1.1 இறைநினைவு ஊட்டல்

இக்கிரியை மூலம் உயிர் நிலையற்ற உலக வாழ்வு, பந்தங்கள் ஆகியவற்றை மறந்து இறைவனைப்பற்றிச் சிந்திக்க வைப்பதால் இது அத்தியாவசியமாகிறது.

பிரியும் ஆன்மா என்ன நினைப்புடனும் உணர்வுகளுடனும் நீங்குமோ, அதற்கேற்பவே அதன் அடுத்த நிலை அமையும் எனச் சாத்திரங்கள் விளக்குகின்றன. இறைச் சிந்தனையுடன் செல்லும் உயிர் இறைவனது இனிய நிழலையே நாடும். இறை நாட்டம் உலகபந்தங்களை வலு விழக்கச் செய்யும்: இதனால் பிறவிகள் ஒடுங்கி விரைவில் வீடுபேறு கிட்டும். எனவே கீழ்காணும் கிரியைகள் நடத்தப்படுகின்றன.

i. இறப்பவர் நெற்றியில் விபூதி அணிதல் (இயன்றால் வில்வமரத்தடி மண்ணை உடல் முழுவதும் பூசி விடுதல்)

ii. இறப்பவர் செவியில் பஞ்சாட்சர மந்திரத்தை மென்மையாக ஓதுதல்.

iii. தேவாரம் (நமச்சிவாயப் பதிகங்கள்), திருவாசகம் (யாத்திரைப் பத்து, வாழாப்பத்து) போன்றவற்றை நோயாளியின் காதுகளில் விழும்படி மென்மையாகவும் அமைதியாகவும் இசையுடன் பாடுதல்.

### 2.1.2 பால் வார்த்தல்

இது மூச்சு அடங்குமுன் அருகில் இருக்கும் மக்கள்-மருமக்கள், நெருங்கிய உறவினர் ஆகியோர் இறப்பவர் வாயில் சிறிது பாலை ஊட்டுதல். பாலைக் காய்ச்சி ஆற வைத்து, சிறு கரண்டியினால் ஊட்ட வேண்டும். சில வேளைகளில் சற்றுத் தொலைவில் வாழும் உறவினர்களும் இக்கடமையை ஆற்ற அழைக்கப்படுவது உண்டு.

இக்கிரியை, பிரியும் ஆன்மாவுக்குத் திருப்தி அளிக்கும் எனக் கருதப்படுகிறது. இதனைச் செய்பவர்களுக்குத் தமது கடமையை ஆற்றிய நிறைவு ஏற்படுகிறது.

### 2.1.3 தானம் கொடுத்தல்

இது முறைப்படி வேதபாராயணம் செய்யும் உத்தம பிராமணருக்குக் கொடுக்கப்படுவது. இதனைத் தூய மனத்துடனும் பக்தி சிரத்தையுடனும் செய்தால் பிரிந்து செல்லும் ஆன்மாவின் நீண்ட பயணத்தில் தெப்பம் போல் உதவும் என்பர்.

குறிப்பு: இவற்றில் 1.1 மிக முக்கியமானது.

### 3. சிறுவர்களுக்கான அபரக் கிரியைகள்

i. உயிரற்றுப் பிறந்த குழந்தை எந்த ஆரவாரமும் இன்றி அடக்கம் செய்யப்படும்.

ii. பிறந்து 3 வயதுக்குள் இறந்த குழந்தை நீராட்டி, ஆடை, மலர்கள் போன்றவற்றால் அலங்கரித்து, திருமுறைகள் ஓதி அடக்கம் செய்யப்படும். சவக்குழிக்கு உள்ளும், மூடிய பின் அதன் மேலும் பால் தெளிப்பர்.

iii. மூன்று வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களுக்கும் வயதுக்கு வராத பெண்களுக்கும் திரவிய அபிஷேகம், மலர் அலங்காரம் செய்து தகனம் செய்யலாம். ஆனால் அந்தியேட்டி செய்வதில்லை.

iv. வயது வந்த பெண்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் இந்நூலில் கூறப்பட்டுள்ள கிரியைகள் செய்யலாம்.

### 4. கர்ப்பிணிக்கான அபரக் கிரியைகள்:

கருவுற்றிருக்கும் பெண் இறந்தால் இந்நூலில் கூறப்பட்டிருக்கும் கிரியைகள் செய்யலாம்.

ஆனால் குழந்தையைக் காப்பாற்றும் முயற்சி காரணமாகவோ வேறு சந்தர்ப்பத்தாலோ குழந்தை தாயிலிருந்து பிரிக்கப்பட்டு விட்டால் இருவருக்கும் வெவ்வேறாக, ஏற்ற கிரியைகள் செய்யப்படும்.

### 5. துர்மரணமுற்றவர்களுக்கான அபரக் கிரியைகள்

கர்ப்பிணி உட்பட இயற்கைக்கு மாறான விதத்தில் ஒருவர் இறந்தால் (கொலை, தற்கொலை, விபத்து போன்று) அவருக்குக் குருக்கள் கிரியைகள் செய்வதில்லை.

குறிப்பு: ஆனால் எல்லோருக்கும் தொடக்கு உண்டு. எனவே தொடக்குக் காலத்தின் இறுதி நாள் புண்ணியாக வாசனம் செய்யப்பட

வேண்டும். சைவர்களின் மூல ஆகமங்களில் ஒன்றான காமிக ஆகமம், ஆசௌச நியமம் என்னும் பகுதியில் ஆசௌசம் பிராமணர்களுக்கு 10 நாட்களிலும் சத்திரியர்களுக்கு 12 நாட்களிலும் வைசியர்களுக்கு 15 நாட்களிலும் நல்லொழுக்கமுள்ள பிறருக்கு 30 நாட்களிலும் கழியும் எனக் கூறுகிறது. மேலும் சுயம்பூவ ஆகமம், தருமசாத்திரங்கள், சைவாகமங்கள் கூறும் நியமங்களைச் சுருங்கக் கூறும் ஆசௌச தீபிகை போன்ற நூல்களிலும் இவ்விதி வலியுறுத்தப்பட்டுள்ளது.

## II. உயிர் பிரிந்ததில் இருந்து தகனம் வரை

**I. இறந்த உடனே செய்ய வேண்டியன.**

உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் பலவகை ஏற்பாடுகள் கவனிக்கப்பட வேண்டும்.

**I.I. உடல் சம்பந்தமானவை.**

i. கை,கால்களை நீட்டி, வாய், கண்களை மூடி, சாதாரணமாகப் படுத்திருப்பது போல் உடல் இருப்பதை உறுதிப்படுத்தவும்.

ii. அவசியமானால் உடலைத் துடைத்து, ஆடைகளை மாற்றவும்.

iii. இரு கைகளையும், வயிற்றின் மேல் சேர்த்து வைக்கவும். (தேவையானால் இரு பெருவிரல்களையும் ஒரு வெள்ளைத் துண்டால் கட்டலாம்.) கைகளுக்குள் சிறிது தருப்பையும் துளசியும் வைக்கலாம்.

iv. வாய் திறந்தபடி இருந்தால் ஒரு வெள்ளைத்துண்டை மோவாய்க் கட்டை (தாடை) யின் கீழ் வைத்து, இரு முனைகளையும் தலையில் முடிச்சுப் போடவும்.

v. காலின் இரு பெருவிரல்களையும் சேர்த்து வெள்ளைத் துண்டால் கட்டவும்.

vi. திருநீற்றை நெற்றியில் மூன்று கோடுகளாகவோ (திரிபுண்டரம்) நெற்றி நிறையவோ (உத்தூளனம்) பூசவும்.

vii. சந்தனம், குங்குமத்தால் பொட்டு வைக்கவும் (விதவைகளுக்குக் குங்குமம் இடுவதில்லை).

viii. மலர்மாலை அணிவிக்கலாம். விதவைகளுக்குத் துளசி மாலையே பயன்படுத்தப்படும்.

xi. சில குறிப்புகள்:

அ. தேவைப்பட்டால், மூக்குத் துவாரங்களைச் சுத்தம் செய்து

பஞ்சு வைக்கலாம்.

ஆ. வயிறு உப்பாமல் இருக்கக் கல்(கடல்) உப்பைச் சிறு பொட்டலங்களாகக் கட்டி வயிற்றின் மேல் வைக்கலாம்.

**1.2. வீடு சம்பந்தமானவை:**

இது துயரமான, துக்கம் காக்கப்பட வேண்டிய நிகழ்வு என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

i. வாசலில் கட்டப்பட்டிருக்கும் மாவிலைகளை அகற்றவும்.

ii. குளிப்பாட்டப்படும் வரை உடலை வளர்த்தி வைக்கும் அறையைத் தக்கபடி ஒழுங்கு செய்யவும்.

அ. சுவர்களில் தொங்க விட்டிருக்கும் படங்களை அகற்றவும், அல்லது சுவரைப் பார்த்தாற் போல் மாட்டவும்.

ஆ. மேசை - நாற்காலிகளை அகற்றவும்.(இதனால் பலர் அங்கு அமர வசதியாய் இருக்கும்)

இ. உடலை வளர்த்துவதற்குத் தகுந்த உயரமுள்ள ஒரு விசுப் பலகை (வாங்கு), அல்லது கட்டிலைப் பயன்படுத்தவும்.

ஈ. அதன் மேல் வெள்ளை விரிப்பை விரித்து, முடிந்தால் சில தருப்பைகளை நுனி, மேல் நோக்கும்படி பரப்பவும்.

iii. பாரம்பரிய வழக்கமாக இல்லாவிட்டாலும், துக்கம் விசாரிக்க வருவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையும் எழுதுவதற்கு ஒரு புத்தகமும் பேனாவும் தகுந்த இடத்தில் வைக்கலாம்.

**1.3. உடலை வளர்த்துதல்**

i. உடலை எடுத்துச் செல்லும் போது கால்கள் முன்னே செல்ல வேண்டும்.

ii. வடக்குப் பார்த்தபடி உடைலை வளர்த்தவும். அறையின் அமைப்பு அதற்கு ஏற்றதாக இல்லாவிடின் கால்களை வாசலுக்கு நீட்டியபடி வளர்த்தவும்.

iii. இயன்றால் சில தருப்பைப் புற்களைத் தலைக்கு அடியில் வைக்கவும்.

iv. உடலைக் கழுத்து முதல் கால் வரை வெள்ளைத் துணியால் மூடவும்.

v. தலைமாட்டில், ஒற்றைத் திரி கொளுத்திய குத்துவிளக்கை வைக்கவும்.

vi. உடலை மூடியுள்ள துணியில் பன்னீர் அல்லது ஓடிகொலோன் தெளிக்கவும்,

vii. ஊதுபத்தி, சாம்பிராணி பயன்படுத்தவும்.

viii. உடல் பழுதுபடாதிருக்க வறண்ட பனிக்கட்டிகளை (Dry Ice) வெள்ளைத் துணியின் கீழ் வைக்கலாம்.

### 1.4. வழிபாடு

இச்சூழலில் திருமுறைகள் பாடுதல், பஞ்சாட்சர மந்திரம், மிருத்தியுஞ்ஜய மந்திரம் (ஓம் திரியம்பகம்) போன்றவற்றை ஜபித்தல் இறந்தவருக்காக நடத்தப்படும் வழிபாடு ஆகும்.

i. மரியாதை செலுத்த வருவோருக்காகச் சிறிது இடம் விட்டு, எல்லோரும் உடலைச் சுற்றி அமர்ந்து வழிபடுதல் வேண்டும்.

ii. வழிபாட்டின் பொழுது பிற ஒலிகள் இருத்தல் கூடாது.

iii. பாடல்கள் / மந்திரங்கள் தனி ஒருவராலோ, எல்லோரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனையாகவோ பாட/செபிக்கப்படலாம்.

இவ்வழிபாடு இறந்தவரது ஆன்மா சாந்தியடையவும் அவரைப் பிரிந்தவர்களது துயரம் குறையவும் உதவும்.

### 1.5. கொள்ளிவைப்பவர் (கிரியா கர்த்தா)

கிரியா கர்த்தா கீழ்க்காணும் உரிமை நிரலின்படி நிச்சயிக்கப்படுவர்.

i. மகன்
ii. கணவன்/மனைவி
iii. மகள்
iv. அண்ணன்
v. தம்பி
vi. சகோதரனின் மகன்
vii. தந்தை
viii. தாய்
ix. மருமகள் (மகனின் மனைவி)
x. சகோதரி
xi. சகோதரியின் மகன்
xii. தந்தை வழி உறவினன்
xiii. தாய் வழி உறவினன்
xiv. சிஷ்யன்

xv. குரு
xvi. மருமகன் (மகளின் கணவன்)
xviii. நண்பன்

இவர்களில் மகனே, முதல் உரிமை உடையவர். ஆனால், நோய், தூர தேச வாசம், மனைவி கருவுற்று இருத்தல், மகப்பேறு போன்ற காரணங்களால் அவர் கிரியைகள் செய்ய இயலாவிட்டால், பட்டியலின் படி அடுத்தவர் அவற்றைச் செய்யலாம். தந்தைக்கு மூத்த மகனும் தாய்க்குக் கடைசி மகனும் செய்வது மரபு. சுமங்கலி இறந்தால் கணவனும், திருமணமாகாத மகனோ, மகளோ இறந்தால் தந்தையும் காரியங்கள் செய்வர்.

## 2. வீட்டில் செய்யப்படும் இறுதிச் சடங்குகள்

பொதுவாக இச்சடங்குகள் சைவ மரபுகளை நன்கு அறிந்த சைவக் குருக்களின் துணையோடு நடத்தப்படும். உடலை முறைப்படி நீராட்டுதலும் பிற கிரியைகளும் பிரிந்த உயிர் வாழ்நாளில் செய்த பாவங்களின் பலனைக் குறைத்து, அவற்றால், அதன் பயணத்தில் ஏற்படக்கூடிய தடைகளை விலக்கி, இவ்வுலகில் கொண்டிருந்த தூல உடலைப் பிரிந்து செல்லும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, மங்கலமாக்கி, சூக்கும உடலை எடுத்து அமைதி பெற உதவுகின்றன என நம்பப்படுகிறது.

### 2.1 ஏற்பாடுகள்

i. இக்கிரியைகளுக்குத் தேவைப்படும் பொருள்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது (இணைப்பு 1). கிரியைகளை நடத்தும் குருக்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.
ii. இக்கிரியைகள் வீட்டுக்கு வெளியே செய்யப்படுவன. எனவே வளவுக்குள், முடிந்தால் வீட்டு வாசலைத் தவிர்த்து, தகுந்த ஓர் இடத்தைப் பயன்படுத்தலாம்.
iii. கிரியைகள் செய்யும் இடத்திற்கு மேல் வெள்ளை(த் துணி) கட்டி, தோரணம் (3 வெட்டுக்கள் மட்டும் உள்ள தென்னங் குருத்து), புறப்பக்கமாக மடித்த மாவிலை ஆகியவற்றால் அலங்கரிக்கவும்.
iv. கும்பங்கள், உரல் - உலக்கை, கொள்ளிக் குடம் போன்றவற்றைக் குருக்கள் கவனிப்பார்.
v. ஒரு பெரிய தட்டில் “அபிஷேகப் பொருட்களை” வைக்கவும்

1. பஞ்ச கவ்வியம் - பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகிய வற்றின் கலவை.(கிடைத்தால்)
2. நல்லெண்ணெய்
3. எலுமிச்சம் பழம்
4. சீயக்காய்த் தூள்
5. மாக்காப்பு (தண்ணீரில் குழைத்த அரிசிமா)
6. மஞ்சள் காப்பு (தண்ணீரில் குழைத்த மஞ்சள் தூள்) இரச பஞ்சாமிர்தம் - பால், தயிர், நெய், சர்க்கரை, தேன் ஆகியவற்றின் கலவை.(பால், தயிருக்குப்பதில் பழங்களைப் பயன் படுத்தலாம்).
8. பால்
9. தயிர்
10. நெய்
11. தேன்
12. கரும்புச் சாறு
13. பழங்கள் (பொதுவாக ஆரஞ்சு)
14. இளநீர்
15. பன்னீர்

மஞ்சள் காப்புக்குப் பின் அபிஷேகக்கூட்டு போன்று வேறு சில பொருட்களும் பயன்படுத்தலாம். ஆனால் மொத்த எண்ணிக்கை ஒற்றைப்படையாக இருக்க வேண்டும்.

### 2.2 ஆடைகள்

i. பொதுவாக இறந்தவரை நீராட்டிய, பின் புத்தாடைகள் அணி விப்பர். ஆணாகில் புது வேட்டி, சால்வை, சட்டை ஆகியவையும், பெண்ணாகில் புதுச்சேலை போன்றவையும் பயன்படுத்தப்படும். விதவைக்குப் புது வெள்ளைப்புடவை அணிவிப்பர். சுமங்கலிக்குக் கூறைச் சேலை உடுத்துவர்.

   மாலைகள், மலர், நகைகள் (தகனத்தின் போது நீக்கப்படும்) ஆண்களுக்குத் தலைப்பாகை போன்றவையும் அணிவிக்கலாம்.

ii. கொள்ளிவைப்பவர் ஆணாக இருந்தால் சவரம் செய்து, குளித்து, புது வேட்டி, சால்வை அணிவர். பெண்ணாயின் குளித்து, தகுந்த புத்தாடை அணிவர்.(வளர்ந்த பெண்கள் சேலை அணிவது நல்லது). நெற்றியில் திருநீறு பூச வேண்டும்.

iii. இச்சம்பவத்தில் கலந்து கொள்வோர், குறிப்பாகக் குடும்பத்தினர் துக்க நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு, பகட்டு நிறங்களைத் தவிர்த்து, மரியாதை காக்கும் ஆடைகளை அணிதல் வேண்டும். பாரம்பரிய உடைகள் மிகவும் பொருத்தமானவை).

**2.3 நீராட்டும் இடம்**

இந்த நீராட்டு, வீட்டுக்குப் பின்புறத்தில் நடத்தப் பெறும். இதற்குத் தயாராக வைத்திருக்க வேண்டியவை: -

i. உடலை வளர்த்த ஒரு விசுப்பலகை (வாங்கு)

ii. சிறு பாத்திரங்கள் (எண்ணெய், துண்டுகளாக வெட்டிய எலுமிச்சம் பழம், நீர் கலந்த சீயக்காய்த்தூள் ஆகியவற்றிற்கும் அரிசி மா, மஞ்சள் தூள் போன்றவற்றை நீருடன் கலப்பதற்கும்)

iii. தண்ணீர் தேக்கப் பெரிய வாளிகளும் நீர் அள்ளச் சிறிய வாளியும்.

iv. சிறு துவாலை (பங்கு பற்றுவோர் கை துடைக்க)

v. பெரிய துவாலைகள் (உடலில் உள்ள நீரை ஒற்றி எடுக்க)

vi. உடலுக்கு அணிவிக்க ஆடை, அணிகலன்கள், மாலை ஆகியவை.

**3. சைவக்குருக்கள் நடத்தும் கிரியைகள்**

**3.1. கிரியா மண்டபம் அமைத்தல் (பார்க்க வரை படம் 1)**

**3.1.1. வெள்ளை கட்டுதல்**

i. மேலே வெள்ளைத் துணி கட்டவும். அது செவ்வகமாக இருந்தால் நீளம் வடக்கு-தெற்காக அமைதல் வேண்டும்.

ii. ஒவ்வொரு பக்கத்திலும் 5 தோரணங்களும் 3 மாவிலைகளும் கட்டவும்.

**3.1.2 கும்பங்கள்**

i. 3 தலைவாழை இலைகளில் 9 சிறு கும்பங்களும் ஒரு குடமும் வைக்கவும். (வரை படத்தில் எண் 7-16 வரை)

ii. இவற்றுள் ஒவ்வொரு நாணயமும்(சில்லறைக் காசு)அபிஷேகக் கூட்டுக் கலந்த நீரும் இருக்கும்.

iii. இவற்றின் மேல் நிறைகுடம் போல் தேங்காய் வைக்கப்படும்.

iv. ஒன்பது சிறுகும்பங்களும் 8 திக்குப் பாலகருக்கும் சக்திக்கும் உரியன. இவை ஒவ்வொன்றுக்கும் 3 மாவிலைகளும் சிவனுக்

காகிய பெரிய கும்பத்துக்கு 5 மாவிலைகளும் வைக்கப்படும்.

v. எல்லாத் தேங்காய்களிலும் முடிச்சு இடப்பட்ட தருப்பையும் மலர்களும் வைக்கப்படும்.

vi. ஒவ்வொன்றின் முன்னும் ஒரு வெற்றிலையில் பாக்கு, ஒரு வாழைப்பழம், நாணயம் ஆகியவை வைக்கப்படும்.

vii. எல்லாவற்றையும் சுற்றி ஒரு வேட்டி வைக்கப்படும்.

### 3.1.3. உரலும் உலக்கையும்

i. கும்பங்களுக்கு இடது பக்கத்தில் ஒரு தலைவாழை இலை வைத்து, சிறிது நெல் தூவி,அதன் மேல் உரலும் உலக்கையும் வைக்கப்படும். உரலுக்கும் உலக்கைக்கும் புறப்பக்கம் தெரியும் படி 3 மாவிலைகளும் ஒரு தருப்பையும் வைத்து வெள்ளைத் துண்டால் கட்டப்பட்டிருக்கும்.

ii. அந்த வாழை இலையில் ஒரு வெற்றிலையும் அதன் மேல் பாக்கு, ஒரு வாழைப்பழம், ஒரு நாணயம் ஆகியவையும் வைக்கப்படும்.

iii. உரலுக்குள் சிறிது மஞ்சள் தூளும் அறுகம்புல்லும் இட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய் ஊற்றப்படும்.

### 3.1.4. கொள்ளிக்குடம் (வரை படம் 1. எண் 2)

i. கும்பங்களுக்கு அருகே இன்னுமொரு தலைவாழை இலையில் சிறிது நெல் தூவி, கொள்ளிக்குடம் வைக்கப்படும்.இது தண்ணீர் நிரப்பிய மண்குடம் (பானை). அதன் மேல் 5 மாவிலைகளும் ஒரு தேங்காயும் வைக்கப்படும்.

ii. பின், முடிச்சிட்ட தருப்பை, மலர்கள் ஆகியவற்றால் அலங்கரிக் கப்படும்.

iii. குடத்தைச் சுற்றிச் சிவப்புத் துணி சுற்றப்படும்.

iv. இந்த இலையிலும் ஒரு வெற்றிலையில் பாக்கு, ஒரு வாழைப்பழம், ஒரு நாணயம் ஆகியவை வைக்கப்படும்.

### 3.1.5. ஓம (ஹோம) குண்டம் (வரை படம் 1. எண் 5)

இது 10 கும்பங்களுக்கு முன் கிரியைகள் செய்வதற்காக மூட்டப்படும் நெருப்பு. வசதி கருதி இத்தீ மென்- மணல் பரப்பப்பட்ட தட்டில் பற்ற வைக்கப்படும்.

### 3.1.6 புண்ணியாக வாசன கும்பம்

i. இக்கும்பம் அரிசி பரப்பிய தலைவாழை இலையில் வைக்கப்படும்.

ii. இதற்கு மேல் 3 மாவிலைகளும் தேங்காயும் வைத்து, தருப்பை முடிச்சு, மலர்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்படும்.

iii. அதே வாழை இலையில்,

அ. மஞ்சள் - அறுகினால் பிடித்த பிள்ளையார்

ஆ. ஒரு சிறு பாத்திரத்தில் பஞ்சகவ்வியம்

இ. மூன்று இடங்களில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழங்கள்.

ஈ. தேங்காய்மூடி (கண் உள்ள பகுதி) ஆகியவையும்வைக்கப்படும்.

vi. அதன் அருகே ஒரு திரி மட்டும் ஏற்றிய குத்துவிளக்கு வைக்கப் படும் (வரை படம் 1 எண் 3)

## 3.2. நீராட்டலுக்கு முந்திய கிரியைகள்

### 3.2.1 தொடக்கம்

i. இதற்கிடையில் கொள்ளிவைப்பவர்(கள்) சவரம் செய்து, குளித்து, புது வேட்டி அணிந்து சால்வையை இடுப்பில் கட்டி ஆயத்தமாவர்,

ii. கிரியா மண்டபத்திற்கு வந்து குருக்களுக்கு வலது பக்கத்தில் தருப்பை பரப்பி இருக்கும் இடத்தில் அமர்வர். (வரை படம் 1 எண் 6 +17)

iii. குருக்கள் விளக்கை ஏற்றி ஹோமத்தைத் தொடங்குவார்.

iv. கர்த்தா வலது கை மோதிர விரலில் தருப்பை மோதிரமும், தோளில் பூணூலும் அணிந்து கிரியைகள் தொடங்க அனுமதி கேட்பர். பூணூல் வலது தோளில் இருந்து இடது பக்கம் இடுப்பு வரை தொங்கும்படி அணிவர்.

### 3.2.2 இறந்தவருக்கு ஆலாத்தி

i. குருக்கள் கர்த்தாவிடம் ஒரு தட்டைக் கொடுப்பார். அத்தட்டில் சிறிது கறுப்பு எள், நெற்பொரி, மலர்கள், ஒரு நீளமான தருப்பை, ஏற்றிய கற்பூரம் ஆகியவை இருக்கும்.

ii. ஒரு உதவியாளர் புண்ணியாக வாசன கும்பத்தைக் கொண்டு உள்ளே செல்ல, கர்த்தா பின் செல்வர்.

iii. இருவரும் அங்கு வளர்த்தப்பட்டிருக்கும் உடலை இடப்பாங்காக (இடது தோள் உடல் பக்கம் இருக்கும்படி) சுற்றி வருவர்.

அப்போது கும்பத்து நீர் தெளிப்பர்.

iv. இவ்வாறு மூன்று முறை சுற்றிய பின் கர்த்தா தட்டில் இருந்து கறுப்பு எள், நெற்பொரி, மலர்கள், தருப்பை ஆகியவற்றை இறந்தவரின் நெற்றியில் வைப்பர்.

v. கால் பக்கமாக வந்து இடப்பாங்காக (anti clockwise) மூன்று முறை சுற்றிக் கற்பூரம் காட்டுவர்.

vi. பின் அவ்விடத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வணங்கி மண்டபத்துக்குச் செல்வர்.

### 3.3 நீராட்டல்

#### 3.3.1. எண்ணெய் வைத்தல்

i. உடலை நீராட்டுவதற்காக ஏற்பாடு செய்த இடத்துக்குப் பின் வாசல் வழியாக எடுத்துச் சென்று அங்கு உள்ள வாங்கில் வளர்த்துவர்.

ii. இதற்கிடையில் குருக்கள் அபிஷேகத் திரவியங்களுக்கான (பார்க்க 2.1.V) பூசையை முடித்திருப்பார். அவற்றையும் நீராட்டுவதற்கு எடுத்து வரவும்.

iii. தலை மாட்டில் ஒரு சிறு மேசை மேல் ஒரு கிண்ணம் நல்லெண் ணெய், சிறு துண்டுகளாக நறுக்கிய எலுமிச்சம் பழங்கள், தண்ணீரில் குழைத்த சீயக்காய்த் தூள் ஆகியவற்றை வைக்கவும்.

iv. ஆண்கள் முன் செல்ல உறவினர்கள் ஒருவர் பின் ஒருவராக இடப்பாங்கில் செல்லவும்.

v. ஒவ்வொருவரும் உடலைப் பார்த்தாற்போல் நின்று இடக்கை யின் நடு மூன்று விரல்களையும் எண்ணெயில் தோய்த்து இறந்த வர் தலையில் நெற்றில் இருந்து மேலாக, விரலின் புறப்பக்கத்தால் தடவவும்.

vi. பின், எலுமிச்சைத் துண்டைப் பிழியவும்.

vii. எண்ணெய் வைத்தது போலவே சீயக்காயையும் வைக்கவும்.

viii. பின், கையை அலசிச் சிறு துவாலையில் துடைக்கவும்.

ix. இறுதியாக இறந்தவரின் பெற்றோர், பெண்மக்கள், கணவன்/ மனைவியும் பின் கர்த்தா/கர்த்தாக்களும் இதனைச் செய்வர்.

குறிப்பு:

அ. இச்சடங்கில் பங்குபெறுவோர் **31** நாள் வரை தொடக்குக் காத்தல் மரபு. எனவே மிகவும் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்து கொள்வர்.

தொடக்கு அல்லது துடக்கு என்னும் சொல் தீட்டு, அசூசம் என்பதோடு பற்று, பந்தம், பாசம் எனவும் பொருள்படும். எனவே அத்தகைய பற்று/தொடர்பு உள்ளவர்களைப் போலவே கடமை செய்பவர்களும் தொடக்குக் காப்பது அவசியமாகும்.

இச்சடங்கில் மட்டுமன்றி, வாய்க்கரிசி இடுதல், தொடக்கு வீட்டில் பானம், உணவு அருந்துதல் ஆகியவற்றில் கலந்து கொண்டாலும் தொடக்கு ஆகும்.

ஆ. ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகளும் அவர்களுடைய கணவர்களும், இறந்தவருக்கு எவ்வித உறவைக் கொண்டிருந் தாலும் எவ்வித அபரக்கிரியைகளிலும் பங்கேற்றல் கூடாது.

இ. மலேசியாவில், இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சமய அதிகாரிகளின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம்.

**3.3.2. நீராட்டல்**

i. கர்த்தா, இறந்தவருக்கு இடப்பக்கமாய், பாதங்களருகே நிற்பர். ஒருவருக்கு மேற்பட்டால் மற்றவர் பிரதான கர்த்தாவின் வலப்பக்கத்தில் வரிசையாக நிற்பர்.

ii. நீராட்டப்படும் உடலில் இருக்கும் எல்லா ஆடைகளையும் வாய், விரல்களைக் கட்டிய துண்டுகளையும் நீக்கி உடலை வெள்ளைத் துணியால் மூடவும்.

iii. கர்த்தா(க்கள்) கைகளைக் கவிழ்த்து, இடது கைமேல் வலது கையை வைத்து, விரித்த விரல்கள் உடல் பக்கம் சிறிது சரிந்திருக் கும்படி பிடிப்பர்.

iv. எல்லா நீராட்டுப் பொருட்களும் வரிசைப்படி இந்தப் புறங்கை யின் மேலேயே சொரியப்படும். கர்த்தா(க்கள்) தமது கைகளை உடலின் காலில் இருந்து தலை வரை மெதுவாகக் கொண்டு செல்வர். (இதனால் அபிஷேகப் பொருட்கள் உடல் முழுவதிலும் படும்).

v. மீதமான எண்ணெய், எலுமிச்சைத் துண்டுகள் சீயக்காய்

ஆகியவற்றையும் இவ்வாறே சொரிந்து நீரால் நன்கு கழுவவும்.

vi. பின்,பிற அபிஷேகத் திரவியங்களை மேற்கூறியபடி (iv) சொரிந்து கழுவி விடவும்.

vii. பன்னீர் சொரிவதன் முன் ஆண் உறவினர்கள் கும்பங்களை (வசதியானால் வீட்டைச் சுற்றி) வரிசையாக (பார்க்க வரைபடம் 1) எடுத்துக் கொண்டு வருவர். கடைசிக் கும்பம் கர்த்தா எடுத்து வருவது. ஒருவருக்கு மேல் காரியம் செய்தால் அதற்கு ஏற்றவாறு மற்றவர்கள் எடுத்துச் செல்வர்.

viii. அவற்றில் உள்ள தருப்பை முடிச்சையும் மலர்களையும் நெற்றியில் வைத்து, தேங்காயைச் சரித்து முழு நீரையும் முன்போல் (iv) சொரியவும்.

ix. பின்னர் கர்த்தா(க்கள்) எடுத்து வரும் கும்பங்களையும், இறுதி யாகப் பிரதான கர்த்தாவின் கும்பத்தையும் அதேபோல் (viii) சொரியவும்.

x. உடலைச் சுத்தமான துவாலையால் ஒற்றி எடுத்து, ஆடை ஆபரணங்கள் அணிவித்து, பன்னீர், வாசனைத் திரவியங்களைத் தெளிக்கவும்.

*குறிப்பு:*

*ஆண்களுக்கு அரைக்கட்டு (கௌபீனம்) கட்டுவது மரபு. பார்க்க 2.2.*

xi. சவப்பெட்டிக்குள் நுனி தலைப்பக்கம் இருக்கும்படி சில தருப்பையைப் பரப்பி, சிறிது கறுப்பு எள் தெளிக்கவும்.

xii. அவற்றின் மேல் உடலைப் பெட்டிக்குள் வளர்த்தி, நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமம், மாலை ஆகியவற்றை அணிவிக்கவும்.

**குறிப்பு:** விதவைகளுக்குக் குங்குமமும் மலர்மாலையும் அணிவிப்ப தில்லை. துளசிமாலை அணிவிக்கலாம்.

xiii. பெட்டியை மலர்களாலும் மலர்ச்சரத்தாலும் அலங்கரித்து, மூடாமல் கிரியா மண்டபத்துக்கு (இயன்றால் வெளிப்பக்கமா கவே) எடுத்துச் செல்லவும்.

**குறிப்பு:** கிரியைகளைக் குருக்கள் நடத்தாவிடின் கும்பங்கள் (vii, viii, ix) இடம் பெறமாட்டா.

**4. வீட்டுக்கு வெளியே நடத்தப்படும் கிரியைகள் (குருக்கள் துணையுடன்)**

**4.1. ஏற்பாடுகள்**

i. கொண்டுவரும் பெட்டியைக் குருக்களுக்கு இடது பக்கம் வைக்கவும்.

ii. நெய்ப்பந்தம்: எல்லாப் பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் ஒவ்வொரு பந்தம் பிடிப்பர். ஆண் சந்ததியினர் தலைமாட்டிலும் பெண்சந்ததியினர் கால்மாட்டிலும் நிற்பது வழக்கம்.

iii. குருக்கள் மணி அடித்தல்: இது எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும் என அறிவிப்பதோடு எண்ணற்ற ஆன்மாக்களும் சாந்தி பெற வேண்டிக்கொள்வதாகும்.

iv. சவப்பெட்டியைச் சுற்றி நிலத்தில் வாழைமடல்களை வைக்கவும். சுண்ணம் இடித்து முடியும் வரை அவற்றில் 4 பக்கங்களிலும் சூடம் எரிக்கவும்.

**4.2. சுண்ணம் இடித்தல்.**

இது உரலில் இடப்பட்ட மஞ்சள் தூள், அறுகு, நல்லெண்ணெய் (பார்க்க 3.1.3.iii) ஆகியவற்றை இடித்தலாகும்.

i. கர்த்தா(க்கள்) தெற்கு நோக்கி நின்று, உரலுள் வைக்கப்பட்ட உலக்கையைச் செங்குத்தாகப் பிடிப்பர்.

ii. குருக்கள் சில கிரியைகளைச் செய்வர். அதே நேரம் திருவாசகத்தில் இருந்து திருப்பொற்சுண்ணம் (20 பாடல்கள்) பாடப்படும்.

iii. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் குருக்கள் மணி அடிப்பர். கர்த்தாக்கள் சேர்ந்து ஒரு முறை இடிப்பர்.

iv. இருபது பாடல்களும் பாடியதும் ஒரு தேவாரமும் ஒரு புராணமும் பாடப்படும்.

v. கர்த்தா(க்கள்) இன்னும் 3 முறை இடித்த பின் உலக்கையை எடுத்து, கட்டப்பட்டுள்ள துணியையும் மாவிலையையும் நீக்கி, கீழே வைப்பர்.

vi. இடிக்கப்பட்ட சுண்ணத்தைச் சேகரித்து ஒரு வெற்றிலையில் வைத்து, சிறிது நீருடன் சேர்த்துக் குழைப்பர். (அறுகு நீக்கப்படும்).

vii. இச்சுண்ணத்தைத் தொட்டு, கர்த்தா(க்கள்) பொட்டு வைப்பர், பின் இறந்தவருக்கும் வைத்து மீதத்தை அவரது கண்களில்

வைப்பர். இவ்வாறு செய்யப்படும் போது சிவபுராணமும் திருமுறைகளும் பாடப்படும்

(வாழாப்பத்து, அடைக்கலப்பத்து,யாத்திரைப்பத்து ஆகிய பதிகங்கள் உகந்தவை).

viii. உரலைச் சரித்து விடவும்.

ix. கர்த்தா(க்கள்) பின் கைகளைக் கழுவுவர்.

x. பிரதான கர்த்தாவிடம் ஒரு வெற்றிலை, பாக்குத் துண்டு, நாணயம் ஆகியவை கொடுக்கப்படும். அவர் வெற்றிலையைச் சிறு கிண்ணம் போல் மடித்துப் பிடிப்பார்.

xi. குருக்கள் அதில் 3 கரண்டி நீர் விடுவார், இந்த நீரைக் கர்த்தா தண்டுப் பக்கமாக இறந்தவரின் நெற்றியில் விடுவார்.

xii. பின் உடலைச் சுற்றி வந்து குருக்களிடம் வெற்றிலை, பாக்கு, நாணயம் ஆகியவற்றைக் கொடுப்பார்.

xiii. இச்சடங்கு இன்னும் 2 முறை செய்யப்படும். இது முறையே தேச தானம், உருத்திர தானம், யாத்திரா தானம் என்னும் மூன்றையும் குறிக்கும்.

xiv. இறுதியாக, ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, மலர்கள் வைத்து, அதில் கர்த்தா குருதட்சணை வைப்பர். குருக்களிடம் இருந்து திருநீறு பெற்றுக்கொள்வர்.

### 4.3 வாய்க்கரிசி இடுதல் (பெண்கள்)

i. இறந்தவரின் மார்பில் ஒரு வெள்ளைத் துணி விரிக்கவும்.

ii. ஒருவர் வாய்க்கரிசி நிரப்பிய தட்டை இறந்தவரது தலைக்கு அருகில் பிடித்திருப்பார்.

iii. பெண்கள் வரிசையாகச் சென்று இறந்தவரின் இடப்பக்கமாக நின்று தட்டில் இருந்து கொஞ்சம் அரிசியும் நாணயமும் எடுத்து, சிறிது அரிசியை அவரது வாயிலும் நாணயத்தை,வெள்ளைத் துணியிலும் வைக்கவும்.

iv. குடும்பந்தவர்கள் இதனை இறுதியாகச் செய்வர். இறந்தவருக்கு மனைவி இருந்தால் அவரே கடைசியாக வாய்க்கரிசி இடுவர். (ஆண்கள் இச்சடங்கைச் சுடுகாட்டில் செய்வர்).

v. பெண் உறவினர், மனைவி முன்செல்லப் பெட்டியை மூன்று முறை இடப்பாங்காகச் சுற்றி வருவார்.

*குறிப்பு:* யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் இறந்தவரின் மனைவி எண்ணெய் வைத்தல் முடிந்ததும், தானும் தலை நீராடி வெள்ளைச் சேலை கட்டியே மேற்கூறப்பட்ட (4.2, 4.3) சடங்குகளில் கலந்து கொள்ளுவார்.

vi. பின்னர் மனைவி தாலியைக் கழற்றி, இறந்தவர் கையில் வைக்கப்பட்டிருக்கும் தேங்காய்க் காளாஞ்சியில் இடுவார். இதற்கான தேங்காயை நெருங்கிய ஆண் உறவினர் ஒருவர் உடைப்பார்.

vii. பின்னர் பெட்டி மூடப்பட்டு, கால்மாடு வாசலை நோக்கி எடுத்துச் சென்று பிரேத வாகனத்தில் ஏற்றப்படும்.

viii. பிரதான கர்த்தா கொள்ளிக்குடத்தை இடது தோளில் வைத்து இடது கையால் பிடித்தபடி கொள்ளிச் சட்டியையும் எடுத்துக் கொண்டு பெட்டிக்கு முன்னே நடப்பார். அவர் வாகன ஓட்டிக்குப் பக்கத்து இருக்கையில் அமர்வார்.

*குறிப்பு:* பெண்கள் (விதவை உட்பட), மும்முறை பெட்டியைச் (v) சுற்றி வருவதால் பிரேத வாகனத்தைச் சுற்றுவது வழக்கு அல்ல.

**5. வீட்டை ஒழுங்கு படுத்துதல்**

i. பிரேத வாகனம் சென்றதும் குத்து விளக்கைச் சரித்து விட்டு, கிரியா மண்டபத்திற்கு மேல் கட்டப்பட்ட தோரணம், வெள்ளைத் துணி ஆகியவற்றை நீக்கி, அவ்விடத்தைச் சுத்தப் படுத்தவும். மிஞ்சிய பொருட்கள் (நெய், தானியம் போன்ற) யாவையும் சேர்த்து எறிந்துவிடவும்.

ii. முழு வீட்டையும் கழுவவும்.

iii. வீட்டில் உள்ளோர் (பெரும்பாலும் பெண்களும்,குழந்தைகளும்) தலைக்கு நீர் விட்டுக் குளித்து, தூய ஆடைகள் அணியவும்.

iv. வெளிவாசலில் ஒரு வாளியில் மஞ்சள் தூள் கலந்த நீர், அள்ளுவதற்குக் கைவாளி, சில நெட்டு வேப்பிலை ஆகியவற்றை வைக்கவும்.

v. இரும்பு/இரும்புப்பூண் போட்ட உலக்கையைப் பாதையின் குறுக்கே போடவும்.

vi. ஒரு தாழ்வான மேசையில் (வசதியானால் இறந்தவரை வளர்த்திய இடத்தின் தலைமாட்டில்) ஒற்றைத் திரியுடன் விளக்கேற்றி வைக்கவும்.

vii. ஒரு குவளையில் நீரும் குடிக்க வசதியாக வெட்டப்பட்ட இளநீரும் அம்மேசையில் வைக்கவும்.

viii. கொஞ்சம் விபூதியும் வைத்தல் அவசியம்.

ix. கர்த்தா(க்கள்) உட்படக் குடும்பத்தோர் யாவரும் 31 நாட்களும் சைவ உணவு உண்பர்.

குறிப்பு:

அ. இறந்தவரின் படமும் பிறவும் (அவரது மூக்குக் கண்ணாடி, கைக்கடிகாரம் போன்றவை) எட்டாம் படையலின் போது வைக்கப்படும்.

ஆ. தெய்வப் படங்கள் 31ஆம் நாள் புண்ணியாகவாசனம் செய்யும் வரை மாட்டுதல்/வைத்தல் ஆகாது.

**6. சுடுகாட்டில்**

i. கால்மாடு முன்னே செல்லச் சவப்பெட்டி சிதையைச் சுற்றி மும் முறை கொண்டு செல்லப்படும்.பின் அதனை மும்முறை மெது வாக ஊஞ்சலைப் போல் பக்கவாட்டில் அசைத்து, சிதை மேல் வைத்து, மூடியை நீக்குவர். (எரிவாயு வசதி இருப்பின் ஒரு மேடை பயன்படுத்தப்படும்.)

ii. திருமுறைகள் பாடி ஆண்கள் வீட்டில் பெண்கள் செய்தது போலவே) வாய்க்கரிசி இடுவர். கர்த்தா(க்கள்) இறுதியில் இடுவர்.

iii. நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்தவருக்கு அணிவித்த ஆப ரணங்களை நீக்குவார்.

iv. எல்லாக் கட்டுகளும் முடிச்சுகளும் (மாலையினது உட்பட) அவிழ்க்கப்படும்.

v. கர்த்தா இடது தோளில் கொள்ளிக்குடமும் வலது கையில் பின்பக்கமாகக் கொள்ளியும் (எரியும் சந்தனக்கட்டையும்) வைத்துக் கொண்டு சவப்பெட்டியின் தலைமாட்டில் நிற்பார்.

vi. ஒரு உறவினர் கொள்ளிக்குடத்தின் கீழ்ப்பகுதியைக் கத்தி முனையால் கொத்துவார். நீர் வடியக் கர்த்தா பெட்டியை மும் முறை சுற்றி வருவார். வெட்டியான் (அல்லது உறவினர்) அந்த நீரை இடது புறங்கையால் பெட்டி மேல் தெளிப்பர். மற்றக் கர்த்தா(க்கள்) பின் தொடர்வர்.

vii. ஒவ்வொரு முறை கர்த்தா தலைமாட்டிற்கு வரும் பொழுதும் குடத்தில் ஒவ்வொரு துளை கொத்தப்படும்.

*குறிப்பு:*

*கொள்ளிக் குடத்து நீர் உடலையும், பெட்டி எரிக்கப்படும் இடத்தை யும் தூய்மைப்படுத்தும்.*

vii. *கர்த்தா பெட்டிக்குப் பின்காட்டி (அதாவது தெற்குப் பார்க்க) நின்று, வலது முழங்காலை மடித்து, கொள்ளியை இறந்தவர் தலையில் வைப்பர்.*

ix. *குடம் சிதறும்படி கர்த்தா அதனைத் தோளுக்கு மேலாகப் பின்புறம் எறிவார். அணிந்திருக்கும் பூணூலையும் தருப்பை யையும் கழற்றிப் பின்புறமாக நெருப்பில் எறிவார். (குடத்துத் தேங்காய் உடையாமல் இருந்தால் அங்கு உள்ளவர்களில் ஒருவர் அதை நொறுக்குவார்).*

x. *கர்த்தா, திரும்பிப் பாராமல், கையில் கத்தியைப் பிடித்தபடி அவ்விடத்தை விட்டுச் செல்வார்.*

xi. *எரிவாயு வசதிகள் இருந்தால் பெட்டி அதற்கான இழுப்பறை ஒன்றுக்குள் வைக்கப்படும். இல்லாத சுடுகாடாயின் ஒருவர் பின் தங்கி உடல் முழுமையாக எரிவதை உறுதிப்படுத்துவது நலம்.*

xii. *மற்றவர்கள், கர்த்தா(க்கள்) உட்பட, வீடு திரும்புவர்.*

**7. சுடுகாட்டில் இருந்து வீடு திரும்பிய பின்**

*வீட்டிற்குள் வருபவர்கள் வாசலில் வைத்திருக்கும் நீரால் தம்மை நனைத்து, வேப்பிலையை மென்று, சாற்றை விழுங்கி, சக்கையைத் துப்பி உலக்கையைக் கடந்து வருவர்.*

*குறிப்பு:*

*இதனால் சுடுகாட்டுக்குச் சென்று வருவதனால் ஏற்படக்கூடிய தீயபலன்கள் நீங்கும்.*

*உள்ளே தலைக்கு நீர் விட்டுக் குளித்து, தூய ஆடையும் விபூதியும் அணிவர்.*

**8. ஈமச்சடங்குக்கும் பின் உண்ணுதல்**

*இந்த உணவை உறவினர்கள், பெரும்பாலும் சம்பந்தி வீட்டார், கொண்டு வந்து பரிமாறுவர்.*

சைவ உணவு மட்டுமே பரிமாறப்படும்.

**9. தொடக்கு**

தொடக்கு என்பதை விலக்கல், தடை எனக் கூறலாம். தொடக்கு, தீட்டு என்னும் சொற்களும் பயன்படுத்தப்படும். குடும்பத்தில் பிறப்பு, இறப்பு, பெண்கள் பூப்பு எய்தல் ஆகியவவை சம்பவித்தால் அக்குடும்பத்தாரும் தந்தை வழி ஆண் உறவினர்களின் குடும்பத்தாரும் தொடக்குக் காத்தல் மரபு. பொதுவாக, திருமணமான பெண்களுக்குத் தொடக்கு இல்லை. இது முக்கியமான சைவப் பாரம்பரியமாகும்.

i. பொதுவாக 31 நாட்கள் தொடக்குக் காக்கப்படும். இதற்கிடையில் புதுத் துடக்கு ஏற்படின் அதன்படி நாட்கள் கணக்கிடப்படும்.

குறிப்பு:

இரத்தத் தொடர்பால் ஏற்படும் தொடக்கு மட்டுமன்றி

அ. இறந்தவருக்கு எண்ணெய், சீயக்காய் வைத்தவர்கள்

ஆ. வாய்க்கரிசி இட்டவர்கள்

இ. தொடக்கு வீட்டில் உண்டவர்கள்

ஆகியோருக்கும் இத்தொடக்கு உண்டு.

அந்தியேட்டிக் கிரியைகளுக்குப் (31 நாட்களுக்கு) பின்னரே அவர்கள் கோயிலுக்குள் செல்லவும் சுபகாரியங்கள் நடத்தவும் தகுதி பெறுகின்றனர். இறந்தவரின் குடும்பத்தவர் முதலாண்டுத் திவசத்திற்குப் பின்னரே சுபகாரியங்களில் ஈடுபடலாம். இவ்விதிகளும் ஆசௌச நியமத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ii. எனினும் சில விதி விலக்குகளும் உண்டு. தமது பாரம்பரிய வழக்கங்களையும் ஒழுக்கங்களையும் போற்றும் பிராமணர்களுக்குப் 12 நாட்கள் தொடக்கு. மற்றவர்களில்,

அ. பிறவிச் சைவர்களாய்

ஆ. பிறந்ததில் இருந்து அசைவ உணவு உண்ணாதவராய்

இ. சிவதீட்சை பெற்றவராய்

ஈ. தமது வீட்டில் அன்றிப் பிற இடங்களில் உண்ணாதவராய்க் குடும்ப வழக்குகளையும் ஒழுக்கங்களையும் காப்பவராய் இருப்போருக்குப் 16 நாட்கள் தொடக்கு.

iii. வேறு சில விதி விலக்குகளும் உண்டு.

துர்மரணம் (விபத்து, கொலை, தற்கொலை காரணமாக) ஏற்பட்டால் தொடக்கு 90 நாட்கள் நீட்டிக்கப்படும்.
நீரில் மூழ்குதல் அல்லது பிற காரணமாக, இறந்தவரின் உடல் கிடைக்காது போனாலும் தொடக்கு 90 நாட்களுக்கு ஆகும்.

## iii. காடாற்று முதல் அந்தியேட்டி வரை

### 1. காடாற்று.

இது காடு+ஆற்றுதல் ஆகும். இதில் உடலைத் தகனம் செய்த சுடுகாட்டின் வெப்பத்தைத் தணித்தல், சாம்பலை அள்ளுதல், எரித்த இடத்து மண்ணைக் கிளறுதல் போன்றவை அடங்கும், இதனைத் தகனம் செய்த மறுநாள், பொதுவாக மரணம் சம்பவித்த 3,5 அல்லது 7 ஆம் நாள் செய்வர்.

### 1.1 கர்த்தாவை அனுப்புதல்

i. கர்த்தா(க்கள்) உட்பட மூன்று, ஐந்து,ஏழு என ஒற்றைப்படை எண்ணிக்கையில் ஆண்கள் இக்கிரியைக்குத் தேவையான பொருட்களையும் கொண்டு செல்வர்(பார்க்க: இணைப்பு 2)

ii. வீட்டுவாசலில் ஒரு திரி மட்டும் கொளுத்திய குத்து விளக்கு வைக்கப்படும்.

iii. கர்த்தா விளக்குக்குப் பின்னால் வீட்டுவாசலுக்குப் பின் காட்டி நிற்க, மூன்று பெண் உறவினர்கள் அவரையும் விளக்கையும் இடமிருந்து வலமாக (anti clockwise) சுற்றி வருவர்.

iv. கர்த்தா மூன்று ரொட்டிகளையும் (அரிசி மாவில் சப்பாத்தி போல் உப்பு, எண்ணெய் எதுவும் கலவாமல் செய்வது) பெரிய கத்தியையும் எடுத்துச் செல்வர்.

vi. அவர்கள் சென்றதும், மூன்று பெண்களும் தலைக்கு நீர் விட்டுக் குளிப்பர்.

### 1.2. சுடுகாட்டுச் சடங்குகள்

i. கர்த்தா இரு கைகளிலும் நீரை அள்ளிச் சாம்பல் மேல் தெளிப்பார். உடல் வடிவில் எலும்புகள் தெரியும்.

ii. அதன் பின் மயான அதிதேவதையாகிய வைரவரைப் பூசித்து மேற்கொண்டு கிரியைகள் நடத்த அனுமதி கோரப்படும்.

iii. எலும்புகளின் தலைப்பக்கமாக வைரவ கும்பம் (நிறை குடம்) வைத்து, ஒரு அகல் விளக்கும் ஊதுபத்தியும் கொளுத்தி வைக் கப்படும்.

iv. இன்னுமொரு தலைவாழை இலையில் சிறிது பொரி, மூன்று ரொட்டிகள், பிற பலகாரங்கள், ஒரு இளநீர் ஆகியவற்றுடன் ஒரு தேங்காய்க் காளாஞ்சியும் வைக்கப்படும்.

v. இப்படையலுக்குச் சாம்பிராணிப் புகையும் கற்பூரமும் காட்டப்படும். (இடப் பாங்காக)

vi. திருமுறைப் பாடல்கள் பாடப்படும்.

vii. எலும்புக் கூட்டிற்கு,வீட்டில் உடலுக்குச் செய்தது போலவே, அபிஷேகம் செய்யப்படும். வைரவகும்பத்து நீர் இறுதியாக வார்க்கப்படும். இந்த நீர் சாம்பலையும் எலும்புகளையும் பரிசுத்தப்படுத்தும்.

viii. பின் கர்த்தா, கொஞ்சம் பாலும் நீரும் ஊற்றிய ஒரு பெரிய மண் பானையில் உடலின் வெவ்வேறு பகுதியில் இருந்தும் எலும்பு களை எடுத்து வைப்பர். பெருவிரலும் சுட்டு விரலும் மட்டுமே பயன்படுத்திக் கீழ்காணுமாறு எடுக்கவும்.

குறிப்பு:

இதனை ஓசைப்படாமல் செய்யவும். எலும்புகள் ஒன்றோடு ஒன்று தட்டுப்படும் ஓசை கேட்டல் கூடாது.

அ. பாதத்தில் ஓம் சத்திய ஜாதாய நம

ஆ. நாபியில் ஓம் வாமதேவாய நம

இ. மார்பில் ஓம் அகோராய நம

ஈ. முதுகெலும்புப் பகுதியில் ஓம் தத்புருஷாய நம

உ. தலைமாட்டில் ஓம் ஈசானாய நம எனச் செபித்து எடுக்கவும்.

ix. மீதமுள்ள எலும்புகளையும் சாம்பலையும் ஓசை இல்லாமல் எடுத்து அதே பானையில் வைத்து, அத்துடன் விபூதி,சந்தனம், குங்குமமும் வைக்கவும், பானையின் வாயை ஒரு தேங்காய்க் காளாஞ்சியால் மூடி, அதில் கொஞ்சம் கற்பூரமும் வைத்து வெள்ளைத் துணியால் முழுவதையும் சுற்றவும். (அந்தியேட்டிக் கிரியைக்கெனச் சாம்பல் வைத்திருப்பது உசிதமல்ல).

x. உறவினரும் இறுதியாகக் கர்த்தாவும் தகனம் செய்யப்பட்ட

இடத்தை உழுது, நவதானியம் தூவுவர். அவை மண்ணுடன் கலக்கும்படி திரும்பவும் கர்த்தா உழுது, பாலும் நீரும் தெளிப்பர்,(இதனால் எரிந்த இடம் விரைவில் பசுமையாகும்).

xi. வைரவருக்குப் படைக்கப்பட்ட உணவு வகைகளும் சாம்பலோடு நீக்கப்படும்.

xii. கர்த்தா சாம்பல் குடத்தை இடது தோளிலும் பெரிய கத்தியை வலது கையிலும் எடுத்துச் செல்வார்.

**1.3 சாம்பலை நீரில் விடல்**

இச்சடங்கு கடற்கரையிலோ, ஆறு, ஓடை போன்ற ஓடும் நீர்க்கரையிலோ செய்யப்படுவது.

i. கர்த்தா குடம், கத்தி சகிதம் நீருக்குள் நடந்து சென்று இடுப்பளவு நீரில் நிற்பார்.

ii. குடத்தைச் சுற்றியிருக்கும் துணியை நீக்கி, சூரியனை நோக்கியபடி கத்தியால் குடத்தில் 3 துளைகள் செய்து, சிவ-சிவ-சிவ எனக் கூறிக் குடத்தைத் தோளுக்கு மேலாகப் பின்பக்கம் எறிவார்.

குறிப்பு:

இதனால் இறந்தவரது சாம்பல் கடலில் கலந்து அதிலே கலக்கும் புண்ணிய நதிகளில் நீராடிய பலனை அவருக்குத் தரும் என நம்பப்படுகிறது.

iii. கரைக்கு வந்து ஈர ஆடைகளைக் களைந்து வேறு தூய ஆடைகளை அணிவார்.

குறிப்பு:

பொதுவாக, மலேசியாவில் கடற்கரை அதிக தூரமில்லாத இடங்களில் வாழ்வோர், ஒரு படகை வாடகைக்கு அமர்த்தி அதில் சிறிது தூரம் சென்று சாம்பல் குடத்தைக் கடலில் இடுவர்.

**1.4. வீடு திரும்பிய பின்**

i. வெளிவாசல் அருகே வாளியில் தண்ணீர், உலக்கை, வேப்பிலை ஆகியவை வைக்கப்பட்டிருக்கும்.

ii. அந்த நீரால் கர்த்தா கை, கால், முகம் கழுவுவார்.

iii. பின் வேப்பிலையை மென்று சாற்றை விழுங்கி இலையைத் துப்பிவிட்டு, உலக்கையைக் கடந்து குத்துவிளக்குக்கு அருகில்

வந்து நிற்பார்.

iv. ஒரு சுமங்கலி அவருக்கு ஒற்றைத் திரி உள்ள ஆலத்தியை இடப்பாங்காகச் சுற்றுவார்.

v. அத்தட்டிலும் விளக்கிலும் இருக்கும் மீதப் பொருட்களை வெளியே கொட்டவும்.

vi. கர்த்தா வலது காலை முன் வைத்து வீட்டுக்குள் வந்து, குளித்து, இறந்தவர் ஆன்மாவுக்காக வழிபடுவார்.

vii. நெற்றியில் விபூதி அணிந்த பின் உணவு அருந்துவார்.

### 2. எட்டுக்குப் படைத்தல்

#### 2.1 உகந்த நாள்

i. ஒருவர் இறந்த எட்டாம் நாள் அந்திப்பொழுதில் செய்யப்படுவதால் இது எட்டாம் (நாள்) படையல் அல்லது எட்டுச் செலவு எனப்படும். கொள்ளி இட்டவர் இச்சடங்கு முடிந்த மறுநாள் விடியலுக்குப் பின்னரே வீட்டை விட்டு வெளியே செல்லலாம்.

ii. தற்பொழுது காடாற்றும் நாளோ இறப்புக்குப் பின் மூன்றாம் ஐந்தாம் நாளோ நடத்தப்படுகிறது.

#### 2.2. ஏற்பாடுகள்

i. இறந்தவர் அருந்திய உணவு, பான வகைகள் எல்லாவற்றையும், குறிப்பாக அவர் விரும்பியவற்றைத் தயாரிப்பது பொது வழக்கு.

ii. இச்சடங்கு இறந்தவரை நீராட்டுக்கு எடுத்துச் செல்லுமுன் வளர்த்தியிருந்த அதே அறையில் நடைபெறும். ஆகவே அவருடைய உருவப்படம், ஒரு தடவை போடுவதற்கான ஆடைகள், மூக்குக் கண்ணாடி உட்படப் பிற அணிகள் ஆகிய வற்றை அங்கு வைக்கவும். உருவப் படம் கிழக்குப் பார்க்க இருப்பின் நல்லது.

iii. அப்படத்துக்கு முன், மூன்று தலைவாழை இலைகளில் மூன்று வேறு நபர்களுக்குப் பரிமாறுவது போல் வெவ்வேறாக உணவு படைக்கப்படும். (இவற்றில் ஒன்று வைரவருக்கு, இது சுடு காட்டில் வைக்கப்படும். இன்னுமொன்று வெட்டியானுக்கும், மூன்றாவது கர்த்தாவுக்கும் குடும்பத்தாருக்கும் ஆகும்).

iv. இந்த இலைகளை முறத்தில் (இருந்தால்) அல்லது அகன்ற

தட்டுக்களில் வைக்கலாம்.

v. தலைவாழை இலை வைக்கப்பட்ட வேறு தட்டுகளில்

அ. உண்ணுவதற்கு ஏற்றபடி உரித்த/வெட்டிய பழவகைகள்

ஆ. பல வகைப் பலகாரங்கள் ஆகியவற்றை வைக்கவும்.

vi. இன்னுமொரு தட்டில் வெவ்வேறு வகைப் பானங்கள் கொண்ட குவளைகளை வைக்கவும்.

vii. எல்லா உணவு வகைகளையும் வாழை இலையால் மூடவும்.(தலை வாழை இலை தேவையில்லை).

viii. குடிப்பதற்கு ஏற்றபடி ஒரு இளநீரும் வெட்டி வைக்கவும்.

xi. வழிபாட்டிற்குத் தேவையான உதிரிப்பூ, சாம்பிராணி, கற்பூரம், ஊதுபத்தி, திருநீறு, சந்தனம் குங்குமம் ஆகியவற்றையும் வைக்கவும்.

**2.3 வழிபாடும் அர்ப்பணமும்**

i. கர்த்தா, குளித்து வேட்டி உடுத்து வந்து விபூதி அணிவார். பின்னர் ஊதுபத்தி கொளுத்தி வைத்து, படத்துக்குச் சாம்பிராணி காட்டுவார்.

ii. சைவத் திருமுறைகள் பாடப்படும்.

iii. திரும்பவும் படத்திற்குச் சாம்பிராணி, கற்பூரம் காட்டி மலர்கள் தூவுவார்.

iv. உணவு வகைகளை மூடியிருக்கும் இலைகளை நீக்கிவிட்டு, அவைகளை இறந்தவருக்கு அர்ப்பணம் செய்வார்.

v. வலது கையில் சிறுது நீர் ஊற்றி, எல்லா உணவு வகைகளையும் அக்கையால் இடப்பக்கமாகச் சுறுவார். அவ்வாறு செய்யும் பொழுது கையில் உள்ள நீரைச் சிறிது சிறிதாக விரல்களிடையே ஒழுகவிடுவார். இதுவே அர்ப்பணிக்கும் முறை.

vi. பின் கர்த்தா உணவுக்குச் சாம்பிராணியும் கற்பூரமும் காட்டி, மலர் தூவி வழிபட்டு விபூதி அணிவர்.

vii. அந்த அறையில் குழுமியுள்ளவர்கள் யாவரும் வெளியேறவும். (வீட்டுக்கு வெளியேயோ பிற அறைகளுக்குள்ளோ போய், கதவு களை மூடிக் கொள்ளவும்) எல்லா மின்சார விளக்குகளும் அணைக்கப்பட வேண்டும்.

*குறிப்பு:*

*உடலைப் பிரிந்த உயிர் படைக்கப்பட்ட உணவைச் சுவைக்கும் என்றும், **31** நாட்களும் அந்த வீட்டைச் சுற்றி இருக்கும் என்றும் நம்பப்படுகிறது.*

viii. *சுமார் **2** நிமிடங்களுக்குப் பின் மின்சார விளக்குகளை மீண்டும் எரிய விட்டு எல்லோரும் அந்த அறைக்குத் திரும்பலாம்.*

ix. *கர்த்தாவும் குடும்பத்தினரும் பழங்கள், பலகாரங்களில் ஒவ்வொரு வகையில் ஒன்று எடுத்துப் பிரதான படையல்கள் மூன்றிலும் வைப்பர். பான வகைகளும் சிறிது அதில் ஊற்றுவர். அவற்றுடன் இளநீரையும் வைப்பர்.*

x. *ஒரு உறவினர் பந்தம் பிடித்தபடி முன்செல்ல, கர்த்தா பிரதான படையலை ஒரு கையிலும், பெரிய கத்தி ஒன்றை மறு கையிலும் கொண்டு பின் செல்வார்.இன்னொரு உறவினர் தொடர்வார். (மொத்தம் **3** அல்லது **5** பேர்கள் செல்லலாம்).*

xi. *ஒரு நாற்சந்தி* (+) *அல்லது முச்சந்தி* (T) *க்குச் சென்று நிலத்தில் கத்தியால் ஒரு சூலம் (🔱) வரைவர்.*

xii. *முறம் அல்லது தட்டுடன் உணவை அங்கே வைத்து, பந்தத்தைத் தெரு ஓரத்துப் புல்லில் நட்டு, அதைத் திரும்பிப் பாராமல் மூவரும் (ஐவரும்) திரும்புவர். அவர்கள் கத்தியை மட்டுமே எடுத்து வருவர்.*

*குறிப்பு:*

*இன்றையை நிலையில்* xi, xii *சாத்தியப்படாது.எனவே அவற்றை ஆற்றிலோ ஓடையிலோ இடலாம்.*

xiii. *வீடு வந்ததும் மூவரும் (ஐவரும்) கை,கால், முகம் கழுவித் தம்மேல் சிறிது நீரைத் தெளித்துச் சுத்தி செய்தபின் வீட்டிற்குள் செல்வர்.*

xiv. *உணவு பரிமாறப்படும்.*

*குறிப்பு: இரண்டாவது படையலை ஏற்றுக்கொள்ள வெட்டியானோ நாவிதனோ இல்லாவிட்டால் அதுவும் முதல் படையலைப் போல் ஓடும் நீரில் விடப்படும்.மூன்றாவது படையலையும் சிலர் அவ்வாறே விடுவர்.*

### 3. அந்திவேளைப் பிரார்த்தனை

*எட்டாம் நாள் படையலைத் தொடர்ந்து அந்தியேட்டி வரை இறந்தவருக்காக, சூரியாஸ்தமனத்தில் வழிபாடுகள் நடத்தப்படும். அன்று ஏற்றப்பட்ட விளக்கும் அந்தியேட்டி ஏற்பாடுகள் வரை அணையாது எரியும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.*

#### 3.1 ஏற்பாடுகள்

i. *இறந்தவருடைய படம் தினமும் புது மாலை, மலர்களால் அலங்கரிக்கப்படும். ஒரு குவளையில் நீரும் ஒரு இளநீரும் இறந்தவருக்கு நிவேதனமாகத் தினமும் வைக்கப்படும்.*

ii. *சைவ உணவும் அவ்வாறு வைத்து, வழிபாட்டின் பின் குடும்பத் தவர் உண்ணலாம். ஆனால் உணவு குடும்பத்தின் துயர நிலைக்கு ஏற்றவாறு எளிமையானதாய் இருத்தல் அவசியம். இனிப்பு வகைகள் பரிமாறப்படுவது இல்லை.*

#### 3.2 வழிபாடு

i. *பிரணவ மந்திரத்தை 3 முறை செபிக்கவும்.*

ii. *பின் 1 அல்ல 2 நிமிடங்கள் மௌனம் அல்லது தியானம் செய்யவும்.*

iii. *திருமுறைகள் கூட்டாகவும் (விரும்பினால் நேரத்திற்கேற்பத் தனியாகவும்) பாடலாம்.*

iv. *சிவபுராணம் பாடவும்.*

v. *இறுதியில் வைக்கப்பட்டிருக்கும் உணவை அர்ப்பணித்து; (பார்க்க: எட்டுக்குப் படைத்தல்) சாம்பிராணி, கற்பூரம் காட்டி, மலர்கள் தூவி வழிபடவும். (இளநீர், கற்பூரம் காட்டுமுன் கொத்தப்படும்).*

#### 3.2 நோக்கம்

i. *இந்த வழிபாடு பிரிந்த உயிரின் நலன் கருதிச் செய்யப்படுவது. அவ்வுயிர் அந்தியேட்டி வரை தானிருந்த வீட்டைச் சுற்றித் தயங்கி நிக்கும் என்பது நம்பிக்கை. அங்கு நடத்தப்படும் வழிபாடு அதனைச் சாந்திப்படுத்தி இறைவனை நினைக்கத் தூண்டும்.*

ii. *அவரது பிரிவினால் துயரப்படும் குடும்பத்தினருக்கும் வழிபாடு ஆறுதல் தரும்.*

iii. குழந்தைகளும் வழிபடும் வழக்கத்தைப் பெறுவர்.

## iv. அந்தியேட்டிக் கிரியைகள்

### 1. முன்னுரை

### 1.1 நோக்கம்

இறந்தவர் தமது வாழ்நாளில் அறிந்தோ அறியாமலோ செய்த சமயக் குறைபாடுகளை ஓரளவு நீக்க இக்கிரியைகள் உதவும் என நம்பப் படுகிறது.

### 1.2 நாள்

கடற்கரையில் செய்யப்படும் கிரியைகள் 23ஆம் நாள் முதல் 31ஆம் நாள் வரையில் வசதியான நாளில் செய்யலாம்.

ஆனால் புண்ணியாக வாசனமும் வீட்டுக் கிருத்தியமும் 31 ஆம் நாளிலேயே செய்தல் வேண்டும். இக்கிரியைகள் வீட்டைத் தூய்மைப்படுத்தி, தொடக்கை நீக்கும்.

### 1.3.இடம்

கடற்கரை, ஆற்றங்கரை, ஓடைக்கரை போன்ற இடங்களில் செய்யப்படும். கிரியைகளின் போது நீரில் இடப்படும் பொருள்கள் இறுதியில் கடலில் கலக்கும் என்பதால் இந்த இடங்கள் ஏற்றவை யாகும்.

### 1.4.ஏற்பாடுகள்

i. வீடு முழுவதும் கழுவப்பட வேண்டும், திரைச்சீலைகள், உறைகள், விரிப்புகள் போன்றவையும் துவைக்கப்பட வேண்டும்.

ii. அந்தியேட்டி, புண்ணியாக வாசனம், வீட்டுக்கிருத்தியம் ஆகியவற்றுக்கான தகுந்த சைவக் குருக்களை ஏற்பாடு செய்யவும்.

iii. இச்சடங்குகளுக்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கவும் (பார்க்க: இணைப்பு 3, 4 & 5).

iv. ஒவ்வொரு சடங்குக்கும் தேவையானவற்றைப் பிரித்து வைத்தால் வசதியாக இருக்கும்.

### 2. கடற்கரைக்குச் செல்லுதல்

i. வீட்டு வாசலில் ஒற்றைப் புதுத்திரியிட்ட குத்து விளக்கை ஏற்றவும்.

ii. அதற்கருகில் கடற்கரைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை வைக்கவும்.
iii. கர்த்தா அந்த விளக்கின் அருகில் ஒரு இளநீரையும் புதுச் செங் கல்லையும் வைத்து, இவற்றையும் வெளிவாசலையும், பார்த்த முகமாக நிற்பார்.
iv. மூன்று உறவுப் பெண்கள் கர்த்தாவையும், விளக்கு, பிற பொருட் கள் ஆகியவற்றையும் சுற்றி வந்து, இறந்தவரை நினைத்து, கர்த்தாவைத் தொடுவர்.
v. பின் கர்த்தா இளநீரையும் செங்கல்லையும் எடுக்க, மற்றவர்கள் பிற பொருட்களை வாகனத்துள் வைக்க உதவுவர்.
vi. கர்த்தாவுடன் ஒரே வாகனத்தில் செல்வோரின் எண்ணிக்கை,அவர் உட்பட, ஒற்றைப்படை எண்ணாக இருத்தல் வேண்டும்.
vii. அவர்கள் சென்றதும் விளக்கில் இருக்கும் திரியையும் எண்ணெயை யும் வீட்டுக்கு வெளியே கொட்டி, விளக்கைக் கழுவி வைக்கவும்.
viii. வீட்டுக் கிரியைகள் நடக்க இருக்கும் இடத்தை (வரவேற்பறை) மட்டும் ஈரத்துணி / துடைப்பான் (மொப்)கொண்டு துடைத்து விடவும்.
ix. வீட்டின் முகவாயிலைக் (போர்ச்) கழுவவும்.
x. குடும்பத்தில் திருமணமான ஒரு பெண் (பொதுவாகக் கர்த்தாவின் மனைவி) தலைக்கு நீர் விட்டுக் குளித்து, புண்ணியாக வாசனக் கிரியையில் கலந்து கொள்வார்.

**3. புண்ணியாக வாசனம்**

புண்ணியாக வாசனம் என்றால் தொடக்கைக் கழித்தல் அல்லது நீக்குதலாகும். இதனைக் குருக்கள் அக்குடும்பப் பெண் ஒருவரின் உதவியுடன் செய்வார். (iv .2.X)

i. அப்பெண் வரவேற்பறையில் ஒரு அல்லது 3 திரிகளுடன் குத்துவிளக்கு, சிறு குடம் அல்லது செம்பில் நீர், ஒரு குவளை பால், சிறு கிண்ணங்களில் தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகியவற்றை வைப்பார். கோசலம், கோமயம் கிடையாவிடில் மஞ்சள் தூள் பயன்படுத்தலாம்.
ii. அவற்றுடன் வழிபாட்டுக்கு உரிய பிற பொருட்களையும் வைக்கவும் (திருநீறு, சந்தனம், குங்குமம், வெற்றிலை - பாக்கு

போன்றவை)

iii. கோமயம் அல்லது மஞ்சளும் அறுகும் கொண்டு பிள்ளையார் பிடிக்கப்படும்.

iv. பிள்ளையார் பூசையும் பிற கிரியைகளும் முடிந்ததும், குருக்கள் பஞ்சகவ்வியத்தைக் கலந்து அதில் ஒரு கரண்டி அப்பெண்ணுக்கு அருந்தக் கொடுப்பார்.

v. பின் அக்கலவையைக் கும்ப நீரில் கலந்து வீடு முழுவதும் தெளிப்பதற்குக் கொடுப்பார்.

vi. இதன் பின் பூசையறை விளக்கை ஏற்றலாம்.

vii. வீட்டில் உள்ள மற்றவர்கள் குளித்து விட்டால் குருக்களிடம் விபூதி பெற்று அணிந்து தம் கடமைகளைச் செய்யலாம்.

viii. குருக்கள் சென்றபின் அந்திவேளைப் பிரார்த்தனைக்குப் பயன்படுத்திய மேசை / மேடையைச் சுத்தம் செய்து அலங் கரிக்கவும்.

ix. வீட்டு வாசலில் நிறைகுடம் வைத்து, கதவுக்கு மேல் வழக்கமான முறையில் மாவிலை கட்டவும்.

x. மஞ்சள் தூள் கலந்த நீர், வேப்பிலை, பூண் உள்ள உலக்கை, ஆலத்தி ஆகியவற்றை வெளிவாசலில் வைக்கவும். இவை கடற் கரைக் கிரியைகளைச் செய்துவிட்டு வீடு திரும்பும் கர்த்தாவை வரவேற்பதற்காகும்.

**4.கடற்கரைக் கிரியைகள்**

**4.1 ஏற்பாடுகள் (பார்க்க : வரை படம் 2)**

i. நான்கு கம்பங்களைத் தூண் போல் நட்டு, கூரையாக 9×9அடி சதுரமான வெள்ளைத் துணியைப் பயன்படுத்தவும்.

ii. நான்கு பக்கங்கள் ஒவ்வொன்றிலும் 5 தென்னோலைத் தோரண மும் (3 மடிப்புகள் மட்டும் உள்ளவை) 5 மாவிலையும், பூச்சரமும் தொங்க விடவும்.

iii. குருக்கள் நான்கு பக்கமும் “வாசல்” வைத்து, ஒரு கம்பத்தில் இருந்து மறு கம்பம் வரை மாவினால் எல்லை கட்டுவார்.

iv. அந்த எல்லைக்குள் 2 கும்பங்கள் (சிவன் + சக்தி) வைக்கப்படும் (படம் 2.எண்11,).

v. குருக்கள் வேறு ஒரு சிறு பரப்பில் ஐந்து வேறு நிறப்பொடிகளால்

கோலம் வரைந்து வைத்திருப்பார், இது பஞ்ச சூரண மண்டபம் எனப்படும் (எண் 13).

vi. பந்தலின் எல்லைக்கு வெளியே வைக்கப்படுபவை:-

அ. அததற்கும் உரிய திக்குகளில் சிவனுடைய தசாயுதங்களுக்கான 10 கும்பங்கள் (எண் 1-10).

ஆ. ஒரு தலைவாழை இலையில் நெல் பரப்பி அதன் மேல் கொள்ளிக்குடம்.

இ. இன்னுமொரு தலைவாழை இலையில் நெல் பரப்பி அதன் மேல் குருக்கள் உரலையும் உலக்கையையும் வைப்பார். அவை மாவிலை, தருப்பை, பூச்சரம், வெள்ளைத் துண்டு ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

ஈ. இவற்றுடன் மஞ்சள் அல்லது கோமயமும் அறுகும் கொண்டு பிடித்த பிள்ளையாரும், சிறு பாத்திரத்தில் பஞ்ச கவ்வியமும் வைக்கப்படும்.

vii. அருகில் ஒரு பகுதியில் அடுப்பு மூட்டி, சோறும் பல வகைக் காய்கறிகளைச் சேர்த்துக் கறியும் படையலுக்குச் சமைக்கப்படும். ஒரு பகுதி சோற்றில் எள் கலந்து 31 உருண்டைகள் பிடிப்பர்.

viii. இறந்தவரின் பிரதியாக ஒரு பிடி தருப்பை முடிச்சு இட்டு அம்முடிச்சு தெற்குப் பக்கம் இருக்கும்படி, பச்சைத் தென்னோலை யால் ஆன பாடையில் வைக்கப்படும். இதைப் பிரேத தருப்பை/ கூர்ச்சரம் என்பர்.

ix. இதற்கிடையில் கர்த்தா சவரம் செய்து, கடலில் குளித்து (அல்லது கை,கால், முகம் கழுவி) கிரியைக்குத் தயாராக இருப்பார்.

**4.2. கிரியை**

i. குருக்கள், விநாயக பூசை, வருண பூசை, பஞ்சகவ்ய பூசை ஆகியவற்றை இதே வரிசைப்படி செய்வார்.

ii. பின் கர்த்தாவுக்குப் பூணூல் அணிவிப்பார். பூணூல் வலது தோளில் இருந்து இடது கைக்குக் கீழ் தொங்குவதாக இருக்கும்.

iii. கர்த்தா கிழக்கு நோக்கி நின்று உதயமாகும் சூரியனிடம் கிரியை களைத் தொடங்க அனுமதி கேட்பார்.

iv. பிரேத தர்ப்பை ஆசீர்வதிக்கப்பட்ட பின் அதற்கு நீராட்டல் நடக்கும். பின் தருப்பையை வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட

பாடையில் வைத்து உரல் இருக்கும் இடத்திற்குக் கொண்டு செல்வர்.

v. குருக்கள் மிருத்தக தீட்சைக்கான சடங்குகளைச் செய்து உரலை யும் உலக்கையையும் ஆசீர்வதிப்பார்.

vi. திருப்பொற் சுண்ணம் (வீட்டில் இடித்தது போல், பாடலுடன்) இடிக்கப்படும்.

vii. கர்த்தா சுண்ணத்தால் தனக்கும் பிரேத தர்ப்பைக்கும் பொட்டு இட்ட பின் மீதத்தை ஒரு வெற்றிலையில் வைத்து, அவ்வெற்றிலை யைப் பிரேத தர்ப்பை மேல் வைப்பர்.

viii. பின் பிரேத தர்ப்பையைப் பஞ்சசூரண மண்டபத்திற்கு எடுத்துச் செல்வர்.

**4.3 வைதிக பூசை.**

i. குருக்களின் துணையுடன் கர்த்தா கும்ப பூசை செய்வார். இது நிரலாக 1 முதல் 11 வரை (பார்க்க: வரை படம் 2) நடைபெறும்.

ii. ஹோம குண்டத்தின் (படம் 2:12) முன் அக்கினி காரியம் நடைபெறும். இக்கிரியையின் போது குருக்கள் கர்த்தாவை அக்கினியில் 108 முறை நெற்பொரிகளை இடச்செய்வர்.

iii. இதன் பின் பஞ்சசூரண பூசை நடைபெறும்.

iv. ஹோமம், பூரணஆகுதியுடன் நிறைவு பெறும். (மீதமிருக்கும் நெற்பொரி,நவதானியம், வெற்றிலை, பாக்கு,வாழைப்பழம், சிறு துண்டு சந்தனக்கட்டை ஆகியவற்றை ஹோமத்தீயில் இடுவதே பூரண ஆகுதி எனப்படும்.)

v. பின் குருக்கள் ஹோமத்தின் சக்தியைப் பிரதே தருப்பையில் நிறுவுவார்.

vi. கர்த்தா பஞ்சசூரண மண்டபத்தின் 5 நிற மாவினையும் சேர்த்து ஒரு இலையில் அள்ளி, பிரேத தருப்பையில் வைப்பார்.

vii. குருக்களுக்கு 3 வகைத் தானம் கொடுக்கப்படும். (தேசதானம், உருத்திர தானம், யாத்திர தானம்).

viii. பிரேத தருப்பையும் பஞ்சசூரணமும் வைக்கப்பட்டு இருக்கும் பாடை தகனத்துக்காக ஏற்பாடு செய்த இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**4.4 பிரேத தருப்பைத் தகனம்**

i. வந்திருப்போர், உடலைத் தகனம் செய்யும் முன் இட்டது போல், வாய்க்கரிசி இடுவர்.

ii. கர்த்தா கிரியைகள் நடந்த இடத்துக்குச் செல்வார். அங்கு அவரிடம் கொள்ளிக்குடமும் எரியும் சந்தனக் கட்டையும் கொடுக்கப்படும்.

iii. அவர் இடது தோளில் கொள்ளிக்குடமும் வலது கையில் பின்பக்கமாக நீட்டப்பட்ட சந்தனக்கட்டையும் கொண்டு தகனம் செய்யும் இடத்துக்கு வருவார்.

iv. உடல் தகனத்தின் பொழுது செய்தது போலவே கர்த்தா பிரேத தருப்பையை மும்முறை சுற்றி வருவார்.

v. இறுதியில் குடத்தைப் பின்புறமாக எறிந்து, கொள்ளியைப் பின்புறமாகவே பிரேத தருப்பையில் இடுவார்.

vi. பின் நீராடி விட்டே பிற கிரியைகளைத் தொடர்ந்து செய்வார்.

vii. இதற்கிடையில் வேறு ஒருவர் காய்ந்த தென்னோலை சிலவற்றை அடுக்கி அதன் மேல் இலையில் சேகரிக்கப்பட்ட பஞ்ச சூரணத்தைத் தூவுவார்.

viii. பாடையில் இருந்து பிரேத தருப்பையை எடுத்து ஓலைமேல் வைத்து எரிப்பர்.

***4.5 கல் நாட்டடல்:*** நீராட்டல் (பாஷாண ஸ்தாபனம், அபிஷேகம்) இச்சடங்கு பிரேத தருப்பைத்தகனத்துக்குப் பின்னரே நடைபெறும். எனவே வீட்டில் நாட்டுவது இல்லை.

i. வேறு ஒரு பகுதியில், அடியில் துவாரம் உள்ள புது மண் சட்டி வைக்கப்படும்.

ii. எந்த மறுவும் இல்லாத ஒரு செங்கல் உருவம் வரையப்பட்டு, இச்சட்டியில் வைக்கப்படும்.

iii. கர்த்தா(க்கள்) கிழக்கு நோக்கி நின்று, கைகளைக் குவித்து, இடது கை மேல் வலது கையை வைத்துத் திரவிய அபிஷேகம் செய்வர் (வீட்டில் இறந்தவருக்குச் செய்தது போல்).

iv. இளநீர் அபிஷேகத்தின் பின் சட்டியும், கல்லும் கழுவப்பட்டு, கல் திரும்பவும் சட்டிக்குள் வைக்கப்படும்.

v. குருக்களின் உத்தரவுப்படி, வந்திருப்போர் கிரியைகள் நடந்த

இடத்திலிருந்து கும்பங்களை நிரலாக எடுத்து வருவர். (படம் 2. எண்1 முதல் எடுத்துச் செல்லவும்)

vi. கர்த்தா(க்கள்) இறுதியாக எடுத்துச் செல்வர்.

vii. முன்போலவே (பார்க்க vi) கைகளைக் கவித்து, கும்பங்களின் நீரைக் கல் மேல் சொரிவர்.

viii. பன்னீர், வாசனைத் தைலம் ஆகியவை இறுதியாகப் பயன் படுத்தப்படும்.

ix. கல்லில் 3 மாவிலைகளும் தர்ப்பையும் வைத்து வெள்ளைத் துண்டால் கட்டப்படும்.

x. கல்லுடன் சட்டி கிரியை செய்யும் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

**4.6 பிரேத தருப்பைக்குக் காடாற்றல்**

i. உடலை எரித்த பின் செய்த காடாற்றைப் போலவே இதுவும் செய்யப்படும்.

ii. பிரேத தருப்பையின் சாம்பலில் (அஸ்தி) கொஞ்சம் உடைந்த கொள்ளிக்குடத்தின் ஓட்டில் சேகரிக்கப்படும்.

iii. எரித்த இடத்தில் நவதானியம் விதைக்கப்படும்.

iv. இந்தச் சாம்பல் கிரியை செய்யும் இடத்தில் கல்லுடன் வைக் கப்படும்.

**4.7 கல்பூசை**

i. கர்த்தா கல்லுக்கு முன் அமர்ந்து அதற்கு நீருடன் குழைத்த விபூதி அணிவிப்பார் - (கல்லுக்கு மேலும், மற்றப் பக்கங்களிலும்.)

ii. பின் சந்தனப் பொட்டும் குங்குமப் பொட்டும் இடுவார்.

iii. கல்லுக்கு மாலை அணிவிப்பார்.

**4.8 பிண்டம் அளித்தல்**
**(பிண்டம் = சோறும் எள்ளும் கலந்த 31 உருண்டைகள்)**

i. கல்லுக்கும் கர்த்தாவுக்கும் இடையில் ஒரு தலை வாழை இலை வைக்கப்படும்.

ii. அதில் குருக்கள் கொஞ்சம் நீர் தெளித்து (சுத்தப் படுத்தி) 7 முறை சிறிது எள் தூவுவார்.

iii. அதில் 3 நீண்ட தருப்பைகளையும் நீளவாக்கில் வைப்பார்.

iv. கர்த்தா இலையின் முன் மண்டியிடுவார். அவரது வலது முழங்காலும் இடது பாதமும் தரையைத் தொட வேண்டும்.

v. அவர் இடது கையைத் தரையில் ஊன்றி, பிண்டத்தை ஒவ்வொன் றாக எடுத்துத் தருப்பை மேல் வைப்பார்.

vi. அவற்றை வைப்பதற்கு இடது கைக்குக் கீழாகக் கொண்டு வந்து வலது கையை வெளிப்பக்கமாக, பெருவிரல் கீழ்நோக்கச் சாய்க்க வேண்டும்.

vii. ஒவ்வொரு தருப்பையிலும் 10 உருண்டைகள் வைக்கப்படும் (10×3=30).

viii. இறுதியாக உள்ள பெரியதை, அதே விதமாகக் கல்லிருக்கும் சட்டியில் வைப்பார். அதே நேரம் இறந்தவர், (அவரது தந்தை, பேரன் போன்று நேருறவு கொண்ட)2ஆண் மூதாதையர்களின் பெயரை உச்சரிப்பார்.

குறிப்பு:
இறந்தவர் பெண் ஆயின் அவரது பெயருடன்,( தாய், பேத்தி போன்று நேருறவு கொண்ட) 2 தாய்வழிப் பெண் மூதாதையரின் பெயர்களை உச்சரிக்க வேண்டும்.

ix. சட்டிக்குள் சிறிது எள் தூவப்படும்.

**4.9. கல்லுக்கும் அஸ்திக்கும் படையல் இடுதல்**

i. இவை இரண்டுக்கும் அருகில் ஒரு புதுத் தலை வாழை இலை வைக்கப்படும்.

ii. அதில் படையலுக்கு ஆன எல்லா உணவு வகைகளும் வைக் கப்படும் சோறு, மரக்கறி, உரித்த வாழைப்பழம், கொஞ்சம் நெய்யும் தயிரும், பலவகைப் பழங்கள், பலகாரங்கள் ஆகியன.

iii. இலைக்கு அருகில் ஒரு தேங்காய்க் காளாஞ்சி, இளநீர், கொளுத்திய ஊதுபத்தி ஆகியவை வைக்கப்படும்.

iv. கர்த்தா, கல்,பிண்டம், படையல் ஆகிய மூன்றுக்கும் ஒரு சேரச் சாம்பிராணியும் கற்பூர தீபமும் மும்முறை காட்டுவார் (இடப் பக்கமாகச் சுற்ற வேண்டும்.)

v. பஞ்ச புராணம் பாடப்படும்.

vi. இறந்தவருக்கு மரியாதை செலுத்துமாறு கல்லுக்கு உறவினரும், இறுதியில் கர்த்தாவும் மலர் சாத்துவர்.

vii. கர்த்தா மறுபடியும் சூரியனை வணங்குவார்.

viii. மறுபடியும் குருக்களுக்கு 3 தானங்கள் வழங்கப்படும்.

ix. கர்த்தா மண்டியிட்டு, 30 பிண்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து, பயபக்தியுடன் தனது கண்களுக்கு அருகில் வைத்த பின், சட்டிக்குள் இருக்கும் கல்லோடு வைப்பார்.

x. படைக்கப்பட்ட எல்லா உணவு வகைகளும் கூட அச்சட்டிக்குள் வைக்கப்படும்.

xi. அச்சட்டி கர்த்தாவின் இடது தோளில் வைக்கப்படும்.

xii. இன்னும் ஒரு கர்த்தா இல்லாவிடில், ஒரு உறவினரிடம் கும்பம் கொடுக்கப்படும்.

xiii. ஒரு கத்தியும் சில கற்பூர வில்லைகளும் வேறு ஒருவரோ இன்னும் சிலரோ எடுத்துக் கொண்டு கர்த்தாவுடன் நீர்க்கரைக்குச் செல்வர்.

**4.10 மண்சட்டியையும் அதன் உள்ளீட்டையும் நீரில் இடுதல்**

i. நீர்க்கரையை அடைந்ததும் ஒரு உறவினர் கற்பூரத்தைக் கொளுத்துவார்.

ii. கர்த்தா (ஒருவருக்கு மேலாயின் பிரதமகர்த்தா)

அ. இடுப்பளவு நீர் வரை நடந்து சென்று

ஆ. கிழக்கு நோக்கிச் சூரியனை வணங்கி

இ. பின் வடக்கு நோக்கி நின்று

ஈ. சிவ-சிவ-சிவ என உச்சரித்தபடி சட்டியைத் தோளுக்கு மேலாக எறிவார்.

iii. கர்த்தா(க்கள்) பூணூலையும் தருப்பை மோதிரத்தையும் கழற்றி அவற்றைத் தலைக்கு மேலாக நீரில் எறிவர்.

iv. பின் இறந்தவரை நினைத்து மூன்று முறை முழுமையாக நீரில் மூழ்கி எழுவர்.

v. இதற்கிடையில் ஒரு உறவினர் நீர்க்கரைஅருகே 3 கோடுகள் வரைந்திருப்பார். கர்த்தாக்கள் அவற்றைக் கடந்து வருவர் (இது இறந்தவருக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றி விட்டதைக் குறிக்கும்). (பிரதம) கர்த்தா கத்தியை எடுத்துக் கொண்டு கரையை நோக்கிச் செல்வார்.

vi. தூயநீர் இருந்தால் கர்த்தா(க்கள்) குளிப்பர். அதுவரை உடுத்தியிருந்த வேட்டியைக் களைந்து புது வேட்டி கட்டுவர்.

vii. குருக்களுக்குத் தானம் கொடுத்து வீடு திரும்புவர்.

குறிப்பு:
இந்தக் கிரியைகள் செய்யப்பட்ட இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். அங்குக் கிரியைகள் செய்யப்பட்டதற்கான எந்த அறிகுறியும் இருத்தல் கூடாது.

**5. வீட்டை அடைந்ததும்**

i. கர்த்தா(க்கள்) தூய நீரில் குளித்திருந்தால் முகம், கை, கால்களைக் கழுவுவர்.

ii. வேப்பிலையை மென்று சாற்றை விழுங்கி, சக்கையைத் துப்புவர்.

iii. உலக்கையைக் கடந்து வீட்டு வாசலில் இருக்கும் நிறை குடத்தின் அருகே வந்து நிற்பர்.

iv. ஒரு சுமங்கலி ஆலாத்தி எடுத்து நெருப்பை அணைத்து, கர்த்தாவுக்குப் பொட்டு இடுவார். பின் தட்டில் உள்ளதை வெளியே கொட்டுவார்.

v. கர்த்தா(க்கள்) வலது காலை முன் வைத்து வீட்டுக்குள் செல்வர்.

vi. பூசை அறையில் வழிபட்ட பின் குருக்களின் வருகைக்குக் காத்திருப்பர்.

குறிப்பு:

அ. கடற்கரையில் தூயநீரில் குளிக்காது போனால் அவர்கள் நேரே குளியலறைக்குச் சென்று குளித்த பின்னரே பூசை அறையில் வழிபடுவர்.

ஆ. கர்த்தாக்களும் குடும்பத்தாரும் இறந்தவருக்கு வீட்டுக் கிருத்தியத்தில் பிண்டமும் உணவும் படைக்கும் வரை விரதம் காத்தல் வேண்டும்.

**6. வீட்டுக் கிருத்தியம்**

இது வீட்டில் செய்யப்படும் கிரியைகள் எனப் பொருள்படும்.

i. குருக்கள் விநாயகர் பூசையுடன் வீட்டைத் தூய்மைப்படுத்தும் பிற சடங்குகளையும் நடத்துவார். (அவையாவன:-பஞ்சக்கவ்விய பூசை, வருணபூசை, புண்ணியாக வாசனம், பஞ்சகவ்வியத்தால்

ஆன தீர்த்தத்தை அருந்தக் கொடுத்தல், வீடு முழுவதும் கும்பநீர் தெளித்தல் ஆகியன).

ii. கர்த்தா பூணூல் அணிந்து கிரியைகளை ஆரம்பிப்பார்.

iii. அவர், எல்லாக் கிரியைகளும் நன்முறையில் நடந்தேறச் சூரியனை வணங்குவார்.

iv. பழைய வழக்கப்படி பல வேறு தானங்கள் கொடுக்கப்படும். ஆனால் தற்காலத்தில் கீழ்காணும் 4 வகையும் மிகச் சுருக்கமான முறையில் வழங்கப்படுகின்றன.

அ. ஆன்மாக்களில் பொருந்திய நவசக்தியைக் குறித்து வழங்கப்படும் நவசிராா்த்தம். (9 தானங்கள்)

ஆ. சமய அனுஷ்டானங்களில் ஏற்பட்டிருக்கக் கூடிய குறைகளை நீக்குவதற்கான சம்மிதா சிராா்த்தம் (6 தானங்கள்)

இ. பிதிர்களுக்குச் செய்யும் தருப்பணங்களின் எண்ணிக்கையில் குறையிருந்தால் அதை நிவர்த்தி செய்யும் ஏகோத்திர விருத்தி (75 தானங்கள்)

ஈ. ஆன்மா மோட்சத்தை நாடிச் செல்லும் வழியில் உதவுவதற்காகக் கொடுக்கப்படும் இடபதானம். இதில் ஒரு எருதுக்கன்று தான மாக வழங்கப்படும். ஆனால் தற்பொழுது தலைவாழை இலைமேல் அரிசியில் எருதை வரைந்து, இடபபூசை செய்து தட்சணையுடன் வழங்கப்படுகிறது.

**v. ஏகோதிட்டம்**

இது "ஒன்றைக் குறித்தல்", அதாவது இறந்தவரின் ஆன்மா திருப்திப்படுதல் எனப் பொருள்படும். வீட்டுக்கிருத்தியம் செய்யும் குருக்கள் அல்லாத வேறு ஒரு பிராமணரை அழைத்து, நிறைவாக அரிசி, காய்கறி வகையுடன் வேஷ்டி, பாய், தலையணை போன்ற தானங்களும் வழங்கப்படும். இவற்றைப் பெற்றவுடன் அவர் சென்று விடுவார். பின் 6 மாத காலத்துக்கு அவர் கர்த்தாவைச் சந்தித்தல் கூடாது.

vi. பின் கர்த்தா முகம், கை, கால்களைக் கழுவித் திருநீறு அணிந்து, திரும்பவும் தீர்த்தம் அருந்துவர். அவ்விடம் மீண்டும் சுத்தம் செய்யப்படும். (பார்க்க.IV.6.i)

**vii. மாசிக தானம்**

*இது ஒவ்வொரு சாந்திர மாதமும் (மாசம்) வரும் திதியில் வழங்கப்படும். (எனவே மாசியம் அல்லது மாசகம்). அந்தியேட்டி அன்றும் ஓராண்டு முடியுமுன் வரும் இன்னும் 12 திதிகளுக்குமாக 13 ஆகும். இதிலும் அரிசி, காய்கறிவகை, நல்லெண்ணெய், எலுமிச்சைப் பழம், சீயக்காய்த்தூள் போன்றவை கொடுக்கப்படும்.*

*குறிப்பு:*

*இத்தானங்கள் வழங்கும் போது அரிசியைக் கடற்கரையில் பிண்டம் வைத்தது போல் வைக்க வேண்டும்.*

**viii. சபிண்ட தானம் (சபிண்டீகரணம்)**

*பழைய முறைப்படி இதுவும் மிக விரிவாகச் செய்யப்படுவது. ஆனால் தற்காலத்தில் சுருக்கப்பட்டுள்ளது. 3 தலை வாழையிலையில் அரிசி ஆகியவை கொடுக்கப்படுகிறது. இவை இறந்தவரையும் அவரது இரண்டு நேருறவுப் பிதிர்களையும், குறித்து வழங்கப்படும். (பார்க்க:* iv 4.8, viii*)*

**ix. பிண்டதானம்**

*அரிசி மா, வறுத்த உழுத்தம் மா, கறுப்பு எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம்,சர்க்கரை ஆகியவற்றுடன் சிறுது நீர் கலந்து குழைத்து நான்கு உருண்டைகள் பிடிப்பர். அதனைக் குருக்களின் உதவியாளர் அல்லது உறவினர்களில் ஒருவர் செய்வர்.*

*இவற்றைக் கடற்கரையில் செய்தது போல் தலை வாழையிலையில் ஒரு நீண்ட தருப்பை மேல் கர்த்தா வைப்பார். இவற்றில் மூன்று இறந்தவருக்கும் அவரது இரண்டு நேருறவுப் பிதிர்களுக்கும் ஆகும். நான்காவது தரும பிண்டம் எனப்படும். அது அறிந்த அறியாத பிற பிதிர்களுக்குக் கொடுப்பது.*

**x. படையல்**

*சர்க்கரைப் பொங்கல், சோறு -கறி, பலகார வகைகள், (உண்பதற்கு ஏற்றவாறு) நறுக்கப்பட்ட பழ வகைகள் ஆகியவற்றுடன் இளநீரும் பிண்டத்துடன் வைக்கப்படும் (பலகார-பழ வகைகள் ஒற்றைப் படையாக இருத்தல் வேண்டும்.)*

xi. *கர்த்தா இளநீரைக் கொத்தி, பிண்டம், படையல் ஆகியவற்றுடன் சேர்த்து மும்முறை சாம்பிராணி, கற்பூர தீபம் காட்டி அவற்றுக்கு மலர் தூவுவர்.*

xii. இறந்தவரின் படத்துக்கும் கர்த்தா தூப தீபம் காட்டி மலர் தூவுவர். இவரைத் தொடர்ந்து குடும்பத்தவரும் பின் பிறரும் அதே போல் மரியாதை செலுத்துவர்.

*குறிப்பு:*

தேவகாரியம் வலமிருந்து இடமாகவும் (clockwise) பிதிர் காரியம் இடமிருந்து வலமாகவும் செய்தல் வேண்டும். அந்தியேட்டிக் கிரியைகளுக்குப் பின்னும் இறந்தவர்களுக்குக் காட்டும் தூப தீபங்களும் பிற அர்ப்பணங்களும் இடமிருந்து வலமாகவே (anti - clockwise) செய்யப்பட வேண்டும். சைவ மரபின்படி இறந்தவர்கள் தனித் தனிப் பிதிர் ஆவர். இறைவனுடன் ஒன்றாகி விடுவதில்லை. (பார்க்க: சிவபுராணம் அடி 91 செல்வர்.......சிவனடிக் கீழ்)

xiii. பஞ்ச புராணம் பாடப்படும்

xiv. கர்த்தா பிண்டத்தைப் பார்த்தபடி அட்டாங்க நமஸ்காரம் செய்வார்.

xv. பின் தில தருப்பணம் (எள்ளும் நீரும் இறைத்தல்) நடைபெறும். அப்பொழுது குருக்கள் உரிய மந்திரங்களை உச்சரிப்பார். இதற்கு ஒரு பெரிய பாத்திரம் பயன்படுத்தப்படும். கர்த்தா சிறிது கறுப்பு எள்ளைக் கையில் வைத்திருக்க நீரை அவரது மனைவி அல்லது தாயார் இறைப்பார். இருவரும் செய்ய முடியாத சூழ்நிலையில் குருக்கள் இறைப்பார்.

xvi. கர்த்தா, பிண்டம் இடும் பொழுது நின்றது போல் மண்டியிட்டு, குருக்கள் பிண்டத்தை ஆசீர்வதிப்பதற்காகத் தூவிய மலர்களை எடுத்துப் பிண்டத்தின் மேல் வைப்பார்.

xvii. படைக்கப்பட்ட உணவு வகைகள் எல்லாவற்றிலும் சிறிது எடுத்துப் பிண்டத்துடன் வைத்து, முழுவதையும் எள் இறைத்த பாத்திரத்தில் இடுவார்.

xviii. பிரதான படையல் (சோறு-கறி) மற்ற உணவு வகைகள் சமையல்/ சாப்பாட்டு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

xix. கர்த்தா சூரியனை வணங்கி, வாசல் நிறைகுடத்துப் பிள்ளை யாருக்கு மலர் சாத்துவார்.

xx. குருக்கள் கர்த்தாவுடன் சென்று பூசை அறையை ஆசீர்வதித்துத் தூய்மைப்படுத்துவார்.

xxi. கிரியைகள் செய்யும் இடத்துக்குத் திரும்பிய பின் கர்த்தா பூணூலையும் தருப்பையையும் கழற்றி, 2 வெற்றிலை-பாக்கில் தட்சணை வைத்துக் குருக்களிடம் கொடுப்பர்.

xxii. குருக்களிடம் அட்சதை - ஆசீர்வாதம் பெற்றபின் கர்த்தா(க்கள்) குடும்பத்தில் மிக மூத்தவரிடம் ஆசீர்வாதம் பெறுவர்.

xxiii. குருக்கள் விடைபெற்றுக் கொள்வார். அப்போது கர்த்தாவும் உடன் சென்று குருக்களையும் நிறைகுடத்தையும் வலம்வந்து அவரது ஆசீர்வாதத்தைப் பெறுவார்.

xxiv. பின் கர்த்தாவும் உதவிக்கு மேலும் இரண்டொருவரும் பிண்டம் முதலியன வைத்த பாத்திரமும் கற்பூரமும் எடுத்துக் கொண்டு ஒரு ஆற்றங்கரைக்குச் செல்வர். அங்குக் கர்த்தா கற்பூரம் கொளுத்திச் சூரியனை வழிபட்டுப் பாத்திரத்தில் இருப்பதை நீருக்குள் கொட்டுவார். பசு மாடு இருப்பின் அதற்கு வைக்கலாம்.

xxv. கத்தாவின் ஆடையிலோ பாத்திரத்திலோ எள் ஒட்டாமல் பார்க்கவும்.

xxvi. இதற்கிடையில் வீட்டில் கூட்டு வழிபாடு நடத்தலாம். வந்திருப்போர் இறந்தவருக்குத் தூப தீபம் காட்டி மலர் சாத்தலாம்.

xxvii. மதிய உணவு பரிமாறப்படும். படையலைக் குடும்பத்தவர் பகிர்ந்து உண்பது வழக்கம்.

**7. அந்தியேட்டிக் கிரியைகளுக்குப் பின்**

*1.* தனிஷ்டா பஞ்சமி: - இதைப் பொதுவாகப் பஞ்சமி திதி என்பர். ஆனால் இதற்கும் பௌர்ணமி, அமாவாசைக்குப் பின் வரும் பஞ்சமிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தனிஷ்டா என்பது 23ஆவது நட்சத்திரமாகிய அவிட்டத்தின் இன்னுமொரு பெயர். எனவே அதில் தொடங்கி ஐந்து நட்சத்திரங்கள் (சதயம், பூராட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி) தனிஷ்டா பஞ்சமி ஆகும்.

இந்த நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் அக்குடும்பத்தில் விரைவிலேயே இன்னுமொரு மரணம் நேரிடும் என நம்பப்படுகிறது.

இதனைத் தவிர்க்க 32ஆம் நாள் முதல் 45ஆம் நாளுக்குள் அந்தி வேளையில் சாந்திக் கிரியைகள் செய்யப்படும்.
இவற்றை, இறந்தவருக்குக் கிரியை செய்யும் குருக்களில் ஒருவர் செய்வார்.

2. வழிபாட்டுக்குப் பயன் படுத்தப்பட்ட (இறந்தவரின்) படத்தைப் பொருத்தமான ஒரு இடத்தில் மாட்டிவிடலாம். அல்லது ஒரு மேசையில் வைக்கலாம். படம் முன் வாசலைப் பார்த்தபடி இருத்தல் கூடாது.

3. குடும்பத்தவர் ஆண்டுத் திவசம் முடியும் வரை கோயில் வழிபாடு, சுபகாரியங்கள் ஆகியவற்றில் கலந்து கொள்ளாமை பாரம்பரிய வழக்காகும். எனினும், இயற்கை மரணம் நேர்ந்திருந்தால் **41** ஆம், நாள் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து மோட்ச தீபம் ஏற்றி, பின் கோயிலில் நித்திய பூசைகளில் கலந்து கொள்ளலாம்.

4. குடும்பத்தவரும் அவரது ஆண் வழித் தொடர்பினரும் ஆண்டுத் திவசம் வரை திருமணம் போன்ற மங்கல காரியங்கள் நடத்துவது மரபு அன்று.

**V. ஆண்டுத் திவசம்**

1. இது இறப்பு நிகழ்ந்து ஒரு ஆண்டு முடிவுறும் போது நடத்தப் படும் வழிபாட்டைக் குறிக்கும். இதனை ஆட்டத் திவசம், தலைத்திவசம் என்றும் கூறுவர்.

i. இதற்காகிய நாள் மரணம் சம்பவித்த மாதம், பட்சம் (வளர்பிறை, தேய்பிறை) திதி ஆகியவற்றின் படி குறிக்கப்படும்.

ii. இதற்கான கிரியைகள் பெரும்பாலும் வீட்டுக் கிருத்தியம் போலவே இருக்கும். ஆனால் (IV.6., iii, iv, v) ஆகியவை நடத்தப்படுவதில்லை.

iii. சபிண்டீகரண தானம் (4.12. vi) கொடுக்கப்படும்.

iv. மாசிக தானத்துக்குப் பதில் ஒரு ஆண்டுத்தானம் வழங்கப்படும்.

v. மற்றும் பிண்டம், தானம், படையல் போன்றவை (IV.6., viii - xxiv) அந்தியேட்டி தினத்தைப் போலவே நடத்தப்படும்.

ஆனால் குருக்கள் பூசை அறையைப் புனிதப்படுத்தும் தேவை இங்கு இல்லை.

**உ. வருடாந்தரத் திவசம்**

இது முதல் ஆண்டுத் திவசத்திற்குப் பின் ஆண்டுதோறும் கொடுக்கப் படுவது. இதனை வருடாந்தர சிரார்த்தம் என்றும் கூறுவர்.

இதற்கான கிரியைகள் முதலாண்டுத் திவசம் போன்றே இருக்கும். ஆனால் சபிண்டிகரண தானம் கொடுக்கப்படுவதில்லை.

## இணைப்பு : 1
## சவக்கிரியைக்குத் தேவையான பொருட்கள்

| | பொருள் | அளவு |
|---|---|---|
| 1. | நெல் | 3 கிலோ |
| 2. | அரிசி | 4 கிலோ |
| 3. | நவதானியம் | 600 கிராம் |
| 4. | கறுப்பு எள் | 300 கிராம் |
| 5. | சர்க்கரை | 150 கிராம் |
| 6. | தேன் | 1 கிளாஸ் / சிறு போத்தல் |
| 7. | பால் | 1 லீட்டர் |
| 8. | தயிர் | 1/2 லீட்டர் |
| 9. | நெய் | 1/2 கிலோ |
| 10. | நல்லெண்ணெய் | 1/2 போத்தல் |
| 11. | தேங்காய் எண்ணெய் (விளக்குக்கு) | 1போத்தல் |
| 12. | அரிசி மா | 1 சிப்பம் (பாக்கெட்) |
| 13. | சீயக்காய்த் தூள் | 1 சிப்பம் |
| 14. | கற்பூரம் | 2 பெட்டி |
| 15. | சாம்பிராணி (திடீர் வகை 2 பெட்டி) | 1 சிறு பெட்டி |
| 16. | ஊதுபத்தி | 6 - 8 சிறு கட்டுகள் |
| 17. | மஞ்சள் தூள் | 1 சிப்பம் |
| 18. | கோசலம் | கொஞ்சம் |
| 19. | கோமயம் | 1 சிறு போத்தல் |
| 20. | அபிஷேகக் கூட்டு | 1 சிறு சிப்பம் |
| 21. | சந்தனம் | 1 சிறு சிப்பம் |
| 22. | குங்குமம் | 1 சிறு சிப்பம் |
| 23. | எலுமிச்சம் பழம் | 20 |
| 24. | ஆரஞ்சுப்பழம் | 3 |
| 25. | வெற்றிலை | 100 |
| 26. | களிப்பாக்கு | 50 கிராம் |
| 27. | வாழைப்பழம் | 30 |
| 28. | தேங்காய் | 15 |
| 29. | இளநீர் | 3 |

| | | |
|---|---|---|
| 30. | கரும்பு | 1 துண்டு (அல்லது சாறு 1/2 லீட்டர்) |
| 31. | தலைவாழையிலை | 25 |
| 32. | மண்பானை | 1 |
| 33. | மண் சட்டி | 1 |
| 34. | உதிரிப்பூ | - |
| 35. | பூச்சரம் | 5 முழம் (கிரியைக்கு) |
| 36. | பூமாலை | 1 |
| 37. | வெள்ளைத்துண்டு | 1 |
| 38. | சிவப்புத்துண்டு | 1 |
| 39. | மஞ்சள் (வாஸ்து) துண்டு | 1 |
| 40. | வேட்டி சால்வை (குருக்களுக்கு) | 1 ஜோடி |
| 41. | வேட்டி சால்வை (கர்த்தாக்களுக்கு) | ஒவ்வொன்று |
| 42. | வேட்டி (பந்தலுக்குக் கட்ட) | 1 |
| 43. | வெள்ளை நூல் (எண் 10) | 2 (கண்டு) பந்து |
| 44. | கயிறு/ரஃபியா | - |
| 45. | தென்னங்குருத்து | ஒரு முழுமட்டை (தோரணத்திற்கு) |
| 46. | மாவிலை | 150 |
| 47. | அறுகம்புல் | சில |
| 48. | குத்து விளக்கு | 1 |
| 49. | விளக்குத் திரி | சில |
| 50. | பெரிய (வெட்டுக்) கத்தி | 1 |
| 51. | பெரிய வாளி | 1 |
| 52. | தீப்பெட்டி | 1 |
| 53. | சிறு வாளி (தண்ணீர் அள்ள) | 1 |
| 54. | ஆசனம் (பாய்/மனைக்கட்டை/ ஜமுக்காளம்) குருக்கள் அமர | 1 |
| 55. | உரல் | 1 |
| 56. | உலக்கை | 1 |
| 57. | வாழைமடல்கள் | 4 நீளமானவை |
| 58. | சில்லறை நாணயம் (5, 10 காசுகள்) | 5 ரிங்கிட் |
| 59. | சந்தனக் கட்டை | 1 |
| 60. | நெல் பொரி | 150 கிராம் |
| 61. | மெல்லிய கம்பி (கொள்ளிக் குடத்திற்குச் சட்டம் செய்ய) | 1 கொஞ்சம் |

| | | |
|---|---|---|
| 62. | விறகு (தகனத்துக்கு) | 4 அல்லது 5 பெரிய கட்டுக்கள் |
| 63. | மண்ணெண்ணெய் | 1 டின் |
| 64. | நெய் (தகனத்துக்கு) | - |

குறிப்பு:

1. நவதானியம் ஒன்பது வகைத் தானியங்களின் கலவை, வழக்கமாகக் கோதுமை, நெல், பச்சைப்பயறு, உளுந்து, துவரை, கடலை, மொச்சை, எள், கொள்ளு ஆகியன பயன்படுத்தப்படும்.
2. எண் 62, 63, 64 பாரம்பரிய தகனத்துக்குப் பயன்படுத்தப் படுபவை. எரிவாயு வசதிகள் இருந்தால் இப்பொருட்கள் தேவைப்படமாட்டா.

## இணைப்பு : 2

## காடாற்றுக்குத் தேவையான பொருட்கள்

| | பொருள் | அளவு |
|---|---|---|
| 1. | பால் | 1 குவளை |
| 2. | தயிர் | 1/2 குவளை |
| 3. | நெய் | 1/2 குவளை |
| 4. | தேன் | 1/2 குவளை |
| 5. | இளநீர் | 3 |
| 6. | எலுமிச்சம்பழம் | 3 |
| 7. | ஆரஞ்சுப்பழம் | 3 |
| 8. | கரும்பு | 1 துண்டு (அல்லது 1/2 - லீட்டர் சாறும்) |
| 9. | மாம்பழம் | 2 |
| 10. | வாழைப்பழம் | 15 |
| 11. | வெற்றிலை | 12 |
| 12. | களிப்பாக்கு | 6-7 துண்டுகள் |
| 13. | அரிசி | 600 கிராம் |
| 14. | நவதானியம் | 100 கிராம் |
| 15. | நல்லெண்ணெய் | 1/4 போத்தல் |

| | | |
|---|---|---|
| 16. | தேங்காய் எண்ணெய் (விளக்குக்கு) | 1/4 போத்தல் |
| 17. | குத்து விளக்கு | 1 |
| 18. | விளக்குத் திரி | 3 |
| 19. | மாவிலை | 15 |
| 20. | தலைவாழையிலை | 3 |
| 21. | கற்பூரம் | 5 சிறு சிப்பங்கள் |
| 22. | சாம்பிராணி (திடீர் வகை 5) | 1/2 சிப்பம் |
| 23. | ஊதுபத்தி | 2 சிறுகட்டு |
| 24. | தீப்பெட்டி | 1 |
| 25. | உப்பில்லாத 'பால்ரொட்டி" (சப்பாத்தி போல் வெறும் அரிசி மாவில் செய்தது) | 3 |
| 26. | செம்பு | 1 |
| 27. | குவளை (டம்பிளர்) | 1 |
| 28. | திருநீறு | 1 சிறு சிப்பம் |
| 29. | சந்தனம் (தூள்/குழம்பு) | 1/2 சிறு சிப்பம் |
| 30. | குங்குமம் | கொஞ்சம் |
| 31. | அரிசி மா | 200 கிராம் |
| 32. | சீயக்காய் தூள் | 1 சிப்பம் |
| 33. | அபிஷேகக் கூட்டு | 1 சிப்பம் |
| 34. | மஞ்சள் தூள் | 100 கிராம் |
| 35. | மண்பானை (பெரிது) | 1 |
| 36. | தேங்காய் | 3 |
| 37. | பெரிய (வெட்டுக்) கத்தி | 1 |
| 38. | வெள்ளைத் துணி | 1 (மண்பானை சுற்ற) |
| 39. | உதிரிப் பூக்கள் | - |
| 40. | அகல் விளக்கு | 1 |

## இணைப்பு : 3

## புண்ணியாக வாசனத்திற்குத் தேவையான பொருட்கள்

| | பொருள் | அளவு |
|---|---|---|
| 1. | மஞ்சள் தூள் | 1/2 சிப்பம் |
| 2. | திருநீறு | ஒவ்வொன்றிலும் கொஞ்சம் |
| 3. | சந்தனம் | |
| 4. | குங்குமம் | |
| 5. | கற்பூரம் | 10 சிறு சிப்பம் |
| 6. | சாம்பிராணி (திடீர் வகை 5,6) | கொஞ்சம் |
| 7. | ஊதுபத்தி | 2 சிறுகட்டு |
| 8. | வெள்ளை நூல் (எண் 10) | 1 கண்டு |
| 9. | பால் | 1/2 குவளை |
| 10. | தயிர் | 1/4 குவளை |
| 11. | நெய் | 1/4 குவளை |
| 12. | கோசலம் | சிறுபோத்தல் |
| 13. | கோமயம் | கொஞ்சம் |
| 14. | அரிசி | 1 கிலோ |
| 15. | தேங்காய் | 3 |
| 16. | வெற்றிலை | 10 |
| 17. | களிப் பாக்கு | 4-5 துண்டுகள் |
| 18. | வாழைப்பழம் | 6 அல்லது 7 |
| 19. | தலை வாழையிலை | 3 |
| 20. | மாவிலை | 25 |
| 21. | அறுகம்புல் | சில |
| 22. | உதிர்ப் பூ | - |
| 23. | செம்பு/குடம் | 1 |
| 24. | குத்து விளக்கு | 1 |

## இணைப்பு : 4

## கடற்கரைக் கிரியைகளுக்குத் தேவையான பொருட்கள் (அந்தியேட்டி)

| | பொருள் | அளவு |
|---|---|---|
| 1. | அரிசி | 1 கிலோ |
| 2. | அரிசிமா | 1/2 கிலோ |
| 3. | நெல் | 1/2 கிலோ |
| 4. | நெற்பொரி | 100 கிராம் |
| 5. | மஞ்சள் தூள் | 1 சிப்பம் |
| 6. | கறுப்பு எள் | 50 கிராம் |
| 7. | நவதானியம் | 100 கிராம் |
| 8. | கற்பூரம் | 1 பெட்டி |
| 9. | சாம்பிராணி (திடீர் வகை 10 வில்லைகள்) | 1 சிறு பெட்டி |
| 10. | ஊதுபத்தி | 2 சிறுகட்டுகள் |
| 11. | திரு நீறு | கொஞ்சம் |
| 12. | சந்தனம் (தூள்/குழம்பு) | 1 சிறு சிப்பம் |
| 13. | குங்குமம் | கொஞ்சம் |
| 14. | சந்தனக் குச்சி (சிறியது) | 1 (கொள்ளிக்கு) |
| 15. | தேங்காய் எண்ணெய் (விளக்குக்கு) | 1/2 லீட்டர் |
| 16. | திரி | 3 அல்லது 4 |
| 17. | பன்னீர் | 1 போத்தல் |
| 18. | தேன் | 1 சிறு போத்தல் |
| 19. | அபிஷேகக் கூட்டு | 1 சிப்பம் |
| 20. | பால் | 1/2 லீட்டர் |
| 21. | தயிர் | 1 குவளை |
| 22. | நெய் | 1 சிறு டின் |
| 23. | நல்லெண்ணெய் | 1/4 போத்தல் |
| 24. | சர்க்கரை | 50 கிராம் |
| 25. | சீயக்காய்த் தூள் | 1 சிப்பம் |
| 26. | கோமயம் | கொஞ்சம் |
| 27. | கோசலம் | 1 சிறு போத்தல் |
| 28. | ஆரங்சுப் பழம் | 3 அல்லது 5 |

| | | |
|---|---|---|
| *29.* | எலுமிச்சம் பழம் | *3 அல்லது 5* |
| *30.* | வாழைப்பழம் | *2 சீப்பு* |
| *31.* | பழம் *3 அல்லது 5* வகை | ஒவ்வொன்று |
| *32.* | கரும்பு (அல்லது சாறு) | *1 துண்டு (1/2 லீட்டர்)* |
| *33.* | பலகாரம் *3 அல்லது 5* வகை | கொஞ்சம் |
| *34.* | இளநீர் | *3* |
| *35.* | தேங்காய் | *15* |
| *36.* | வெள்ளைத் துணி (பந்தலுக்கு) | 9x9 அடி |
| *37.* | வெள்ளைத் துணி (பாடைக்கு) | *1 மீட்டர்* |
| *38.* | சிவப்புத் துணி | கொள்ளிக் குடம் சுற்ற |
| *39.* | வெள்ளை நூல் (எண் 10) | *1 கண்டு* |
| *40.* | பச்சை நிறப் பொடி | |
| *41.* | சிவப்பு நிறப் பொடி | ஒவ்வொன்றிலும் சிறிதளவு |
| *42.* | கறுப்பு நிறப் பொடி | |
| *43.* | தலை வாழையிலை | *25* |
| *44.* | மாவிலை | *100* |
| *45.* | தோரணம் | - |
| *46.* | அறுகு | சில |
| *47.* | பூ மாலை | *1* |
| *48.* | பூச்சரம் | *5 முழம்* |
| *49.* | உதிரிப்பூ | - |
| *50.* | காய்ந்த தென்னோலை | எரிப்பதற்கு |
| *51.* | பச்சை ஓலை | பாடைக்கு |
| *52.* | மண்சட்டி (துளையுடன்) | *1* |
| *53.* | மண் பானை | *1* |
| *54.* | அகல் விளக்கு | *1* |
| *55.* | காய்கறி வகைகள் *(5, 7 அல்லது 9)* | ஒவ்வொன்றிலும் சிறிதளவு |
| *56.* | புதுச் செங்கல் | *1* |
| *57.* | நிலக்கரி | *1* |
| *58.* | சில்லறை நாணயம் *(10, 5 காசுகள்)* | *5 ரிங்கிட்* |
| *59.* | வேஷ்டி - குருக்களுக்கு | *1* |
| *60.* | வேஷ்டி - கர்த்தா(க்களுக்கு) | ஒவ்வொன்று |
| *61.* | விறகு | *1 சிறு கட்டு* |

| | | |
|---|---|---|
| 62. | மண்ணெண்ணெய் (நெருப்பு மூட்ட) | 1/4 லீட்டர் |
| 63. | தீப்பெட்டி | 1 பெட்டி |
| 64. | சிறு கத்தி (பழம் போன்றவை நறுக்க) | 1 |
| 65. | வெட்டுக்கத்தி | 1 |
| 66. | உரல் - உலக்கை | 1 சோடி |
| 67. | தட்டுக்கள் (நடுத்தர அளவில்) | 2 |
| 68. | கிண்ணங்கள் (அபிஷேகப் பொருள்களுக்கு) | 4 அல்லது 5 |
| 69. | சமையல் பாத்திரம் (நடுத்தர அளவில்) | 2 |
| 70. | கரண்டி | 1 |
| 71. | தூபக்கால் | 1 |
| 72. | சூடத்தட்டு | 1 |
| 73. | அடுப்பு அல்லது செங்கற்கள் | 6 |

குறிப்பு:

எண் 64 முதல் கூறப்பட்ட பொருட்களைத் திரும்பக் கொண்டு வரலாம்.

## இணைப்பு : 5

## வீட்டுக்கிருத்தியத்திற்குத் தேவையான பொருட்கள்

| | பொருள் | அளவு |
|---|---|---|
| 1. | மஞ்சள் தூள் | 1 சிப்பம் (பாக்கெட்) |
| 2. | அரிசி மா | 1 சிப்பம் |
| 3. | உழுத்தம் மா | 1 சிப்பம் |
| 4. | சர்க்கரை | 100 கிராம் |
| 5. | கறுப்பு எள் | 50 கிராம் |
| 6. | தேன் | 1 கிளாஸ் / சிறு போத்தல் |
| 7. | திருநீறு | கொஞ்சம் |
| 8. | சந்தனம் | சிறு சிப்பம் |
| 9. | குங்குமம் | கொஞ்சம் |

| | | |
|---|---|---|
| *10.* | கற்பூரம் | *2* பெட்டி |
| *11.* | ஊதுபத்தி | *5* அல்லது *6* சிறு கட்டுகள் |
| *12.* | சாம்பிராணி (திடீர் வகை *2* பெட்டி) | *1* சிறு பெட்டி |
| *13.* | வெள்ளை நூல் (எண் *10*) | *1* சிறு பெட்டி |
| *14.* | பால் | *1* குவளை |
| *15.* | தயிர் | *1/2* குவளை |
| *16.* | நெய் | *1/2* குவளை |
| *17.* | நெய் (தானத்திற்கு) | *16* சிறு டின்கள் |
| *18.* | நல்லெண்ணெய் (*1/2*, *1/4* அல்லது *1/8* போத்தல்) | *16* |
| *19.* | சீயக்காய்த்தூள் | *16* சிப்பம் |
| *20.* | இஞ்சி | *16* துண்டுகள் |
| *21.* | எலுமிச்சம்பழம் | *16* |
| *22.* | அரிசி | *15* கிலோ (மீதியை வைத்துக் கொள்ளலாம்) |
| *23.* | தேங்காய் | *25* |
| *24.* | வெற்றிலை | *60* |
| *25.* | களிப்பாக்கு | *100* கிராம் |
| *26.* | வாழைப்பழம் | *80* |
| *27.* | சேலை அல்லது வேட்டி (பிண்டத்திற்கு) | *1* |
| *28.* | தலைவாழையிலை | *25* |
| *29.* | மாவிலை | *25* |
| *30.* | அறுகம்புல் | சில |
| *31.* | உதிரிப்பூ | - |
| *32.* | பூச்சரம் | *5* முழம் (கிரியைக்கு) |
| *33.* | பூமாலை (இறந்தவர் படத்திற்கு) | *1* |
| *34.* | தேங்காய் எண்ணெய் (விளக்குக்கு) | *1* லீட்டர் |
| *35.* | திரி | *25* |
| *36.* | குத்து விளக்கு | *4* |
| *37.* | ஆசனம் | *1* |
| *38.* | பாய் | *1* |
| *39.* | தலையணை | *1* |
| *40.* | கம்பளி (போர்வை) | *1* |
| *41.* | செருப்பு (ஸ்லிப்பர்) | *1* சோடி |
| *42.* | குடை | *1* |

| | | | |
|---|---|---|---|
| 43. | கைவிசிறி | | 1 |
| 44. | தட்டம் | | 1 |
| 45. | செம்பு | | 1 |
| 46. | குவளை | | 1 |
| 47. | விளக்கு (காமாட்சி) | | 1 |
| 48. | வேட்டி - சால்வை | | 2 |
| 49. | காய் - கறிகள் (தானத்திற்கு) | | |
| 50. | சில்லறை | | 15 ஒரு ரிங்கிட்,<br>10, 5 காசுகள் சில |
| 51. | படையல் | 1. சோறு கறி (சைவ வகை மட்டும்)<br>2. பலகாரம் 3, 5 அல்லது 7 வகை<br>3. பழவகை 3, 5 அல்லது 7 வகை<br>4. சர்க்கரைச் சாதம், உரித்த வாழைப்பழமும், தயிரும் மேலே வைத்து<br>5. இளநீர் 1 | |

தானங்களின் விபரம் (தேவையான பொருட்கள் மேற்படி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன)

| | | | |
|---|---|---|---|
| 1. | பூணூல் அணிய | - அரிசி, தேங்காய் | 1 |
| 2. | நவசிரார்த்தம் | - தட்சணை | |
| 3. | ஏகோத்திர விருத்தி சிரார்த்தம் | | |
| 4. | சம்ஹிதா சிரார்த்தம் | | |
| 5. | இடப பூசை | - அரிசி, காய்கறி வகைகள் | 1 |
| 6. | இடப தானம் | - அரிசி, காய்கறி வகைகள் | 1 |
| 7. | ஏகோ திட்டம் | - அரிசி, காய்கறி வகைகள்<br>வேட்டி சால்வை, உபசாரங்கள்<br>(பட்டியலில் 37 முதல் 47 வரை) | 1 |
| 8. | மாசியம் | - அரிசி, காய்கறி வகைகள் | 12 |
| 9. | சபிண்டீகரணம் | - அரிசி, காய்கறி வகைகள்<br>வேட்டி சால்வை | 3 |
| 10. | கோதானம் | - தட்சணை | |

# இணைப்பு : 6

## ஆண்டுத் திவசத்திற்குத் தேவையான பொருட்கள்

| பொருள் | அளவு |
|---|---|
| 1. மஞ்சள் தூள் | 1 சிப்பம் |
| 2. அரிசி மா | 1 சிப்பம் |
| 3. உழுத்தம் மா | 1 சிப்பம் |
| 4. சர்க்கரை | 100 கிராம் |
| 5. கறுப்பு எள் | 50 கிராம் |
| 6. தேன் | 1 சிறு போத்தல் |
| 7. திருநீறு | - |
| 8. சந்தனம் | - |
| 9. குங்குமம் | - |
| 10. கற்பூரம் | 1 பெட்டி |
| 11. ஊதுபத்தி | 2 சிறு கட்டுகள் |
| 12. சாம்பிராணி (திடீர் வகை 1 பெட்டி) | |
| 13. வெள்ளை நூல் (எண் 10) | 1 கண்டு |
| 14. பால் | 1/2 குவளை |
| 15. தயிர் | 1/4 குவளை |
| 16. நெய் | 1/4 குவளை |
| 17. நெய் (தானத்திற்கு) | 1 சிறு டின் |
| 18. நல்லெண்ணெய் (1/2, 1/4 அல்லது 1/8 போத்தல்) | 3 |
| 19. சீயக்காய்த்தூள் | 3 சிப்பம் |
| 20. இஞ்சி | 3 துண்டுகள் |
| 21. எலுமிச்சம்பழம் | 3 |
| 22. அரிசி(மீதியை வைத்துக் கொள்ளலாம்) | 5 கிலோ |
| 23. தேங்காய் | 8 |
| 24. வெற்றிலை | 30 |
| 25. களிப்பாக்கு | 10-12 துண்டுகள் |
| 26. வாழைப்பழம் | 1 அல்லது 2 சீப்பு |
| 27. ஆசனம் | 1 |
| 28. பாய் | 1 |

| | | |
|---|---|---|
| *29.* | தலையணை | *1* |
| *30.* | கம்பளி (போர்வை) | *1* |
| *31.* | செருப்பு (ஸ்லிப்பர்) | *1* சோடி |
| *32.* | குடை | *1* |
| *33.* | கைவிசிறி | *1* |
| *34.* | தட்டம் | *1* |
| *35.* | செம்பு | *1* (ஸ்டீல் வகை) |
| *36.* | குவளை | *1* |
| *37.* | விளக்கு (காமாட்சி) | *1* |
| *38.* | வேட்டி - சால்வை | *1* சோடி |
| *39.* | வேட்டி அல்லது சேலை (பிண்டத்திற்கு) | *1* |
| *40.* | தலை வாழையிலை | *8* |
| *41.* | மாவிலை | *25* |
| *42.* | அறுகம்புல் | சில |
| *43.* | உதிரிப்பூ | - |
| *44.* | பூச்சரம் | *5* முழம் |
| *45.* | பூமாலை (படத்திற்கு) | *1* |
| *46.* | காய் - கறிகள் | *3* இலைகளில் (தானத்திற்கு) |
| *47.* | படையல் | (*31*ஆம் நாளைப் போல்) |

தானங்கள்:

*1.* பூணூல் அணிய - அரிசி, தேங்காய் *1*
*2.* இறந்தவருக்கும் மூதாதையருக்கும் - அரிசி காய்கறி வகைகள் (*3*)

## இணைப்பு 7
## பயனுள்ள சில குறிப்புகள்

### 1. நிறைகுடம்

#### 1.1. பொது

அ. ஒரு தலைவாழையிலையைத் தலைப்பகுதி வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருக்கும்படி வைக்கவும். வீட்டு வாசலாயின் இவ்விரண்டு திக்குகளுக்குள் இருக்கும்படி வைக்கலாம்.

ஆ. அதன் நடுவில் சிறிது அரிசி அல்லது நெல் பரப்பவும்.

இ. தண்ணீர் நிரப்பி ஒரு நாணயமும் இட்ட குடத்தை வைக்கவும்.

ஈ. குடத்தின் வாய்ப்பகுதியில் 5 அல்லது 7 மாவிலைகளை, நுனி வெளியில் தெரிய விரித்து வைக்கவும்.

உ. அவற்றின் மேல் நன்கு சுத்தம் செய்த தேங்காயை வைக்கவும். தேங்காயின் குடுமி 3 கண்களையும் மூடி இருத்தல் வேண்டும். மங்கல நிகழ்ச்சியாயின் மஞ்சள் பூசலாம்.

ஊ. பொட்டு, பூ, சரம் கொண்டு தேங்காயையும் குடத்தையும் அலங்கரிக்கவும்.

எ. கோமயம் அல்லது மஞ்சளால் பிடித்து அறுகு குத்திய பிள்ளை யாரை வைக்கவும்.

ஏ. நைவேத்தியமாக 2 வெற்றிலை, 2 பாக்குத் துண்டு, 2 வாழைப் பழங்களை வைக்கவும்.

ஐ. பக்கத்தில் பொட்டு, பூக்களால் அலங்கரிக்கப்பட்ட குத்து விளக்கு வைக்கவும். மங்கல நிகழ்ச்சிகளுக்கு 5 திரிகள் ஏற்றப் படும்.

ஒ. ஊதுபத்தி கொளுத்தி வைக்கவும்.

### 1.2 அபரக்கிரியைகள்

வீட்டுக் கிருத்தியம் நீங்கலாகப் பிற அபரக்கிரியைகளுக்கு: -

அரிசி மட்டும் பயன்படுத்தப்படும். (அ)
மாவிலை புறப்பக்கமாக வைக்கப்படும்.(ஆ)
அலங்காரம் இருக்காது. (இ, ஐ)
ஒரு திரி மட்டும் ஏற்றப்படும்.(ஈ)

### 2. நெய்ப்பந்தம்

நீள வாக்கில் பிளக்கப்பட்ட தென்னோலைத் தண்டுகள், ஏறத்தாழ 11/2 அடி நீளமானவை பயன்படுத்தப்படும். (தோரணத்துக்குக் குருத்தோலை எடுத்த தண்டைப் பயன்படுத்தலாம்.)

ஒரு நுனியில் சிறிது வெள்ளைத் துணியைச் சுற்றவும்.

நுனிப் பகுதியை நெய்யில் தோய்க்கவும்.

குறிப்பு: வந்திருக்கும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பந்தங்கள் தயாரிக்கவும்.

**3. வாய்க்கரிசி**

இது பச்சரிசி, பல் போல் சிறிதாக நறுக்கப்பட்ட தேங்காய்ச் சொட்டு (துண்டு) சில்லறைக் காசு ஆகியவற்றின் கலவை.

**4. உரல், உலக்கை**

பொதுவாக மரத்தால் ஆகிய உரலும் உலக்கையும் பயன்படுத்தப்படும். உலக்கைக்கு ஒரு பக்கம் இரும்புப் பூண் இருக்கும். இவற்றுக்கு மும்மூன்று மாவிலைகளைப் புறப்பக்கமாக வைத்து, சிறிய வெள்ளைத் துண்டால் கட்டப்படும்.

**5. கொள்ளிச்சட்டி**

ஒரு புது மண் சட்டியில் நெருப்புத் தணல் கொண்டு செல்லப்படும்.

இதை எடுத்துச் செல்ல, தென்னந் தண்டுகளால் ஒரு தூக்கு செய்யப் படும்.முக்கோணம் செய்து, ஒவ்வொரு மூலைக்கும் தண்டு வைத்து, மூன்றையும் சேர்த்துப்பிடிப்பர்.

**6. பிரேத வண்டி**

இதுவும் புறப்பக்கமாகத் தொங்கவிட்ட மாவிலை, 3 மடிப்புகள் மட்டும் உள்ள தோரணம் ஆகியவற்றாலும் வாழைக் கன்றுகளாலும் அலங்கரிக்கப்படும்.

உ

சிவமயம்

# திருவாசகச் சிறப்பு

1. *தொல்லை இரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி,*
*அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவாசகம் என்னுந் தேன்.*

# சிவ புராணம்

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க*

*வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க*
*புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க*
*கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க*
*சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க*

*ஈசன் அடி போற்றி, எந்தை அடிபோற்றி*
*தேசன் அடி போற்றி, சிவன் சேவடிபோற்றி*
*நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி*
*மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி*
*சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி*

*ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி*
*சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்*
*அவன் அருளாலே அவன்தாள் வணங்கி*
*சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை*
*முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்*

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா ஏழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதனே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்உணர்வே
போக்குக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியனைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**

## மரண வீடுகளில் ஓத வேண்டிய அதிமுக்கிய தேவார திருவாசகத் திருமுறைகள்

## திருநல்லம்

கொல்லத் தான்நம னார் தமர் வந்தக்கால்
இல்லத் தாச்செய்ய லாவதெ னேழைகாள்
நல்லத் தான் நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே. 1

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே. 2

பிணிகொள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகள் மேவிப் பயனில்லை பாவிகாள்,
அணுக வேண்டில் அரன்நெறி யாவது
நணுக நாதன் நகர்திரு நல்லமே. 3

தமக்கு நல்லது தம்உயிர் போயினால்,
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்,
உமைக்கு நல்லவன் தானுறை யும்பதி
நமக்கு நல்லது நல்லம் அடைவதே. 4

உரை தளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிடம் நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே. 5

அல்ல லாகஐம் பூதங்கள் ஆட்டினும்
வல்ல வாறு, சிவாய நமஎன்று,
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே. 6

மாத ராரொடு மக்களும் சுற்றமும்
பேதம் ஆகிப் பிரிவதன் முன்னமே,
நாதன் மேவிய நல்லம் நகர்தொழப்
போது மின்னெழு மின்புக லாகுமே. 7

வெம்மை யான வினைக்கடல் நீங்கிநீர்
செம்மை யாய சிவகதி சேரலாம்,
சும்மை யார்மலர் தூவித் தொழுமினோ
நம்மை யாளுடை யானிடம் நல்லமே. 8

கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்,
மாலும் மாமல ரானொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிடம் நல்லமே. 9

மல்லை மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லை யில்லொழித் தானுறை யும்பதி

நல்ல நல்லம் எனும்பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே. 10

## திருக்காட்டுப்பள்ளி

மாட்டுப் பள்ளி மகிழ்ந்துறை வீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு வீரிது
ஓட்டுப் பள்ளிவிட் டோட லுறாமுனம்
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. 1

மாட்டைத் தேடி மகிழ்ந்து நீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடு(ம்) நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. 2

தேனை வென்றசொல் லாளொடு செல்வமும்
ஊனை விட்டுயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதுங்காட் டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று நண்ணுமே. 3

அருத்த மும்மனை யாளொடு மக்களும்
பொருத்த மில்லைபொல் லாதது போக்கிடும்
கருத்தன் கண்ணுத லண்ணல்காட் டுப்பள்ளித்
திருத்தன் சேவடி யைச்சென்று சேர்மினே. 4

சுற்ற முந்துணை யும்மனை வாழ்க்கையும்
அற்ற போதணை யாரவ ரென்றென்றே
கற்ற வர்கள் கருதுங்காட் டுப்பள்ளிப்
பெற்ற மேறும் பிரானடி சேர்மினே. 5

அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமுந்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் தாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னார்க்கோர் உறுதுணை யாகுமே. 6

மெய்யின் மாசுடை யாருடல் மூடுவார்
பொய்யை மெய்யென்று புக்குடன் வீழன்மின்

கையில் மானுடை யான்காட்டுப் பள்ளியெம்
ஐயன் தன்னடி யேயடைந் துய்மினே. 7

வேலை வென்றகண் ணாரை விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்
காலை யேதொழுங் காட்டுப்பள் ளிய்யுறை
நீல கண்டனை நித்தல் நினைமினே. 8

இன்று ளார்நாளை யில்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓரா துழிதரு மூமர்காள்
அன்று வானர்க் காக விடமுண்ட
கண்ட னார்காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே. 9

எண்ணி லாஅரக் கன்மலை யேந்திட
எண்ணி நீண்முடி பத்து மிறுத்தவன்
கண்ணு ளார்கரு துங்காட்டுப் பள்ளியை
நண்ணு வாரவர் தம்வினை நாசமே. 10

## திருவருட் போக்கி

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நீழ லமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே. 1

விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரங் கேட்கும் வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே. 2

வந்திவ் வாறு வளைத்தெழு தூதுவர்
உந்தி யோடி நரகத் திடாமுனம்
அந்தி யின்னொளி தாங்கும்வாட் போக்கியார்
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரே. 3

கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே

ஆற்ற வும்மருள் செய்யும்வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே. 4

மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்
கூறி யூறி யுருகுமென் னுள்ளமே. 5

கான மோடிக் கடிதெழு தூதுவர்
தான மோடு தலைபிடி யாமுனம்
ஆனஞ் சாடி யுகந்தவாட் போக்கியார்
ஊன மில்லவர்க் குண்மையில் நிற்பரே. 6

பார்த்துப் பாசம் பிடித்தெழு தூதுவர்
கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை யடக்கும்வாட் போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே. 7

நாடி வந்து நமன்தமர் நல்லிருள்
கூடி வந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாட லுகந்தவாட் போக்கியை
வாடி யேத்தநம் வாட்டந் தவிருமே. 8

கட்ட றுத்துக் கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்
கிட்ட மாகி இணையடி யேத்துமே. 9

இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப தும்கரப் பாரவர் தங்கட்கே. 10

## கால பாசத் திருக்குறுந் தொகை.
## (சிவனடியார் பக்கல் செல்லாதீர் என்று இமய தூதுவருக்கு ஆணையிட்டருளுவது)

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே. 1

நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்குக்
கொடுக்கக் கொள்க வெனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீரிங்கு நீங்குமே. 2

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென் றாற்றுவார்
ஆர்க ளாகிலு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு நீங்குமே. 3

சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப் பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே. 4

இறையென் சொல்மற வேல்நமன் தூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறயை நீறணி வாரெதிர் செல்லலே. 5

வாம தேவன் வளநகர் வைகலும்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏம மும்புனை வாரெதிர் செல்லலே. 6

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீச னடியாரை

| | | | | |
|---|---|---|---|---|
| விடைகொ | ளூர்தியி | னானடி | யார்குழாம் | |
| புடைபு | காதுநீர் | போற்றியே | போமினே. | 7 |
| விச்சை | யாவதும் | வேட்கைமை | யாவதும் | |
| நிச்சல் | நீறணி | வாரை | நினைப்பதே | |
| அச்ச | மெய்தி | யருகணை | யாதுநீர் | |
| பிச்சை | புக்கவன் | அன்பரைப் | பேணுமே. | 8 |
| இன்னங் | கேண்மி | னிளம்பிறை | சூடிய | |
| மன்னன் | பாதம் | மனத்துட | னேத்துவார் | |
| மன்னும் | அஞ்செழுத் | தாகிய | மந்திரம் | |
| தன்னி | லொன்றுவல் | லாரையுஞ் | சாரலே. | 9 |
| மற்றுங் | கேண்மின் | மனப்பரிப் | பொன்றின்றிச் | |
| சுற்றும் | பூசிய | நீற்றொடு | கோவணம் | |
| ஒற்றை | யேறுடை | யானடி | யேயலால் | |
| பற்றொன் | றில்லிகள் | மேற்படை | போகலே. | 10 |
| அரக்க | னீரைந் | தலையுமோர் | தாளினால் | |
| நெருக்கி | யூன்றியிட் | டான்தமர் | நிற்கிலும் | |
| சுருக்கெ | னாதங்குப் | பேர்மின்கண் | மற்றுநீர் | |
| சுருக்கெ | னிற்சுட | ரான்கழல் | சூடுமே. | 11 |

## பொதுத் திருப்பதிகம்
## தனித் திருவிருக்குக்குறள்

**பண் கொல்லி**

| | |
|---|---|
| கல்லானீழல் | அல்லாத்தேவை |
| நல்லார்பேணார் | அல்லோநாமே. |
| கொன்றை சூடி | நின்ற தேவை |
| அன்றியொன்று | நன்றிலோமே. |
| கல்லா நெஞ்சின் | நில்லானீசன் |
| சொல்லாதாரோ | அல்லோநாமே |

கூற்றுதைத்த நீற்றினானைப்
போற்றுவார்கள் தோற்றினாரே.

காட்டுளாடும் பாட்டுளானை
நாட்டுளாரும் தேட்டுளாரே.

தக்கன் வேள்விப் பொக்கந்தீர்த்த
மிக்க தேவர் பக்கத் தோமே.

பெண்ணாணாய விண்ணோர் கோவை
நண்ணாதாரை எண்ணோ நாமே.

தூர்த்தன் வீரம் தீர்த்த கோவை
ஆத்தமாக ஏத்தினோமே.

பூவினானும் தாவினானும்
நாவினாலும் நோவினாரே.

மொட்டமணர் கட்டதேரர்
பிட்டர் சொல்லை விட்டுளோமே.

அந்தண்காழிப் பந்தன் சொல்லைச்
சிந்தை செய்வோர் உய்ந்துளோரே.

## திருக்கச்சியேகம்பம்

**பண் கொல்லி**

கருவார் கச்சித் திருவேகம்பத்
தொருவாவென்ன மருவாவினையே.

மதியார் கச்சி நதியே கம்பம்
விதியோலேத்தப் பதியாவாரே.

கலியார் கச்சி மலியே கம்பம்
பலியாற் போற்ற நலியாவினையே.

வரமார் கச்சிப் புரமே கம்பம்
பரவாவேத்த விரவா வினையே.

படமார் கச்சி
இடமே கம்பத்
துடையாயென்ன
அடையாவினையே.

நலமார் கச்சி
நிலமே கம்பம்
குலவா வேத்தக்
கலவா வினையே.

கரியின்னுரியன்
திருவே கம்பன்
பெரிய புரமூன்
றெரிசெய்தானே.

இலங்கையரசைத்
துலங்கவூன்றும்
நலங்கொள் கம்பன்
இலங்கு சரணே.

மறையோனரியும்
அறியாவனலன்
நெறியே கம்பம்
குறியாற்றொழுமே.

பறியாத் தேரர்
நெறியில் கச்சிச்
செறிகொள் கம்பம்
குறுகுவோமே.

கொச்சை வேந்தன்
கச்சிக் கம்பம்
மெச்சுஞ் சொல்லை
நச்சும் புகழே.

## பிற தேவாரங்கள்

ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேற்
காவுநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர் புனற்காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே. (7.48)

எந்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர்நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறு காற் றீமுட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்
திருவானைக் காவுடைய செல்வாவென்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல்கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே. (6.62)

எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே யெண்ணினல்லாற்
கண்ணிலேன் மற்றோர் களைகணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தாய்
ஒக்க வடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (6.99)

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்ஙனே போமாறேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே. (6.93)

ஐயினால் மிடறடைப்புண் டாக்கைவிட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ்சூடும்
ஐயனார்க் காளாகி அன்புமிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே. (6.61)

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோஎன்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே. (6.95)

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதார மெனீரே. (7.78)

தோற்றமுண்டேல் மரணமுண்டு துயரமனை வாழ்க்கை
மாற்றமுண்டேல் வஞ்சமுண்டு நெஞ்ச மனத்தீரே
நீற்றர்ஏற்றர் நீலகண்டர் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர்கோயில் எதிர்கொள் பாடியென்ப தடைவோமே. (7.7)

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான் கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. (3.49)

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே. (3.22)

## தனியன்கள்

நேற்றுள்ளார் இன்றுமாளா நின்றனர் அதனைக்கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன் வீணேகாலம்
ஆற்றிலேன் அகண்டானந்த அண்ணலே அளவில்மாயைச்
சேற்றிலே இன்னம்வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கு உன்னாதே - பருத்த தொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய் நரிகள் பேய் கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

ஊரெல் லாங்கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் முழ்கி நினைப்பொழிந் தார்களே.

# திரு பொற்சுண்ணம்

முத்து நல் தாமம், பூ மாலை, தூக்கி,
முளைக்குடம், தூபம், நல் தீபம், வைம்மின்
சத்தியும், சோமியும், பார்-மகளும்,
நா-மகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும், கௌரியும், பார்ப்பதியும்,
கங்கையும், வந்து கவரி கொண்மின்
அத்தன், ஐயாறன், அம்மானைப் பாடி,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 1

பூ இயல் வார் சடை எம்பிராற்கு,
பொன் திருச் சுண்ணம் இடிக்கவேண்டும்,
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள், வந்து, உடன் பாடுமின்கள்
கூவுமின், தொண்டர் புறம் நிலாமே
குனிமின், தொழுமின் எம் கோன், எம் கூத்தன்,
தேவியும் தானும் வந்து, எம்மை ஆள,
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும், நாமே 2

சுந்தர நீறு அணிந்து, மெழுகி,
தூய பொன் சிந்தி, நிதி பரப்பி,
இந்திரன் கற்பகம் நாட்டி, எங்கும்
எழில் சுடர் வைத்து, கொடி எடுமின்;
அந்தரர் கோன், அயன்-தன் பெருமான்,
ஆழியான் நாதன், நல் வேலன் தாதை,
எம் தரம் ஆள் உமையாள் கொழுநற்கு,
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 3

காசு அணிமின்கள், உலக்கை எல்லாம்
காம்பு அணிமின்கள், கறை உரலை
“நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக” என்று வாழ்த்தி,
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடி,
பாச வினையைப் பறித்து நின்று,
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 4

அறுகு எடுப்பார் அயனும், அரியும்
அன்றி, மற்று இந்திரனோடு, அமரர்,
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்,
நம்மில் பின்பு அல்லது, எடுக்க ஒட்டோம்
செறிவு உடை மும் மதில் எய்த வில்லி,
திரு ஏகம்பன், செம் பொன் கோயில் பாடி,
முறுவல் செவ் வாயினீர்! முக் கண் அப்பற்கு,
ஆடப், பொற்கண்ணம் இடித்தும், நாமே. 5

உலக்கை பல ஓச்சுவார் பெரியர்,
உலகம் எலாம் உரல் போதாது என்றே;
கலக்க அடியவர் வந்து நின்றார்,
காண உலகங்கள் போதாது என்றே;
நலக்க, அடியோமை ஆண்டுகொண்டு
நாள் மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி,
மகிழ்ந்து, பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 6

சூடகம், தோள் வளை, ஆர்ப்ப-ஆர்ப்ப,
தொண்டர்-குழாம் எழுந்து ஆர்ப்ப-ஆர்ப்ப,
நாடவர் நம்-தம்மை ஆர்ப்ப-ஆர்ப்ப
நாமும் அவர்-தம்மை ஆர்ப்ப-ஆர்ப்ப,
பாடகம் மெல் அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன், எங்கள் பராபரனுக்கு,
ஆடக மா மலை அன்ன கோவுக்கு,
ஆடப், பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 7

வாள் தடம் கண் மட மங்கை நல்லீர்
வரி வளை ஆர்ப்ப, வண் கொங்கை பொங்க,
தோள் திருமுண்டம் துதைந்து இலங்க,
“சோத்தம், பிரான்” என்று சொல்லிச் சொல்லி,
நாள் கொண்ட நாள் மலர்ப் பாதம் காட்டி,
நாயின் கடைப்பட்ட நம்மை, இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி,
ஆடப், பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 8

வையகம் எல்லாம் உரல்-அது ஆக,
மா மேரு என்னும் உலக்கை நாட்டி,
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி,
மேதகு தென்னன், பெருந்துறையான்,
செய்ய திருவடி பாடிப் பாடி,
செம்பொன் உலக்கை வலக் கை பற்றி,
ஐயன், அணி தில்லைவாணனுக்கே,
ஆடப், பொற்சுண்ணம் இடித்து, நாமே. 9

முத்து அணி கொங்கைகள் ஆட-ஆட
மொய் சூழல் வண்டு இனம் ஆட-ஆட
சித்தம் சிவனோடும் ஆட-ஆட
செம் கயற் கண் பனி ஆட-ஆட,
பித்து எம்பிரானோடும் ஆட-ஆட,
அத்தன் கருணையோடு ஆட்-ஆட,
ஆடப், பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 10

மாடு, நகை வாள் நிலா எறிப்ப,
வாய் திறந்து அம் பவளம் துடிப்ப,
பாடுமின், நம்-தம்மை ஆண்ட வாறும்,
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின், எம்பெருமானைத் தேடி,
சித்தம் களிப்ப, திகைத்து, தேறி,
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு,
ஆடப், பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 11

மை அமர் கண்டனை, வான நாடர்
மருந்தினை, மாணிக்கக் கூத்தன்-தன்னை,
ஐயனை, ஐயர் பிரானை, நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர்-தம் பொய்யினை, மெய்யர் மெய்யை;
போது அரிக் கண்-இணை, பொன் தொடித் தோள்,
பை அரவு அல்குல், மடந்தை-நல்லீர்
பாடிப், பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 12

மின் இடை, செம் துவர் வாய், கரும் கண்,
வெள் நகை, பண் அமர் மென் மொழியீர்
என்னுடை ஆர் அமுது, எங்கள் அப்பன்,
எம்பெருமான், இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன்,
தமையன், எம் ஐயன் தாள்கள் பாடி,
பொன்னுடைப் பூண் முலை மங்கை - நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும், நாமே. 13

சங்கம் அரற்ற, சிலம்பு ஒலிப்ப,
தாழ் குழல் சூழ்தரும் மாலை ஆட,
செம் கனி வாய் இதழும் துடிப்ப,
சேயிழையீர் சிவலோகம் பாடி,
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடை முடியான் கழற்கே,
பொங்கிய காதலின் கொங்கை பொங்க,
பொற் றிருச்சுண்ணம் இடித்தும், நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவை, பாகை
நாடற்கு அரிய நலத்தை, நந்தாத்
தேனை, பழச் சுவை ஆயினானை,
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை, பிறப்பு அறுத்து, ஆண்டுகொண்ட
கூத்தனை, நாத் தழும்பு ஏற வாழ்த்தி,
பானல் தடம் கண் மடந்தை-நல்லீர்,
பாடிப், பொற்சுண்ணம் இடித்தும், நாமே. 15

ஆவகை, நாமும் வந்து, அன்பர்-தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி, விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டு அறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சே வகம் ஏந்திய வெல் கொடியான்,
சிவபெருமான், புரம் செற்ற கொற்றச்
சேவகன், நாமங்கள் பாடிப் பாடி,
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும், நாமே. 16

தேன் அக மாமலர்க் கொன்றை பாடி,
    சிவபுரம் பாடி, திருச் சடைமேல்
வான்-அக மா மதிப் பிள்ளை பாடி,
    மால் விடை பாடி, வலக் கை ஏந்தும்
ஊண் அக மா மழு, சூலம், பாடி,
    உம்பரும் இம்பரும் உய்ய, அன்று,
போனகம் ஆக, நஞ்சு உண்டல் பாடி,
    பொற் றிருச் சுண்ணம் இடித்தும், நாமே. 17

அயன் தலை கொண்டு செண்டு-ஆடல் பாடி,
    அருக்கன் எயிறு பறித்தல் பாடி,
கயம்-தனைக் கொன்று, உரி போர்த்தல் பாடி,
    காலனைக் காலால் உதைத்தல் பாடி,
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி,
    ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயம்-தனைப் பாடிநின்று, ஆடி-ஆடி,
    நாதற்கு, சுண்ணம் இடித்தும் நாமே. 18

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி,
    மத்தமும் பாடி, மதியும் பாடி,
சிட்டர்கள் வாழும் தென் தில்லை பாடி,
    சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடி,
கட்டிய மாசுணக் கச்சை பாடி,
    கங்கணம் பாடி, கவித்த கைம்மேல்
இட்டுநின்று ஆடும் அரவம் பாடி,
    ஈசற்கு, சுண்ணம் இடித்தும், நாமே. 19

வேதமும், வேள்வியும், ஆயினார்க்கு;
    மெய்ம்மையும், பொய்ம்மையும், ஆயினார்க்கு;
சோதியும் ஆய், இருள் ஆயினார்க்கு;
    துன்பமும் ஆய், இன்பம் ஆயினார்க்கு;
பந்தமும் ஆய், வீடும் ஆயினார்க்கு;
    ஆதியும், அந்தமும், ஆயினார்க்கு;
ஆடப், பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 20

## வாழாப் பத்து

பாரொடு, விண்ணாய், பரந்த எம் பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஆரொடு நோகேன் ? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?
ஆண்ட நீ அருளிலையானால்,
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள் புரியாயே. *1*

வம்பனேன்-தன்னை ஆண்ட மா மணியே
மற்று நான் பற்று இலேன் கண்டாய்;
உம்பரும் அறியா ஒருவனே! இருவர்க்கு
உணர்வு இறந்து, உலகம் ஊடுருவும்
செம் பெருமானே சிவ புரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எம்பெருமானே என்னை ஆள்வானே
என்னை, நீ கூவிக்கொண்டருளே *2*

பாடி, மால் புகழும் பாதமே அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
தேடி, நீ ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஊடுவது உன்னோடு; உவப்பதும் உன்னை,
உணர்த்துவது உனக்கு, எனக்கு உறுதி;
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
"வருக" என்று, அருள் புரியாயே. *3*

வல்லை வாள் அரக்கர் புரம் எரித்தானே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
தில்லை வாழ் கூத்தா சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எல்லை மூவுலகும் உருவி, அன்று, இருவர்
காணும் நாள், ஆதி, ஈறு, இன்மை

வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்;
‘வருக” என்று, அருள்புரியாயே. 4

பண்ணின் நேர் மொழியாள் பங்க நீ அல்லால்;
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
திண்ணமே ஆண்டாய்; சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எண்ணமே, உடல், வாய், மூக்கொடு, செவி, கண்,
என்று இவை நின்கணே வைத்து,
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்;
“வருக” என்று, அருள்புரியாயே. 5

பஞ்சின் மெல் அடியாள் பங்க நீ அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
செஞ்செவே ஆண்டாய்; சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டு, நீ அளித்த
அருளினை, மருளினால் மறந்த
வஞ்சனேன், இங்கு வாழ்கிலேன் கண்டாய்;
“வருக” என்று, அருள்புரியாயே. 6

பருதி வாழ் ஒளியாய் பாதமே அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
திரு உயர் கோலச் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்து, உளம் உருகிக்
கலந்து, நான் வாழுமாறு அறியா
மருளனேன், உலகில் வாழ்கிலேன் கண்டாய்;
“வருக” என்று, அருள்புரியாயே. 7

பந்து அணை விரலாள் பங்க நீ அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செம் தழல் போல்வாய், சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அந்தம் இல் அமுதே அரும் பெரும் பொருளே
ஆர் அமுதே அடியேனை

வந்து உய, ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்;
　　“வருக” என்று, அருள்புரியாயே. 8

பாவநாசா, உன் பாதமே அல்லால்,
　　பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேவர்-தம் தேவே, சிவபுரத்து அரசே
　　திருப்பெருந்துறை உறை சிவனே
மூவுலகு உருவ, இருவர் கீழ் மேலாய்,
　　முழங்கு அழலாய் நிமிர்ந்தானே
மா உரியானே! வாழ்கிலேன் கண்டாய்;
　　“வருக” என்று, அருள்புரியாயே. 9

பழுது இல் தொல் புகழாள் பங்க நீ அல்லால்,
　　பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
செழு மதி அணிந்தாய், சிவபுரத்து அரசே
　　திருப்பெருந்துறை உறை சிவனே
தொழுவனோ பிறரை ? துதிப்பனோ? எனக்கு ஓர்
　　துணை என நினைவனோ? சொல்லாய்
மழ விடையானே வாழ்கிலேன் கண்டாய்;
　　“வருக” என்று, அருள்புரியாயே. 10

## அடைக்கலப் பத்து

செழுக் கமலத் திரள் அன, நின்
　　சேவடி சேர்ந்து அமைந்த
பழுத்த மனத்து அடியர் உடன்
　　போயினர்; யான், பாவியேன்;
புழுக்கள் உடைப் புன் குரம்பை,
　　பொல்லாக், கல்வி-ஞானம் இலா,
அழுக்கு மனத்து அடியேன்
　　உடையாய் உன் அடைக்காலமே. 1

வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை,
　　நின் பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே

பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளால்,
என் பிறவியை வேர்
அறுப்பவனேஉடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 2

பெரும் பெருமான், என் பிறவியை
வேர் அறுத்து, பெரும் பிச்சுத்
தரும் பெருமான், சதுரப் பெருமான்,
என் மனத்தின் உள்ளே
வரும் பெருமான், மலரோன், நெடுமால்,
அறியாமல் நின்ற
அரும் பெருமான் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 3

பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில்
நின் கழற் புணை கொண்டு,
இழிகின்ற அன்பர்கள் ஏறினர், வான்
யான், இடர்க் கடல்வாய்ச்
சுழி சென்று, மாதர்த் திரை பொர,
காமச் சுறவு எறிய,
அழிகின்றனன்; உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 4

சுருள் புரி கூழையர் சூழலில் பட்டு,
உன் திறம் மறந்து, இங்கு,
இருள் புரி யாக்கையிலே கிடந்து,
எய்த்தனன் மைத் தடம் கண்
வெருள் புரி மான் அன்ன நோக்கி-தன் பங்க,
விண்ணோர் பெருமான்,
அருள் புரியாய்; உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 5

மாழை, மைப் பாவிய கண்ணியர் வன்
மத்து இட, உடைந்து,
தாழியைப் பாவு தயிர் போல்,

தளர்ந்தேன்; தட மலத் தாள்
வாழி! எப்போது வந்து, எந் நாள்,
வணங்குவன் வல் வினையேன் ?
ஆழி அப்பா உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 6

மின் கணினார், நுடங்கும் இடையார்,
வெகுளி வலையில் அகப்பட்டுப்
புன் கணன் ஆய், புரள்வேனை,
புரளாமல் புகுந்து அருளி,
என்கணிலே அமுது ஊறி, தித்தித்து,
என் பிழைக்கு இரங்கும்
அம் கணனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 7

மா வடு வகிர் அன்ன கண்ணி பங்கா
நின் மலர் அடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்
நின் குறிப்பு அறியேன்,
பா இடை ஆடு குழல் போல், கரந்து,
பரந்தது, உள்ளம்.
ஆ! கெடுவேன்; உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 8

பிறிவு அறியா அன்பர், நின் அருள்
பெய் கழல் தாள்-இணைக் கீழ்
மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார்;
உன்னை வந்திப்பது ஓர்
நெறி அறியேன்; நின்னையே அறியேன்;
நின்னையே அறியும்
அறிவு அறியேன்; உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 9

வழங்குகின்றாய்க்கு உன் அருள் ஆர்
அமுதத்தை வாரிக்கொண்டு,
விழுங்குகின்றேன்; விக்கினேன் வினையேன்,

என் விதி இன்மையால்;
தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர்
பருகத் தந்து, உய்யக் கொள்வாய்;
அழுங்குகின்றேன்; உடையாய்
அடியேன் உன் அடைக்கமே. 10

## யாத்திரைப் பத்து

**[திருப் பொற்சுண்ணம் பாடியபின் தேவாரம், புராணம் ஓதி தொடர்ந்து யாத்திரைப் பத்து ஓத வேண்டும்]**

பூ ஆர் சென்னி மன்னன், எம்
புயங்கப் பெருமான், சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து, உணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்,
"ஆ! ஆ!" என்னப் பட்டு, அன்பாய்
ஆட்பட்டீர், வந்து ஒருப்படுமின்
போவோம்; காலம் வந்தது காண்;
பொய் விட்டு, உடையான் கழல் புகவே. 1

புகவே வேண்டாம் புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூங் கழல்கள்
மிகவே நினைமின்; மிக்க எல்லாம்
வேண்டா; போக விடுமின்கள்;
நகவே, ஞாலத்து உள் புகுந்து,
நாயே அனைய நமை ஆண்ட,
தகவே உடையான்-தனைச் சாரத்
தளராது இருப்பார் தாம்-தாமே. 2

தாமே தமக்குச் சுற்றமும்,
தாமே தமக்கு விதி வகையும்;
யாம் ஆர்? எமது ஆர்? பாசம் ஆர்?
என்ன மாயம்? இவை போக,
கோமான் பண்டைத் தொண்டரோடும்,
அவன்-தன் குறிப்பே குறிக்கொண்டு,

போம் ஆறு அமைமின் - பொய் நீக்கி,
    புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே. 3

அடியார் ஆனிர் எல்லீரும்,
    அகலவிடுமின் விளையாட்டை;
கடி சேர் அடியே வந்து அடைந்து,
    கடைக்கொண்டு இருமின் திருக் குறிப்பை;
செடி சேர் உடலைச் செல நீக்கி,
    சிவலோகத்தே நமை வைப்பான்
பொடி சேர் மேனிப் புயங்கன்-தன்,
    பூ ஆர் சுழற்கே புகவிடுமே. 4

விடுமின் வெகுளி, வேட்கை நோய்;
    மிகவே, காலம் இனி இல்லை;
உடையான் அடிக்கீழ், பெரும் சாத்தோடு
    உடன் போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம், நாம் போய்ச் சிவபுரத்துள்,
    அணி ஆர் கதவு-அது அடையாளமே;
புடைபட்டு உருகிப் போற்றுவோம்,
    புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

புகழ்மின்; தொழுமின்; பூப் புனைமின்;
    புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு,
இகழ்மின் எல்லா அல்லலையும்;
    இனி, ஓர் இடையூறு அடையாமே,
திகழும் சீர் ஆர் சிவபுரத்துச்
    சென்று, சிவன் தாள் வணங்கி, நாம்
நிகழும் அடியார் முன் சென்று,
    நெஞ்சம் உருகி, நிற்போமே. 6

நிற்பார் நிற்க; நில்லா உலகில்
    நில்லோம் இனி, நாம் செல்வோமே,
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
    புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே
நிற்பீர் எல்லாம், தாழாதே,
    நிற்கும் பரிசே, ஒருப்படுமின்

*பிற்பால் நின்று பேழ்கணித்தால்,*
*பெறுதற்கு அரியன், பெருமானே.* 7


*பெருமான் பேரானந் தத்துப்*
*பிரியாது இருக்கப் பெற்றீர்காள்,*
*அரு மால் உற்றுப் பின்னை நீர்,*
*அம்மா! அழுங்கி அரற்றாதே,*
*திரு மா மணி சேர் திருக் கதவம்*
*திறந்தபோதே, சிவபுரத்து,*
*திருமால் அறியாத் திருப் புயங்கன்*
*திருத் தாள் சென்று சேர்வோமே.* 8

*சேரக் கருதி, சிந்தனையைத்*
*திருந்த வைத்து, சிந்திமின்;*
*போரிற் பொலியும் வேற் கண்ணாள்*
*பங்கன், புயங்கன், அருள் அமுதம்*
*ஆரப் பருகி, ஆராத*
*ஆர்வம் கூர, அழுந்துவீர்*
*போரப் புரிமின் சிவன் கழற்கே,*
*பொய்யில் கிடந்து புரளாதே.* 9

*புரள்வார், தொழுவார், புகழ்வாராய்;*
*இன்றே வந்து, ஆள் ஆகாதீர்,*
*மருள்வீர் பின்னை, மதிப்பார் ஆர்?*
*மதியுள் கலங்கி, மயங்குவீர்,*
*தெருள்வீர் ஆகில், இது செய்மின்;*
*சிவலோகக் கோன், திருப்புயங்கன்*
*அருள் ஆர் பெறுவார், அகல் இடத்தே?*
*அந்தோ! அந்தோ! அந்தோவே!* 10


## வரைபடம் 1 : கிரியா மண்டபம்

## Diagram 1 : Outline of the Kiriyaa Mandapam




| பட விளக்கம் | Key to Diagram |
|---|---|
| *1.* உரல் | 1. Ural |
| *1a.* உலக்கை | 1a. Ulakkai |
| *2.* கொள்ளிக்குடம் | 2. Kollik Kudam |
| *3.* குத்து விளக்கு | 3. Kutthu Vilakku |
| *4.* புண்ணிய வாசன கும்பம் | 4. Punniya vaasana Kumpam |
| *5.* ஹோம குண்டம் | 5. Hoama Kundam |
| *6.* குருக்கள் | 6. Kurukkal |
| *7.* ஈசான கும்பம் | 7. Eesaana Kumpam |
| *8.* குபேர கும்பம் | 8. Kupaera Kumpam |
| *9.* வாயு கும்பம் | 9. Vaayu Kumpam |
| *10.* வருண கும்பம் | 10. Varuna Kumpam |
| *11.* நிருதி கும்பம் | 11. Niruthi Kumpam |
| *12.* யம கும்பம் | 12. Yama Kumpam |
| *13.* அக்கினி கும்பம் | 13. Agni Kumpam |
| *14.* இந்திர கும்பம் | 14. Inthira Kumpam |
| *15.* தேவி கும்பம் | 15. Devi Kumpam |
| *16.* சிவ கும்பம் | 16. Siva Kumpam |
| *17.* கர்த்தா | 17. Kartthaa |
| *18.* அபிஷேகப் பொருட்கள் | 18. Materials for Abishaeham |
| *19.* இளநீர் *(3)* | 19. Ilaneer (3) |

## வரைபடம் 2 : அந்தியேட்டி மண்டபம்
## Diagram 2 : Outline of the Anthiyaedti Mandapam





### பட விளக்கம்

1. திரிசூலம்
2. கதம் (கதை)
3. துவஜம்
4. பாசம்
5. கட்கம்
6. தண்டம்
7. சக்தி
8. வஜ்ரம்
9. சக்கரம்
10. பத்மம்
11. யாகேஸ்வரர்
    யாகேஸ்வரி
12. ஹோமம்
13. பஞ்சசூரண மண்டபம்

### Key to Diagram

1. Thiri Soolam
2. Katham
3. Thuvajam
4. Paasam
5. Kadgam
6. Thandam
7. Sakthi
8. Vajram
9. Cakkaram
10. Pathmam
11. Yaagaesvarar
    Yaagaesvari
12. Hoamam
13. Panchasoorana Mandapam


# அபிராமி அந்தாதி



கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

**அபிராமி பட்டர்**

# வம்ச விருட்சம்




* அமரர்களைக் குறிக்கும்



# நன்றி என்ற வரிசையில்...

*06.04.2024 சனிக்கிழமை அன்று இயற்கை எய்திய எமது அம்மா* **அமரர் திலகவதி குணரெத்தினம்** *அவர்களின் மரணச்செய்தி அறிந்து ஒடோடி வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கு நிகழ்விலும் அந்தியேட்டிக்கிருத்திய, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டோருக்கும், மற்றையோருக்கும், நாம் ஆழ்ந்த துயரத்தில் இருந்த நாட்களில் உணவு வழங்கி, ஆறுதல் வார்த்தைகள் கூறிய உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர்வளையம், பதாகை அமைத்து வெளியிட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசியிலும் சமூக வலைத்தளங்களின் மூலம் அனுதாபத்தைத் தெரிவித்த உறவுகளுக்கும் நட்புகளுக்கும் இம்மலரை ஆக்க ஆலோசனை வழங்கியவர்களுக்கும், சிறப்புற அமைத்துத்தந்த நியூ எவகிறீன் அச்சகத்தினருக்கும், எமது குடும்பத்தின் சார்பாக மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*நன்றி!*

**குடும்பத்தினர்.**



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது,
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –